735

குண்டூசி

நவம்பர் : எட்டு அணா.

SCANNED

1950௵ ஜனவரி௴ 14௳ பொங்கல் ரிலீஸ்


சினிமா வானிலே புதிய நட்சத்திரம் !
நாட்டியமணி
வைஜயந்திமாலா
ஏவி எம் புரொடக்‌ஷன்ஸ்
வாழ்க்கை
தமிழ்
வாழ்க்கையின் மேடு பள்ளங்களைச்
சித்தரிக்கும் ஒரு அற்புத சிருஷ்டி.
விரைவில்
வருகிறது
OFFICE OF THE REGISTRAR OF B
12 DEC 1949
MADRAS
AVM
புரொடக்‌ஷன்ஸ்
G.H.RAO

உங்களுக்குத் தேவையான எல்லாவித ஜவுளி
களுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்

MEERANS

மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னுட்டிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில்
ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள்
இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

மற்றும் ட்விட்கள், உல்லன், வெளி நாட்டு ஜவுளிகள்
முதலிய எல்லாம் கைவசமுள்ளன.

எஸ். மீராசாகிப்
அண்ட் பிரதர்ஸ்

38, ஈவ்னிங் பஸார் ரோடு & 19, கிடங்கு தெரு, சென்னை.

குடந்தையில் பிரசித்திபெற்ற
காட்சிசாலை

தாங்கள்
ஒரு முறை
நேரில் விஜயம்
செய்யுங்கள்
*
உங்கள் மனதிற்கு
இன்பத்தைக்
கொடுக்கக் கூடிய

பம்பாய் தேவி தயாள்
கம்பெனியார் தயார் செய்யும்
"ஸ்டேபிரைட்"
பாத்திரங்களும்

சிறந்த R. C. A.
ரேடியோக்களும்,
பிட்டிபேன் பாட்டரி செட்
ரேடியோக்களும்

எங்களிடம் உள்ளன.

R. D. S. ராஜன் அண்டு சன்ஸ்
136, பெரியதெரு . . . . கும்பகோணம்

இந்த ஊசியில்

நவம்பர் 1949. பட்டை 3. ஊசி 2.

—::—

தெலுங்கும், தமிழும்	...	தலையங்கம்	5
பரஸ்பரம்	...	...	6
உள்ளது உள்ளபடி	...	ஜடாயு	7
கட்டழகி!	...	ஹாஸ்யப் படம்	9
எம். ஜி. ராமச்சந்திரன்	...	வாழ்க்கை வர்ணனை	10
எம். ஜி. ராமச்சந்திரன்	...	ஆர்ட் படம்	17
லலிதா-பத்மினி	...	வர்ணப் படம்	18
மறைந்த ரகஸியம்	...	சிறு கதை	19
குண்டூசியைக் கேளுங்கள்	...	பதில்கள்	23
செய்திப் படங்கள்	...	படங்கள்	31
நுனிப்புல்	...	வெட்டுக் கிளி	39
பொதுஜனம் பேசுகிறார்	...	நேயர் கடிதங்கள்	45
கே. வரலக்ஷ்மி	...	வர்ணப் படம்	51
பானுமதி	...	ஆர்ட் படம்	52
இது செய்தி	...	படச் செய்திகள்	53
இந்திய நடனங்கள்	...	மிருணாளினி சாராபாய்	58
அபூர்வ சகோதரர்கள்	...	பட விமர்சனம்	61
பிரம்மலோகம்	...	ஸ்டூடியோச் செய்திகள்	63
புஸ்தகப் பொழுது	...	புஸ்தக விமர்சனம்	64
குண்டூசி டைரி	...	திரைக் குறிப்புகள்	68

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை	... ரூ.	6
பர்மா, மலாயா, முதலிய வெளிநாடுகள்	... ரூ.	9

தனிப் பிரதி: இந்தியா—8 அணு: இலங்கை—50 சதம்.

வெளிநாடு—அணு 12.

குண்டூசி காரியாலயம்

25 கிடங்குத் தெரு, டெலிபோன்:

சென்னை-1 4316

தயாராகிறது

குண்டூசி கேலண்டர் 1950

★

ஆறு பிரபல சினிமா நக்ஷத்திரங்களின் அழகிய வர்ணப் படங்கள் - உயர்த்த ஆர்ட் காகிதத்தில் அச்சிடப் பெற்றது. மொத்தம் ஆறு தாள்கள் கொண்டது.

உங்கள் ஊர் 'குண்டூசி' ஏஜண்டுகளிடம் மட்டுமே கிடைக்கும்

ஸைஸ் 14" × 9"

விலை அணா 8

★

[12 அணா அனுப்புவோருக்கு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பி வைக்கப்படும். சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப்படமாட்டாது.]

குண்டூசி காரியாலயம
25, கிடங்குத் தெரு :: சென்னை-1

உயர்ந்த கருத்துக்களடங்கிய கதைகள் காவியங்கள், நாடகங்கள் முதலியவைகளைச் சிறந்த நடிகர்களைக் கொண்டு நிறம்ப நடிக்கச் செய்து எடுத்த தத்ரூபமான புகைப்படங்களுடன், சினிமாப் பகுதி, ஸ்டுடியோச் செய்திகள், பட விமர்சனம், மற்றும் படப் போட்டி, **பகுத்தறிவுப் போட்டி** முதலியவைகளும் வெளியாகின்றன.

★

உள்நாடு வருஷசந்தா ரூ 6. தனிப்பிரதி அணா 8
வெளிநாடு ,, ரூ 7-8-0 ,, அணா 10

நியூஸ் ஏஜண்டுகள் வேண்டிய பிரதிகளுக்கு உடனே எழுதவும்.

"பார்வதி"

போன்: 8172. மவுண்ட் ரோட் போஸ்ட் ஆபீஸ் எதிரில், மதராஸ் 2.

குண்டூசி

பட்டை-3 | நவம்பர்
ஊசி-2 | 1949

ஆசிரியர். பி. ஆர். எஸ். கோபால்.

நிகரற்ற விநியோகமுள்ள | சினிமா மாத வெளியீடு

தெலுங்கும், தமிழும்

சென்னை மாஹாணத்திலிருந்து ஆந்திராவைத் தனிமாஹாணமாகப் பிரித்து விடலாம் என்று அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்து விட்டது.

தமிழ் மாஹாணம், தமிழ் மொழி அபிவிருத்தி, தமிழ்க்கலை அபிவிருத்தி இதுபற்றியெல்லாம் தமிழ் நாட்டில் கிளர்ச்சிகள் நடந்து வருகின்றன. ஆனல், மஹாண, பாஷா வித்தியாசங்களும், பிரிவினை மனப்பான்மையும் சினிமா உலகத்தில் கிடையாது. சொல்லப்போனல் இதர பாஷையினருக்கும் இதர மாஹாணத்தவருக்கும் தான் தமிழ்ப்பட உலகில் மதிப்பு.

உதாரணமாக, நம் தமிழ்ப் படக் கதாநாயகிகளைக் கவனிப்போம். தற்போது தமிழ்ப்பட உலகில் பிரபலமாகியுள்ள கண்ணம்பா, பானுமதி, அஞ்சலி தேவி, ராஜம்மா, வரலக்ஷ்மி, வசுந்தரா, புஷ்பவல்லி, சூர்யப்ரபா, ஜெயம்மா, மாலதி, சாந்தகுமாரி, கிருஷ்ணவேணி, சூர்யகுமாரி, பால சரஸ்வதி, ஆகியோரெல்லாம் பிற பாஷைகளைத் தாய்பாஷையாகக் கொண்டவர்கள். ராஜகுமாரி, மாதுரி தேவி, பி. எஸ். சரோஜா போன்ற சொற்பப் பேர்களே அசல் தமிழ் நடிகைகள். இது மிக வெட்கக்கேடான நிலைமையல்லவா?

ஆந்திரமாஹாணம் பிரிக்கப்பட்டால் ஆந்திர நடிகைகளும் தமிழ்ப்பட உலகிலிருந்து விலகி விடுவார்களோ என்ற பயம் அவசியமற்றது. ஏனென்ருல், அந்த நடிகைகளுக்கு தெலுங்குப் படங்களைக் காட்டிலும் தமிழ்ப் படங்களில்தான் பன்மடங்கு அதிக மதிப்பும் வருமானமும் இருந்து வருகிறது. ஆதலால் நாம் போகச் சொன்னல் கூட அவர்கள் போகமாட்டார்கள்.

எமக்கென்னவோ, கலை சம்பந்தப்பட்டவரையில் ஜாதி, மத, மாஹாண, பாஷா வித்தியாசங்கள் கிடையாது. மற்றவர்களும் இவ்வித்தியாசங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது தான். இருப்பினும், இதுபோல பூராப் பூராவும் பிற பாஷை நடிகைகளுக்கு அதிக சந்தர்ப்பம் அளிப்பதும், அசல் தமிழ் கதாநாயகிகளுக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்காததும் விரும்பத்தக்க விஷயமேயல்ல. ஏன்? அசல் தமிழ் நடிகைகளுக்கு கதாநாயகிகளாக நடிக்க அருகதையில்லையா?

'தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகு' என்ற பழமொழிப்படி, நம் படமுதலாளிகள் பிற பாஷை நடிகைகளுக்கு பிரமாதமான மதிப்பு அளித்து, அவர்களுக்கு போட்டியின் பேரில் ஏராளமான பணத்தையும் கொட்டிக் கொடுக்கிறார்கள். சரி, செய்யட்டும். ஆனல் அவர்கள் அசல் தமிழ் நடிகைகள் விஷயத்திலும் இதே போல நடந்து கொள்ளாததேன் என்றுதான் கேட்கிறோம்.

பரஸ்பரம்

நேயர்களும், நானும் பரஸ்பரம் பேசி சில் மாதங்களாகி விட்டன. நிச்சயம், இந்த ஊசியில் இப்பகுதி இருக்கும் என்றே நீங்கள் எதிர்பார்த்திருப்பீர்கள். உண்மையில், குண்டூசி தீபாவளி மலர் வெற்றியைப் பற்றித்தெரிந்து கொள்ள உங்களுக்கு மிகுந்த ஆவல் இருக்கத்தானே செய்யும்.

நீங்கள், "மலர் விஷயம் எப்படி?" என்று கேட்பதற்கு முன்னதாகவே என் வாயிலிருந்து, "மல்ர் வெற்றி" என்ற வார்த்தைகள் நழுவி வந்துவிட்டன. நிஜமாகவே இந்த வருஷ மலர் ஒரு பிரமாதமான வெற்றிதான். உங்கள் ஊரில் மலர் கிடைக்காமல் அநேகர் தவித்ததைப் பார்த்திலிருந்தே இதைத் தெரிந்து கொண்டிருப்பீர்களே!

முதல் மலரை விட இரண்டாவது மலர் கண்ணைக் கவரும்படியாக இருக்கும் என்று முன்பு எழுதினேன். அந்த உறுதியை சாத்தியமானவரையில் நிறைவேற்றியிருப்பதாகவே நான் எண்ணுகிறேன்.

மலருக்கு மிகுந்த கிராக்கியிருப்பதாய் காட்டிக் கொள்வதற்காக குறைந்த எண்ணிக்கையில் பிரதிகளை அச்சிட்டு விட்டு,ஏஜண்டுகள் விஷயத்தில் "ரேஷன் முறை"யை அனுஷ்டிக்க வில்லை. ஒவ்வொரு ஏஜண்டிற்கும், எவ்வளவு மலர்களுக்கு ஆர்டர் செய்தார்களோ அவ்வளவு மலர்களை அனுப்பியிருக்கிறோம்.

குண்டூசியின் கும்பகோணம் ஏஜண்டு தம் சப் ஏஜண்டுகளின் கையொப்பமிட்ட பாராட்டுக் கடிதமொன்றை (அவர்களின் விருப்பப்படி) எமக்கு அனுப்பியிருக்கிறார். அதில், குண்டூசி மலர் தாங்கள் கேட்ட அளவுக்கு வினியோகிக்கப் பட்டதற்காகத் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இதே போல ஒவ்வொரு ஊர் ஏஜண்டும், சப் ஏஜண்டுகளும் சந்தோஷம் அடைந்திருப்பர்.

"குண்டூசி சாதாரண இதழ் இலங்கைத் தீவில் எவ்வளவு பிரதிகள் விற்பனையாகின்றனவோ அவ்வளவு பிரதிகள் மலரையும் விற்றிருக்கிறேன். வேறு பத்திரிகைகளின் மலர்கள் இவ்விதம் விற்பனையானதில்லை. விற்கவும் முடியாது" என்று குண்டூசியின் இலங்கை சோல் ஏஜண்டு பெருமையோடு தெரிவிக்கிறார்.

காரைக்குடியில் ஒரு அதிசயம் நிகழ்ந்ததாக அதை நேரில் பார்த்த நண்பர் கூறுகிறார். குண்டூசி மலர் அந்த ஸ்டேஷனை அடைந்து, கட்டுப் பிரிக்கப்பட்ட மறுகணமே, ரயிலின் ஒரு கம்பார்ட்மென்டிலிருந்த அத்தனை பேரும் (சுமார் ஐம்பது பேர்கள்) ஆளுக்கொரு மலரை வாங்கிக்கொண்டார்களாம்!

"தஞ்சாவூரில் குண்டூசி மலர் நிகழ்த்திய அற்புதத்தை என்னவென்று சொல்வது?" என்று ஒரு நேயர் வர்ணிக்கிறார். இன்னும் இதுபோல அநேக ஏஜண்டுகளும், நேயர்களும் மலரைப் புகழ்ந்து எழுதியுள்ளார்கள். அவர்களுக்கெல்லாம் என் வந்தனங்கள் உரித்தாகும்.

"நீங்கள் இந்த மாதிரி மார்க்கெட்டைக் கெடுப்பது சரியல்ல. உங்களுக்கு அதிக லாபமில்லாததோடு மற்ற சினிமாப் பத்திரிகைகளின் பாடும் கஷ்டமாகி விடுகிறது" என்று ஒரு சகோதரப் பத்திரிகையின் முதலாளி கூறினார். அவர் கூறியது உண்மையே. மலரின் தயாரிப்புச் செலவுகள் ஏராளமாக உயர்ந்துபோயிருப்பதைக் கணக்கிட்ட பின்னரே அவர் இப்படிக் கேட்டார்.

ஆனால், மார்க்கெட் கெட்டுப்போவதைப்பற்றி எனக்கு கவலையில்லை. நேயர்கள் குண்டூசிமீது கொண்டுள்ள அபிமானம் கெட்டுப் போகாமல், மேலும் பன்மடங்காக அதிகரிக்க வேண்டும் என்பதே என்னுடைய நோக்கமாகும்.

—ஆசிரியர்.

உள்ளது உள்ளபடி

"ஜடாயு"

இந்த மாதம் 7ந் தேதியன்று தென்னிந்திய பிலிம் சேம்பர் தலைவர் ஸ்ரீ. டி. ஆர். சுந்தரம், சென்னை பத்திரிகாசிரியர்களை அழைத்து ஒரு சிற்றுண்டி விருந்தளித்தார். சினிமாப் படங்களின் நீளத்தை 11,500 அடிக்குக் கட்டுப்படுத்த விரும்புவதாக இந்திய சர்க்கார் ஒரு உத்திரவை சமீபத்தில் வெளியிட்டதல்லவா? அதை ஆட்சேபித்து, தமிழ்ப் படங்களுக்கு அதிக நீளம் வேண்டுமென்று கேட்பதே இவ்விருந்துக் கூட்டத்தைக் கூட்டியதன் நோக்கமாகும்.

போதுமா போதாதா?

தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதற்கு பதினோராயிரம் அடி நீளம் பிலிம் போதுமா போதாதா என்ற விஷயம் சென்ற ஐந்தாறு வருஷங்களில் பத்திரிகைகள் மூலமும் பிரசங்கங்கள் மூலமும் பஞ்சுபஞ்சாய் அடிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் புதிதாய் பேசுவதற்கும், எழுதுவதற்கும் ஒன்றுமேயில்லை. இதனால்தான் அன்றையக்கூட்டத்தில் பேசப்பட்ட விஷயங்களும், பத்திரிகைக்காரர்களால் கேட்கப்பட்ட கேள்விகளும், சொல்லப்பட்ட பதில்களும் மிகப் பழைய விஷயங்களாகவே தோன்றின. அந்தப்பழைய விவாதத்தையே நானும் இங்கு எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

கலையா, தொழிலா?

சினிமாவை ஒரு உன்னதக் கலையாக கலாபிமானிகள் மதிக்கின்றனர். இந்தச் சிறந்த கலை மூலம் பிரசாரம் செய்து மக்களை முன்னேறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தைச் சர்க்காரும், தேச நலம் கருதுவோரும் கொண்டுள்ளனர். ஆனல் பட முதலாளிகளோ சினிமாவை ஏராளமான லாபம் சம்பாதிப்பதற்கான ஒரு தொழிலாக மட்டுமே கருதுகின்றனர். இதுவரை வார்த்தைகளால் சொல்லப்படாதிருந்த இந்த உண்மையை ஸ்ரீ. வாஸன் தைரியமாய், வெளிப்படையாய், சொல்லி விட்டார். பட முதலாளிகள் இந்த ஒரே நோக்கத்துடன் மட்டுமே படம் தயாரித்து வருவதால்தான் நம் படங்களின் தரம் வரவரக் குறைந்து போய்க்கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

பாதகம் ஏற்படுமா?

பட முதலாளிகளை அவர்கள் போக்கில் விடாமல், நீளத்தைக் கட்டுப்படுத்துவது அநியாயம் என்று டி. ஆர். சுந்தரம், எஸ். எஸ். வாஸன் ஆகியோர் எடுத்துக் கூறினர்கள். கிராமப்புற மக்கள் நீளப்படத்தையே விரும்புகிறர்கள் என்றும், படங்களின் வசூல் விஷயத்தில் கிராம மக்களின் ஆதரவைப் புறக்கணிக்க முடியாது என்றும் அவர்கள் கூறினர். சினிமாப் படங்களைத் தயாரித்து, கிராம மக்கள் அவைகளைப் பார்க்கும்படி செய்தவர்கள் படமுதலாளிகள். காலக்கிரமத்தில் நீளத்தை அதிகரித்துக் கொண்டே வந்தவர்களும் அவர்கள். ஆகவே, இப்பொழுது எல்லாப் படங்களின் நீளமும் குறைக்கப்பட்டு விட்டால் அந்த ஒரு காரணத்திற்காக கிராம மக்கள் படம் பார்ப்பதையே நிறுத்திக் கொள்வார்கள் என்றே, அதனல் வசூல் குறைந்து விடுமென்றே எனக்குத் தோன்றவில்லை. முன்பு நீளம் குறைக்கப்பட்ட போது அப்படி நடந்ததாகவும் காணோம். ஏதோ சில படங்களுக்கு வசூல் குறைந்து போயிருந்தால் அது நீளக் குறைவினல் தான் என்று சொல்லுவது தவருகும். பதினோராயிரம் அடிப் படங்களான ஹரிதாஸ், ஸ்ரீ வள்ளி, நாம் இருவர் போன்றவை

ஏராளமான பண வசூலை அளிக்க வில்லையா?

காரணம் என்ன?

நீளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, இறக்குமதிக் கஷ்டங்கள், மக்களின் சுகாதார விஷயம், இவ்விரண்டும் தான் காரணம் என்று சர்க்கார் முன்பு கூறினார்கள். வெத்து பிலிம் நிறைய இறக்குமதி செய்வதற்குக் கஷ்டமா யிருந்தால், இறக்குமதியாகும் பில்மை ரேஷன் செய்து கொடுக்கலாமே என்று ஸ்ரீ.வாஸன் கூறினார். ரேஷன் முறை அவ்வளவு திருப்திகரமானதல்ல. இதனால் பழைய பட முதலாளிகளுக்கு அதிக கஷ்டமிராது. ஆனால் சிறிய பட முதலாளிகளுக்கும், புதிதாய்ப் படம் எடுக்க வருபவர்களுக்கும் இது மிகுந்த தொல்லையா யிருக்கும்.

எல்லாக் கதவுகளும் மூடப்பட்ட தியேட்டரில் எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக அடைபட்டிருக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு கண்ணுக்கும், உடம்புக்கும் நல்லது. சர்க்கார் கூறும் இவ்விரு காரணங்களும் நியாயமாகவே தோன்றுகின்றன. எனவே சர்க்கார் நீளத்தைக் கட்டுப்படுத்த முற்பட்டதை நான் ஆதரிக்கவே செய்கிறேன்.

ஆனால்............?

எல்லா இந்தியப் படங்களின் நீளத்தையும் பதினோராயிரம் அடிக்குக் கட்டுப்படுத்துவதை நான் ஆதரிக்கவில்லை. சாதாரணமாகவே, தமிழ்ப் படங்கள் ஹிந்திப் படங்களை விட நீளமானவையாய் தயாரிக்கப்பட்டு வந்துள்ளன.

ஆதலால் இந்திய சர்க்கார் நீளத்தைக் குறைப்பதா யிருந்தால் விகிதாசாரப்படி குறைப்பதே நியாயமாகும். "தமிழ்ப் படங்களைப் பொறுத்த வரையில் 11,000 அடி நீளம் போதாது; குறைந்தது 13,500 அடி நீளமாவது கொடுக்கப்பட வேண்டியது அவசியம்" என்று முன்பே "குண்டூசி"யில் எழுதியிருக்கிறேன், அதையே இப்பொழுதும் ஊர்ஜிதம் செய்கிறேன்.

'எல்லாக் கதைகளையுமே குறைந்த நீளத்தில் தயாரிக்க முடியாது. சில கதைகளுக்கு அதிக நீளம் அவசியம்' என்று ஸ்ரீ. வாஸன் விளக்கினார். அவர் சொல்லுவதை அப்படியே ஒப்புக் கொள்ளுகிறேன். அவரே சில படங்களை நீளமாகவும், சிலவற்றைக் குறைத்தும் தயாரித்திருக்கிறார். ஆனால் மற்ற படமுதலாளிகளிடமும் இது போன்ற சுயநிர்ணயம் இருந்திருப்பின் இந்தக் கட்டுப்பாடு அநாவசியந்தான். அதற்கு மாறாக, பல படமுதலாளிகள் தம் படத்திற்கு நீளம் போதவில்லையே என்பதற்காக அவசியமில்லாத பகுதிகளைச் சேர்த்திருப்பது எனக்குத் தெரியும்.

ஆதலால் எந்தப் படத்திற்கு நீளம் அவசியம் என்று தீர்மானிக்கும் பொறுப்பை சர்க்காரிடம் விடுவதில் தவறில்லை. தமிழ்ப் படங்களுக்கு சாதாரணமாக 13,500 அடி நீளம் அநுமதிப்பதோடு, அவசியமான போது அதிக நீளமும் அநுமதிக்க வேண்டும். அவர்கள் இதுபோலச் செய்தார்களானால், அதிருப்தி அடைந்துள்ள தமிழ்ப்பட முதலாளிகள்கூட இக் கட்டுப்பாட்டை ஓரளவு திருப்தியோடு ஏற்றுக் கொள்ளுவார்கள்.

அரங்கேற்றம்

கும்பகோணத்திலுள்ள, இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டின் டைரெக்டர் டாக்டர் வி. ராமமூர்த்தியின் பெண் குமாரி. சாருபாலாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் அடுத்த மாதம் 5-ம் தேதி நடைபெறுமாம். கும்பகோணம் வாணி விலாஸ் சபையில் நடக்கப் போகும் இந்த அரங்கேற்றத்திக்கு ஸ்ரீ. ச. கிருஷ்ணய்யர் தலைமை வகிப்பாராம்.

ஸதர்ன் ஸ்டுடியோஸ்

டைரெக்டர் ஜோஸப்தளியத், சென்னை ஸதர்ன் ஸ்டுடியோஸை, நீண்ட கால குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

எனக்காக நீயும், உனக்காக நானும் இருக்கும் போது ஏன் இந்த வெட்கம்!..... கண்ணே..
ரதியோ, ரம்பையோ, ஊர்வசியோ, பஞ்ச உலோகத்தால் படைத்த பதுமையோ நீ......
நளின நடையும், துடிஇடையும், முல்லை சிரிப்பும்.... ஆஹா... உன்மோகன புன்னகையும்...
மான் விழி என்பார்களே..... அது உன்னைக் கண்டு தான். என் உடல் - பொருள் - ஆவி....
MAKE UP ROOM
!?!
இந்த கிழத்தையா இப்படி வர்ணித்தேன்...............??
அட ராமசந்திரா..!!!!....
பக்கர்

எம்.ஜி.ராமச்சந்திரன்

சங்கீதம் இருக்கிறதே அது சினிமா உலகத்தில் மிக்க மதிப்புடன் விளங்குகிறது. சங்கீதம் இல்லாத படம் இந்தியாவில் ஓடவே ஓடாது. இதனால் பாடத் தெரிந்த நடிக நடிகைகளுக்கே சினிமா உலகில் மிகுந்த கிராக்கி. அதே சமயத்தில் சங்கீதம் சினிமா உலகத்திற்கு பெரும் தீமைகளையும் செய்திருக்கிறது என்பதையும் சொல்லியாக வேண்டும். சங்கீதம் முக்கியத்துவம் வகிக்கத் தொடங்கிய தலை சினிமாப் படங்களில் நடிப்பிற்கு உரிய ஸ்தானம் கிடைக்கவில்லை. பாட மட்டும் தெரிந்தவர்களை வைத்துக் கொண்டு படமுதலாளிகள் தைரியமாய் படங்களைப் பிடித்திருக்கின்றனர். ஆனால், நல்ல நடிப்புத் திறமை, வசன சுத்தம், கவர்ச்சிகரமான தோற்றம் இவைகளைப்பெற்றிருந்தும், பாடத் தெரியாத குறையினால் அநேகர் உபநடிகர்களாகவே இருந்து, மங்கி, மறைந்திருக்கின்றனர்.

பின்னர் வந்தது குரல் இரவல் வாங்கும் வழக்கம். பாடத் தெரியாத பெண்களுக்கும் கதாநாயகி வேஷங்கள் கிடைக்கலாயின. அப்பொழுதும்கூட பாடத் தெரியாத ஆண்களின் விஷயம் மாறிவிடாமலிருந்தது. சமீப வருஷங்களில்தான் ஆண்களுக்குக் கூட குரல் இரவல் வாங்குவதற்குப் படமுதலாளிகள் முற்பட்டனர். அது முதலே எம். ஜி. ராமச்சந்திரன் போன்ற சிலருக்கு கதாநாயகர்கள் வேஷம் கிடைக்கத் தொடங்கியது.

வாழ்க்கை வர்ணனை

குஞ்சீ

சமீப வருஷங்களில்தான் எம்.ஜி. ராமச்சந்திரன் திரைப்படக் கதாநாயகன் ஆகியிருக்கிறார் என்றாலும் அவருக்கு சினிமா உலகத்தில் சுமார் பதினைந்து வருஷ கால அனுபவம் உண்டு.

ராமச்சந்திரனுக்குப் பாடத் தெரியாதென்று சொல்வது தவறு. இப்பொழுதுகூட அவர், பிரமாதமாய் இல்லையென்றாலும் சுமாராகப் பாடக் கூடியவர்தான். ஒரு காலத்தில் அவர் பாய்ஸ் கம்பெனி நடிகராய் இருந்தபோது பாட்டிலும் அவருக்கு நல்ல பெயர் இருந்து வந்ததாம். தொண்டை உடைந்து போன பின் அவர் சங்கீதத்தைப்பற்றி அசட்டைகொள்ள ஆரம்பித்து விட்டார். நடிப்பு விஷயத்திலேயே தம் பூரா கவனத்தையும் அவர் செலுத்த முற்பட்டார்

ராமச்சந்திரன் நாடகத் துறையில் ஈடுபட்டது அவசியத்தின் பேரில் தான். அப்பொழுது அவரது குடும்பத்தின் நிர்கதியான நிலைமையே அவரை நாடக உலகிற்குக் கொண்டு வந்து சேர்த்தது.

கொல்லங்கோட்டை அடுத்த வடவனூரைச் சேர்ந்தவர் ராமச்சந்திரன் அவர் 1916ம் வருஷம் ஜனவரி மாதம் 11ந் தேதியன்று மருதூர் கோபால மேனன், சத்யபாமா அம்மாள் ஆகியோரின் புத்திரராய் பிறந்தார். ராமச்சந்திரனுடன் பிறந்தவர்கள் ஒரு தமக்கையும். தமையனும் ஆவர். தமக்கை காலமாகிவிட்டார். தமையன் (எம். ஜி.) சக்ரபாணி மட்டும் இப்பொ

முது சினிமா உலகில் ஒரு பிரபல வில்லனைப் விளங்கி வருகிருர். மருதார் என்பது எம். ஜி. சகோதரர்களின் வீட்டுப் பெயர் ஆகும். அந்தக் காலத்தில் இந்தப் பெயர் மலையாளப் பக்கங்களில் செல்வாக்குள்ள ஒரு பணக்கார குடும்பத்தைக் குறிப்பிட்டு வந்தது. சுமார் 35 பேர்களடங்கிய அக் குடும்பத்தில் ஒருவர் தான் கோபால மேனன். இருஞாலக்குடா பக்கங்களில் அவர் ஒரு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டராகவும், கௌரவ மாஜிஸ்டிரேட்டாகவும் உத்தியோகம் பார்த்துவந்தார். மேனனுக்குத் திருமணம் ஆன சமயத்தில் மேற்படிக் குடும்பத்தாரிடையே மனஸ்தாபம் ஏற்பட்டது. அதன் விளைவாக சொத்துக்கள் பங்கு பிரிக்கப்பட்

—ன. அதுமுதல் இந்தக் குடும்பம் க்ஷீணதசையை அடைய ஆரம்பித்து விட்டது.

மேனனின் இல்லற வாழ்க்கை பல கஷ்டங்களிடையே ஆரம்பமாகியது. ஆனல் நல்ல சம்பாத்தியத்தில் உத்தியோகம் பார்த்து வந்ததால் அவர் கஷ்டங்களை ஒருவாறு சமாளித்துக் கொண்டார். ராமச்சந்திரன் பிறந்து இரண்டரை வருஷங்கள் ஆனபின் மேனன் காலமானார். பின்னர் அக்குடும்பம் ஆதரிப்பாரின்

றித் தவிக்கலாயிற்று. அவர்களது பரிதாப நிலைமையைக் கண்டு இரக்கம் கொண்டார் வேலு நாயர் என்ற ஒரு தூர பந்து. அவர் போலீஸ் உத்தியோகத்திலிருந்தார். அவரது பராமரிப்பில் அக் குடும்பம் இருந்து வரலாயிற்று.

ராமச்சந்திரனும் சக்ரபாணியும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டனர். ராமச்சந்திரன் மூன்றாவது வகுப்பிலும், சக்ரபாணி இரண்டாவது பாரத்திலும் 'பாஸ்' ஆனார்கள். அதற்குமேல் படிப்பதற்கு விடாமல் அவர்களது குடும்ப நிலைமை குறுக்கே நின்றது. அவர்கள் ஏதாவது தொழில் செய்து சம்பாதிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

வேலுநாயரின் நண்பரான நாராயண நாயர் அந்த சமயத்தில் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் பின்பாட்டுப் பாடுபவராயிருந்தார். நாராயண நாயரின் சிபார்சின் பேரில் ராமச்சந்திரன், சக்ரபாணி ஆகிய இருவரும் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் நடிகர்களாய்ச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

ராமச்சந்திரனுக்கு சிறு வயதிலேயே சங்கீதம் நாடகம் இவைகளில் பிரியம் ஏற்பட்டது. பள்ளிக்கூடத்தில் படித்து வந்தபோது அவர் அடிக்கடி பள்ளிக்கூட நாடகங்களில் நடிப்பதுண்டாம். அப்பொழுது நிகழ்ந்த ஒரு சம்பவம் மிகத் தமாஷானது.

ஒரு சமயம் அவரது பள்ளிக்கூடத்தில் 'லவ குசா' நாடகம் நடந்தது. அதில் அவருக்கு லவன் வேஷம் கொடுக்கப்பட்டது. 'லவனும் சத்ருக்னனும் சண்டை போடும் காட்சியில் தத்ரூபமாய் சண்டை போட வேண்டும்' என்று நாடகத்தை நடத்திய உபாத்தியாயர் எச்சரித்தார். மேலும், மணி சப்தம் கேட்டதும் அவர்கள் சண்டையிடுவதை நிறுத்திவிடவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

ராமச்சந்திரனுக்கும் சத்ருக்னன் வேஷம் தரித்த பையனுக்கும் உண்மையிலேயே மனஸ்தாபம் இருந்தது அந்த உபாத்தியாயருக்கு தெரியாது. நாடகத்தன்று அந்த இரு பையன்களும் தத்ரூபமாகவே சண்டையிட்டனர்! அந்த நிஜ சண்டை மும்முரத்தில் பையன்கள் தாங்கள் நாடகத்தில் நடிக்கும் விஷயத்தைக்கூட மறந்துவிட்டார்கள்! சண்டையை நிறுத்தும்படி உபாத்தியாயர் மணி அடித்ததும் அவர்கள் காதில் விழவில்லை. கடைசியில், அவர் கோபத்துடன் இருவர் முதுகிலும் கையால் 'படீர்' என்று அறை வைத்ததும்தான் அவர்

கள் சுய உணர்வைப் பெற்றனராம்!

ராமச்சந்திரன் சாதாரண நிலைமையிலேயே கம்பெனியில் போய்ச் சேர்ந்ததால் அவரை கவனிப்பார் யாருமில்லை. பல பையன்களிடையே ஒருவராகவே அவர் இருந்து வந்தார். ஏதோ கும்பலோடு கோவிந்தா போடும் வேஷங்களே அவருக்கு அளிக்கப்பட்டன. அவருக்கு அப்பொழுதெல்லாம் வாரத்திற்கு நாலணுதான் சம்பளம் கிடைத்ததாம்!

ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் அப்பொழுது ஸ்ரீராமுலு நாயுடு என்று ஒரு "நடன வாத்தியார்" இருந்தார். அவர் ஒரு ஈரமற்ற நெஞ்சினராம். பகல் வேளையில் அவர் "பாலபார்ட்"களுக்கு நடனம் கற்றுக் கொடுப்பது வழக்கமாம். ஜதிகள் தவறும்போது, அவர் பையன்களின் கணுக் கால்களில் ஒரு குச்சியினல் அடிப்பாராம். வலி தாங்க முடியாமற் போனாலும் பையன்கள் அழக்கூடாதாம். கீழே குனிந்து கால்களைத் தடவவும் கூடாதாம். அதை மீறினல் மேலும் உதை விழுமாம். அவ்வளவு கண்டிப்பு!

அடேயப்பா! ராமச்சந்திரனின் கணுக்கால்கள் இது மாதிரி எத்தனையோ அடிகளைத் தாங்கியிருக்கின்றன! அந்தக் கம்பெனியில் பக்கிரிசாமி என்பவர் காமெடியனக இருந்தார். அவரால் இந்தக் கண்ணுராவிகளைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. முதலாளியிடம் அப்பையன்களின் சார்பாக அவர் பறிந்து பேசி, இந்த "நடனக் கொடுமை"க்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கச் செய்தார். இன்னும் இதுபோல எத்தனையோ கஷ்டங்களை ராமச்சந்திரன் "பாலபார்ட்"டாக இருந்தபோது அநுபவிக்க வேண்டியிருந்ததாம்.

ராமச்சந்திரனுக்கு முதன் முதலில் குறிப்பிடத் தக்க தனி வேஷத்தை வாங்கிக் கொடுத்தவர் ஹாஸ்ய நடிகர்

காளி என். ரத்தினம்தான். அவரது சிபார்சின் பேரில் ராமச்சந்திரனுக்கு உத்திரன் வேஷம் கிடைத்தது. அந்த முதல் வேஷத்தல் அவர் வெற்றிபெற்ருர. அடுத்தபடியாக அவருக்கு அகஸ்தியரின் வேஷம கிடைத்தது. அந்த வேஷதாரர், கறடு முறடான தமிழ நடையில் நீண்ட ஒரு சம்பாஷணையைப் பேச வேண்டியருந்தது. ராமச்சந்திரன் அந்த வேஷத்தை தைரியமாய் ஏறறுக்கொண்டு நடிததாா. இந்த இரண்டாவது பரீக்ஷையிலும் அவர் வெற்றி பெறவே கம்பெனியில் அவருககு மதபபு வ௱படலாயறறு.

ராமா

அக்கம்பெனி புதுச்சேரியிலிருந்து காரைக்காலை அடைந்தது. நாடகங்களுக்கு வசூல் குறைவாக இருந்ததால பரபல பைரவ சுந்தரம் பிள்ளையைச் சேர்த்துக் கொண்டு ஸ்பெஷல் நாடகங்களை நடத்த ஆரம்பித்தனர். அப்பொழுது நிகழ்ந்த ஒரு தமாஷ் சமபவம ராமச்சந்திரனுககு மட்டுமென்ன, நமக்குக்கூடச் சிரிப்பை உண்டு பண்ணுகிறது. ஆறுமுகக் கடவுள் மயில் வாகனத்திலிருந்து கொண்டு தரிசனம் அளிக்கும் காடசி: பைரவ சுந்தரம் பிள்ளை கொஞ்சம் ஸ்தூல சரீரமுடையவராதலால்—அவரால் ஆறு தலைகளையும, பன்னிரண்டு கைகளையும் தூக்கிக்கொண்டு நடமாட முடியாது என்றதனல்—ஒரு பிரத்யேக ஏற்பாடு செயயப்பட்டது. அதன்படி ஐந்து தலைகளும் பத்துக் கைகளும் மயில் வாகனத்திலேயே ம்பாருத்தப் பட்டன. ஸ்ரீ. பிள்ளை வாகனத்தில் அமர்ந்ததும் திரை தூக்கப்பட்டது. ஆனல் ஸ்ரீ. பிள்ளை சில வார்த்தைகள் பேசியானதும், ஏற்பாட்டின்படி படுதா விடப்பட வில்லை. அவர் பொறுத்துப் பார்த்தார். பிறகு, "சபையோரே! நான் சொல்லுவதெல்லாம்: உங்கள் மனதில் படுதா ?...காலா காலத்தில் எதையும் செய்தாக வேண்டும் என்

பது உங்களுக்குத் தெரியப் படுதா? ......இல்லையென்றால் நான், 'படுதா, படுதா!' என்று கேட்டுக் கொண்டே போவதில் பயனில்லை என்பது உங்களுக்குப் புலப்படுதா?'' என்று, "படுதா" என்ற பதத்தை சாதுரியமாக நுழைத்துப் பேசிப் பார்த்தார். ஆனால் திரையோ விழவில்லை. அந்தப் படுதாக்காரனிடம் யாரும் இந்த பிரத்தியேக ஏற்பாட்டைப் பற்றி சொல்லி வைக்காமலிருந்தால் அவனுக் கெப்படித் தெரியும்? ஸ்ரீ. பிள்ளை மிகக் கோபம் அடைந்து, அந்த வேகத்தில் தன்னை மறந்தவராய், ஐந்து முகங்களையும், பத்து கைகளையும் மயில் வாகனத்திலேயே விட்டு விட்டு எழுந்து உள்ளே போய் விட்டார்! கொட்டகையில் ஒரே கேலிச் சிரிப்பு; ஆரவாரம்!

ராமச்சந்திரன், தமையன் சக்ரபாணி, பி. யு. சின்னப்பா ஆகியோர் அந்தக் காலத்திலேயே அத்யந்த நண்பர்களாகி விட்டார்கள். சின்னப்பா ராஜபார்ட் ஆனதும் அவருக்கு அடுத்த முக்கிய வேஷங்களிலும், அவருடன் ஸ்திரீ பார்ட்டாகவும் ராமச்சந்திரன் நடிக்கலானார்.

ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி பாலக்காட்டில் நாடகமாடிக் கொண்டிருந்தது. சின்னப்பா பாதுகா பட்டாபிஷேகத்தில் பரதன் வேஷத்தில் தோன்றி வந்தார். அந்த சமயத்தில் அவரது தாயார் இறந்ததால் சொந்த ஊருக்குப் போகவேண்டியதாயிற்று. அவர் திரும்பிவரும் வரையில் பரதன் வேஷத்தை நடிக்கும் சந்தர்ப்பம் ராமச்சந்திரனுக்கு அளிக்கப்பட்டது. அவர் அந்த வேஷத்தைக் கூடிய வரையில் நன்கு நடித்து, முதலாளிகளின் நன்மதிப்பைப் பெற்றார். மாயவரத்தில் ஒரு முறை அவர் பரதன் வேஷத்தில் தோன்றியதை காலஞ்சென்ற கிட்டப்பா பார்த்துவிட்டு, அவரை மிகப் பாராட்டினாராம்.

ராமச்சந்திரனுக்கு ஒரிஜினல் பாய்ஸில் மிகுந்த நன்மதிப்பு ஏற்பட்டிருந்த காலத்தில் அவரது தொண்டை தகராறு பண்ணத் தொடங்கியது. மேலும் அக்கம்பெனியில் இருந்தபடியே தமது கௌரவத்தை வரிசைக் கிரமமாய் இழக்க விரும்பவில்லை. ஆதலால் அவர் அக்கம்பெனியை விட்டு 1930-ம் வருஷத்தில் விலகி, ரங்கூனுக்கு நாடகமாடச் சென்றார்.

சில காலம் அங்கு நாடகம் ஆடிவிட்டு ராமச்சந்திரன் இந்தியா திரும்பியதும், ஒரிஜினல் பாய்ஸ் முதலாளி தம் கம்பெனிக்கே மீண்டும் வந்துவிடும்படி அழைத்தார். ராமச்சந்திரன் அதற்கிணங்கி அக்கம்பெனியில் சேர்ந்தார்.

தொண்டை உடைந்து போனதால் தாம் முன்போல் கதாநாயகன் வேஷங்களைச் சமாளித்துக் கொள்ள முடியாது என்பதை அவர் உணர்ந்தார். எனவே அவர் 'ஸ்டன்ட்'கள், சண்டைகள், முதலியவை அடங்கிய வேஷங்களில் கவனம் செலுத்தி நல்ல அநுபவமும், புகழும் பெற்றார்.

இந்த சமயத்தில், காலஞ்சென்ற எம். கந்தசாமி முதலியார் சதி-லீலாவதி படத் தயாரிப்புக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். ராமச்சந்திரனை ஒரு சினிமா நடிகராக்கிவைத்த பெருமை அவரையே சாரும். சதிலீலாவதி படத்தில் அவர் ராமச்சந்திரனுக்கு இன்ஸ்பெக்டர் வேஷத்தை வாங்கித் தந்தார். அது முதல் ராமச்சந்திரன் நாடக உலகை மறந்து சினிமா உலகில் பூரண கவனம் செலுத்த ஆரம்பித்தார்.

ராமச்சந்திரனுக்கு இரண்டாவது சந்தர்ப்பத்தை அளித்தது, கே. பி. கேசவன் நடித்த இரு சகோதரர்கள் படமாகும். அவருக்கு இப் படத்தில் ஒரு சிறிய வேஷமே அளிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அவர் குட்டி அல்லது வீர ஜகதீஷ் என்ற படத்தில் நடித்தார். இப்படம் பெரும் தோல்வியாக முடிந்தது.

[தொடர்ச்சி 66-ம் பக்கத்தில்]

மறைந்த ரகஸியம்

= ஸி. ஆர். ராஜம்மா =

சூரியன் அஸ்தமனமாகி அதிக நேரம் இருக்காது. ஆனாலும் நடு இரவு என்று எண்ணும்படி இருந்தது. 'சோ' என்ற பேரிரைச்சலுடன் காற்று பயங்கரமாக வீசிக்கொண்டிருந்தது. பங்களாவில் எங்கேயோ திறந்திருந்த ஜன்னல் கதவுகள் காற்றினால் 'படீர் படீர்' என்று மூடிக்கொண்டு சப்தம் செய்தது நன்றாக காதில் விழுந்தது. இடியும் மின்னலுமாக, அச்சத்தை விளைவிக்கும் அந்த இரவில், விளக்கடியில் ஏதோ யோசனை செய்து கொண்டு உட்கார்ந்திருந்தாள் நிர்மலா. அறையின் ஜன்னல் கதவுகள் எல்லாம் சாத்தியிருந்த போதிலும் அவைகளின் இடுக்கின் வழியாக புகுந்து வந்த பேய்க் காற்று தன்னுடைய ஆட்சியைச் செலுத்திக் கொண்டிருந்தது. அந்தக் காற்றைப் போலத்தான் அவள் மனமும் எங்கெல்லாமோ கட்டுக்கடங்காமல் அலைந்தது. எந்த விஷயங்களில் எல்லாமோ மோதி சஞ்சலம் அடைந்து கொண்டிருந்தது.

கடந்துபோன அவள் வாழ்க்கையின் பல சம்பவங்கள், சலனப் படம் போல் அவள் மனத்திரையில் வந்து போய்க் கொண்டிருந்தன. "உணர்ச்சியுடன் நடிக்கக் கூடிய சினிமா நக்ஷத்திரம்" என்று ரஸிகர்களால் இப்பொழுது போற்றப்பட்டு வரும் அவள் ஒரு காலத்தில் எவ்வளவு எளியவளாய், எல்லோராலும் இகழப்படும் பெண்ணாய் திக்கற்று நின்றாள்? 'தன்னை யாராவது ஆதரிக்கமாட்டார்களா' என்று எண்ணி ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த காலமும் ஒன்று அவளுடைய வாழ்வில் கடந்து விட்டது. அவைகளையெல்லாம் இப்பொழுது சிந்தித்தால்கூட அவளுக்கு மெய்ச் சிலிர்ப்பேற்படும்.

இப்பொழுது அவள் ஒரு சிறந்த நடிகை. அவளுக்கு சேவை செய்ய, அவள் தயவை வேண்டி நிற்பவர்கள் எத்தனையோ பேர்கள். அவள் நடித்த படம் ஒவ்வொரு தியேட்டரிலும் எத்தனை வாரங்கள் ஓடின என்று கணக்கிட்டுச் சொல்லுவதே கடினம். நிர்மலாவை அன்று நேரில் காண வெறுத்தவர்கள் இன்று அவள் நடித்த படத்தைக் காண ஆவலுடன் ஓடி வருகிறார்கள். அவள் இதை எல்லாம் எண்ணியபோது மெள்ள வாய்க்குள்ளாகவே சிரித்துக் கொண்டாள்.

* * *

இயற்கைக்கே இருப்பிடமோ என்று சொல்லும்படியாக அமைந்த பொன்மேட்டில் பிறந்து வளர்ந்தவள் கல்யாணி. இயற்கை உரம் உள்ள பயிர் போல வளர்ந்து, கண்கவரும் கட்டழகியாக இருந்தாள். பருவகால முதற்படியில் கால் எடுத்து வைத்திருந்த அவளுக்கு வரன் பார்க்க வேண்டும் என்ற தொந்திரவே இல்லை. இந்த விஷயத்தினால் கல்யாணியின் தந்தை அடைந்த பெருமைக்கு அளவே கிடையாது. ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணு என்று அருமையாக வளர்க்கப்பட்டவள் கல்யாணி. அவள் பிறந்த உடனேயே சந்துருதான் அவள் கணவன் என்று நிச்சயம் செய்து விட்டார்கள் பெரியவர்கள். சந்துரு கல்யாணியின் அத்தான் என்று இதிலிருந்தே அவர்கள் உறவை ஒருவாறு நிச்சயம் செய்து கொள்ளலாம். சந்துருவும்தான் சிறுபிராயம் முதலே கல்யாணியிடத்தில் எவ்வளவு அன்புடன் நடந்து கொண்டிருக்கிறான்! எவ்வளவோ சுதந்திரத்துடன் நடந்துகொண்டு அந்த எண்ணத்தை ஸ்திரப்படுத்தி யிருக்கிறான். அவர்கள் இருவரும் துள்ளித் திரிந்து, ஓடிப்பிடித்து விளையாடிய அந்தக் காலம் தான் எவ்வளவு இன்பமயமான நாட்கள்!

நிர்மலாவின் சிந்தனைப் பறவை மேன் மேலும் சிறகவிழ்த்துக் கொண்டு பறந்தது.

காலம் கல்யாணியை பருவ மங்கையாக மாற்றியது. சந்துரு அப்பொழுது பட்டணவாசியாக இருந்தான். கலாசாலையில் படித்துப் பட்டம் பெறும் மோகத்தில் அவன் கல்யாணியின் மேலுள்ள மோகத்தை ஓரளவு மாற்றிக் கொள்ள வேண்டியதாக இருந்தது. அவளைப் பிரிந்து இருந்தது அவனுக்கு

முதலில் கஷ்டமாகத் தோன்றினாலும், நாளடைவில் அது அவனுக்கு சகஜமாகி விட்டது. பிற்காலத்தில் தாங்கள் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த படிப்பும், பட்டமும் மிகமிக அத்தியாவசியமானது என்பதை அறிந்து கொண்டிருந்தான் அவன்.

சந்துருவின் கலாசாலை நண்பனான பாஸ்கரன்; நவநாகரீகப்பேர்வழி. சந்துருவும் அவனும் இணைபிரியாத நண்பர்கள். பாஸ்கரன் கவர்ச்சிகரமான பேச்சினால் எல்லோரையும் சுலபமாக நண்பர்களாக்கிக் கொண்டு விடுவான். சதா சிரிக்கச் சிரிக்கப் பேசிக்கொண்டிருக்கும் சுபாவம் உள்ளவன். ஒரு விடுமுறையின் போது சந்துரு பொன்மேட்டிற்கு அவனையும் கூட அழைத்து வந்தான். பல மாதங்களுக்குப் பிறகு நண்பனுடன் தன் காதலி கல்யாணியைச் சந்திக்கப்போவதில் அளவற்ற பெருமிதம் கொண்டான் அவன்.

நாட்டுப்புறத்துப் பெண்தான் கல்யாணி என்றாலும் சந்துருவைக் கண்டவுடன் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி ஒளியவில்லை. நவநாகரீக பெண்களைப் போல் அவனைத் தனிமையில் சந்தித்து, கதையில் வரும் கவிகளின் காதல் மொழிகளைக் கடகடவென்று சொல்லவுமில்லை. எல்லோரிடமும் பேசுவதைக் காட்டிலும் தனிப்பட்ட வாஞ்சையுடன் சந்துருவிடம் பேசினாள்; சிரித்தாள். பாஸ்கர் முன்னிலையில் கூட அவனைப் பரிகாசம் செய்தாள். தாங்கள் சிறுவர்களாக இருந்த சமயம் நடந்த சாதாரண சம்பவங்களையும், தனக்கும் அவனுக்கு மிடையே உண்டான சண்டைகளையும் சொல்லிச் சொல்லி சிரித்தாள். தான் எதிர் பார்த்ததைவிட எல்லா வகையிலும் கல்யாணி முன்னேற்றம் அடைந்திருப்பதைக் கண்ட சந்துருவுக்கு சற்று தற்பெருமையாகவே இருந்தது.

சந்துருவை மகிழ்விப்பதிலேயே கல்யாணியும் கவனம் செலுத்தினாள். பாஸ்கரனுடன் வித்தியாசமின்றி தான் கலகலப்பாகப் பேசுவது அவனுக்கு சந்தோஷத்தை அளிக்கிறது என்பதை அவள் கண்டு கொண்டாள். ஆதலால் அவள் அவனிடம் அதிக நெருக்கமாகப் பழகினாள். அவனுடைய பேச்சுகளை மிகவும் ரஸித்தாள். அவள் உள்ளத்தை உண்மையிலேயே கவர்ந்துவிட்டான் பாஸ்கரன்.

அவர்களின் கல்யாணமும் நிச்சயிக்கப்பட்டது. அவன் மனம் கல்யாணியின் எழிலில் மயங்கி அவள் வசப்பட்டு விட்டது. அவளுடன் தனிமையில் தங்கள் பிற்கால வாழ்வைப் பற்றி திட்டங்கள் வகுப்பதில் அவன் எவ்வளவோ இன்பத்தைக் கண்டான். அவனது இன்பத்தை விரும்பியவள் தானே கல்யாணியும்! தன் உடலும் உயிரும் அவனுடையது தான் என்பதை நிச்சயப்படுத்தினாள். ஆனால் நாளடைவில் அவனுடைய அன்பில் சந்தேகம் என்ற நஞ்சு கலந்து விடும் என்பதை, பாவம் அந்தப் பேதைப் பெண் கண்டாளா?

கல்யாணம் நடைபெற சில நாட்களே இருந்தன. அதற்குள் சந்துருவுக்கு சென்னைக்குப் போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது. பரீக்ஷையில் தேறியதோடல்லாமல் அங்கேயே ஒரு பத்திரிகையில் உதவி ஆசிரியனாக வேலை ஏற்கும்படியும் இருந்தது. இந்த சம்பவம் எல்லோரையும் கல்யாணி அதிர்ஷ்ட

சாலி, என்று சொல்லும்படியாக இருந்தது. இது எந்தப் பெண்ணுக்குத்தான் மகிழ்ச்சியை உண்டாக்காமல் இருக்கும்? பாஸ்கரும், சந்துருவும் பொன்மேட்டை விட்டுப் புறப்பட்டபொழுது கல்யாணியின் மனதில் துன்பம் அதிகமாக இருந்ததா? இன்பம் அதிகமாக இருந்ததா என்று சொல்ல முடியாதபடி இருந்தது.

* * *

நிர்மலாவின் சிந்தனை சற்றே தடைப்பட்டது. நீண்டதொரு பெருமூச்செறிந்தாள் அவள். வெளியே மழை இன்னும அப்படியேதான் பெய்துகொண்டிருந்தது. அவள் சிந்தனை தொடர்ந்து மேலே சென்றது.

வேலையை ஏற்றுக்கொண்டு சில தினங்களில் திரும்புவதாகக் கூறிச்சென்ற சந்துருவின் வரவை எதிர் நோக்கி எதிர் நோக்கி கண்கள் பூத்துப் போயிற்று கல்யாணிக்கு. மழைக்காக ஏங்கும் குடியானவனைப் போல் அவன் வரவை எதிர் நோக்கினாள் அவள். ஆனால் என்ன ஏமாற்றம்? அவன் வராமல் போனதுடன், தனக்குக் கல்யாணியை மணக்க சம்மதமில்லை என்ற செய்தியையும் அறிவித்து விட்டான். இந்த பயங்கரமான செய்தியைக் காட்டிலும் இன்னொரு பயங்கரம் அவளை எதிர் நோககி இருந்தது. அதுதான் அவள் காப்பவதியாக இருந்தது,

சந்துருவை எந்தப் பட்டணவாசத்து மோகினியும் கவர்ந்துவிடவில்லை. காரணம் அவன் மனதில் கல்யாணியைப் பற்றிய தப்பபிப்பிராயம் தலைதூக்கி நின்றது தான்! தன் நண்பன் பாஸ்கரிடம் அவள் நடந்துகொண்ட விதம் அவனது உள்ளத்தில் அசூயையை மூட்டியது. சென்னை வந்தபிறகும் கூட பாஸ்கரன் அடிக்கடி கல்யாணியின் குணாதிசயங்களையும், அழகையும் பற்றி வர்ணித்தது அவனது சந்தேகம் என்ற தீக்கு நெய் வார்ப்பது போல் இருந்தது. பாஸ்கரனைப் பற்றி பேச்சு எடுத்தால் கல்யாணி தான் எவ்வளவு ஆனந்தம் அடைந்தாள். இதையெல்லாம் எண்ணிப் பார்த்த சந்துருவுக்கு கல்யாணியைப் பற்றி நினைக்கும் போது வேம்பாக இருந்ததில் வியப்பில்லை!

சந்துருவுக்கு திடீரென்று தன் மீது ஏற்பட்ட வெறுப்புக்குக் காரணம் என்ன என்பதைகல்யாணி வெகு நாட்களுக்குப் பிறகு தான் தெரிந்து கொண்டாள். பாஸ்கரனை அவள் நேசித்தது என்னவோ உண்மைதான். ஆனால் அது எத்தகைய அன்பு? ஒரு சகோதரர்க்கு சகோதரனிடம் ஏற்படும் அன்பைப் போன்றது அல்லவா அது? இதை சந்துரு புரிந்து கொள்ள முடியாததை எண்ணிய போது அவளுக்கு அவன் மேல் ஆத்திரம்தான் வந்தது. பொன்மேட்டு கிராமம் அவளைப் பற்றிக் கூறிய பழிச் சொற்களை சுமந்து கொண்டு அங்கு தங்கியிருக்க அவள் மனம் இடங்கொடுக்க வில்லை. பெற்ற தாயும் தந்தையும் கூட அல்லவா அவளை கடினமான வார்த்தைகளால் துன்பப் படுத்தினார்கள்! இனிமேல் யாருக்காக வேண்டி அவள் பொன்மேட்டில் வாழவேண்டும்!

பொன்மேட்டை விட்டு வெளியேறி தற்கொலை செய்து கொள்வது என்ற நோக்கம் தான் அவளுக்கு இருந்தது. ஆனால் தன்போன்றவர்கள தற்கொலை செய்து கொள்ளுவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்பதையும் அவள் விரைவிலேயே கண்டு கொண்டாள். பாஸ்கரனின் கபடமற்ற உள்ளம் தனக்கு ஆதரவளிக்கும் என்று நம்பினாள் கல்யாணி. அவனை அணுகினாள், அந்தப் பழைய சகோதர அன்புடன் தான். அப்பொழுது தான் அவள் பாஸ்கரனைப் பற்றி நன்றாக அறிந்து கொள்ள முடிந்தது. அவனுக்கு அழகிய ஒரு மனைவி இருந்தாள். உருவத்தில் மட்டும் அவள் அழகி அல்ல. குணத்திலும் கூடத்தான். கல்யாணியிடம அவளுக்கு அளவு கடந்த பச்சாத்தாபம் ஏற்பட்டது. தங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய அந்த தம்பதிகள் பின் வாங்கவில்லை. தன்னை லக்ஷியம் செய்யாத நண்பன் சந்துருவிடம் போய் அவளுக்காக மன்றாடினான். நடையாக நடந்தும் சந்துருவின் மனம் கல்லாகவே இருந்தது. ஆனால் என்ன முயன்றும் அவளுக்கு தகுந்த உதவி செய்ய முடியவில்லை அவர்களால். சுமாரான படிப்புள்ள கல்யாணி சுயமாக சம்பாதித்து கௌரவமாக வாழ எண்ணினாள். தன் போன்றவர்களுக்கு எட்டாக்கனி அது என்று நாளடைவில்தான் அவள் தெரிந்து கொண்டாள்.

* * *

நாட்கள் சென்றன. கல்யாணிஒருபெண் குழந்தைக்குத் தாயாகி இருந்தாள். சாதாரணமானதுதான் பாஸ்கரனுடைய குடும்பம். அவர்களுக்கு தானும் தன் குழந்தையும் பெரும் சுமையாக இருப்பது போல் தோன்றியது கல்யாணிக்கு. மேலும் தான் எல்லோராலும் நிராகரிக்கப் பட்டவள்; பழிக்காரி. அவர்களுடனேயே இருந்தால் அந்த தம்பதிகளின் தூய வாழ்விலும் மாசு ஏற்படும் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தாள். ஆகவே அவர்களைவிட்டு எப்படி —

[தொடர்ச்சி 49-ம் பக்கத்தில்]

குண்டூசியைக் கேளுங்கள்

அர்த்தநாரி (மேட்டூர் அணை)

தமிழ் நாட்டில் நடிப்பு, பேச்சு, பாட்டு, இம் மூன்றிலும் பொது ஜன ஆதரவு பெற்ற நடிகர் யார் யார்?

பாகவதர், சின்னப்பா, மஹாலிங்கம், நாகய்யா, இந்த நால்வரையும் கூறலாம்.

பி. என். வாசுதேவன் (திண்டுக்கல்)

நவஜீவனம் படத்தின் டைரெக்டர் யார்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்கவும்,

" நவஜீவன "த்தை டைரெக்ட் செய்தவர் கே. பி. நாகபூஷணம் C/o ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸ், உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை. 17 — என்பது அவரது விலாஸம்.

கே. சுப்ரமண்யம் (பங்களூர்)

பி. எஸ். கோவிந்தன் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவரது விலாஸம் என்ன?

திடீரென்று தோன்றுவதும் திடீரென மறைவதும் இந்தப் " புலிக்குட்டி " யின் மிக சகஜமான குணமாகும்! " போஜன் " படத்திற்குப் பிறகு அஞ்ஞாதவாசத்திலீடுபட்டிருக்கும் கோவிந்தன் திடீரென்று மீண்டும் சினிமா உலகில் பிரவேசித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. விலாஸம் தெரியாது.

கே. எஸ். அப்துல் ஹமீது (தைப்பீங், மலாயா)

டி. ஆர். ராஜகுமாரியை டி. ஆர். மஹாலிங்கம் கத்தியால் குத்தியதாகவும், குத்துண்ட ராஜகுமாரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்டு அங்கு இறந்து விட்டதாகவும் மலாயா நாட்டில் பலத்த வதந்தி இருந்து வருகிறது. இந்த வதந்தி எவ்வளவு தூரம் உண்மை என்பதைத் தெரிவிக்கவும்.

இந்த வதந்தி கொஞ்சமகூட நிஜக் கலப்பில்லாத பொய்யாகும். ராஜகுமாரியும், மஹாலிங்கமும் " இதய கீதம் " படத்தில் இப்பொழுது நடித்து வருகின்றனர். அவர்களிடையே மனஸ்தாபம் எதுவுமே கிடையாது. நான் ஆச்சரியப்படுவதெல்லாம், இவ்வித அபாண்டமான பொய் வதந்தி எப்படிக் கிளம்பியது என்றுதான்.

பரணியின் ''லைலா மஜ்னு'' தெலுங்கு, தமிழ் ஆகிய இரு படங்களிலும் கதாநாயகனாக நடிக்கும் நாகேஸ்வர ராவ்.

௮



(பொன்முடி) — சிறு வயதில் விளையாட்டாகத் தாலி கட்டப் பழகி...

எஸ் சுப்ரமண்யம் (மலாயா)

மஹாலிங்கத்திற்கு விவாஹம் ஆகி விட்டதா?

ஆகிவிட்டது. கூடிய சீக்கிரத்தில் அவர் இரண்டாவது குழந்தைக்குத் தகப்பனர் ஆகப்போகிருர்.

ஆர். என். ராமசாமி (மண்ணகுடி)

என். ஸி. வஸந்த கோகிலம் ஏன் ஹரிதாஸிற்குப் பிறகு வேறு எந்தப் படத்திலுமே நடிக்கவில்லை?

நன்ருய்ச் சொன்னீரே! அவர் அதன் பின் ''வால்மீகி''யில் நாரதராய் நடித்தாரே? கூடிய சீக்கிரம் வெளிவரப் போகும் ''கிருஷ்ண விஜய''த்திலும் அவர் நாரதராய் நடித்திருக்கிருர்.

எஸ். ஜகன்னுதன் (சிகந்தராபாத்)

அஞ்சலி தேவியின் தாய் பாஷை எது? அவருக்குத் தமிழ் தெரியுமா?

அவருக்குத் தெரிந்த அளவு தமிழை படங்களில் பேசிவருவதை நீர் கவனிக்கவில்லையா? அவரது தாய் பாஷை மட்டுமல்ல, தகப்பனரது பாஷைகூட தெலுங்குதான்!

தீ. செ. இராமசாமி (மேச்சேரி)

பி. யு. சின்னப்பாவுக்கு ''நடிக நாயகன்'', ''வசன வாருதி'', ''இசை இறை'' ஆகிய மூன்று பட்டங்களில் ஒன்றைச் சூட்ட விரும்புகிருன் என் நண்பன். உம் அபிப்ராயம் என்ன?

என் அபிப்பிராயத்திற்கு இடமேது? ஆனல், சின்னப்பா பட்டங்களை வெறுப்பவர் என்பது உம் நண்பருக்குத் தெரியவில்லை என்பது நன்கு தெரிகிறது.

எச். வி. கோவிந்தசாமி (ஹாஸன்)

பணக்காரர்களைப் பழிக்கும் சில படங்களின் முதலாளிகள் ஏழைகளா? அல்லது ஏழைகள் மீது அநுதாபம் கொண்டவர்களா?

இரண்டுமில்லை. பணக்காரர்களைப் பழித்து, தாமே பணக்காரர்கள் ஆகப் பார்க்கிருர்கள் அவர்கள். அதுதான் உண்மை!

...பிற்காலத்தில் நிஜமாகவே தம்பதிகளாகின்றனர் (பொன்முடி)

ஏ. கே. நாராயணன் (கொல்லங்கோடு)

"குண்டூசி"யில் இதுவரை எத்தனை நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வர்ணனை வெளிவந்திருக்கிறது?

இந்த மாதம் வெளிவருவது இருபத்தி எட்டாவது நக்ஷத்திரத்தின் வாழ்க்கை வர்ணனையாகும்.

எம். பி. பக்கீர் (திண்டுக்கல்)

கன்னியின் காதலியில் மாதுரி தேவி ஆதித்தனாக நடிக்கையில் அவருக்குக் குரல் இரவல் கொடுத்திருப்பவர் யார்?

பாட்டிற்கு திருச்சி எம். லோகநாதனும், பேச்சிற்கு ('மிஸ் மாலினி' புகழ்) கோபாலகிருஷ்ணனும் குரல் இரவல் தந்துள்ளனர்.

ஏ. தேவராஜன் (மதுரை)

டி. ஆர். ராஜகுமாரியின் சகோதரருக்கு திருமணம் நடந்தேறியதை அறிந்தேன். ஆனால் அவர் மட்டும் ஏன் திருமணம் செய்து கொள்ளாமலே இருந்து வருகிறார்?

விவாஹம் என்பது ஒருவரது சொந்த விஷயமாகும். உம் கேள்விக்கு, எனக்குப்பதில், ராஜகுமாரி வேண்டுமானால் சரியான பதில் அளிக்கக் கூடும்.

எஸ். முருகேசன் (உளுந்தூர்பேட்டை)

பி. எஸ். கோவிந்தன், டி. ஆர். மஹாலிங்கம் இவர்களிருவரது முகத்தோற்றத்திலும் ஒற்றுமை காணப்படுகிறதே. இவர்களை அண்ணன் தம்பிகளாக ஏதேனும் படத்தில் நடிக்கச் செய்யலாமல்லவா?

முகச்சாயலில் ஒற்றுமை காணப்படுகிறதே தவிர அதிர்ஷ்டப் போக்கில் மிகுந்த வேற்றுமை காணப்படுகிறதே!

எஸ், ஏ. முருகேசன்
(கூலுகிளாங், மலாயா)

சினிமா நடிகைகள் சாதாரண மனிதர்களை மணம் செய்து கொள்ள மாட்டார்களா?

அவர்கள், சாதாரணமாக, "மனிதர்களை" மணம் செய்து கொள்வதற்கு விரும்ப மாட்டார்கள்.

மல்லிகார்ஜுன் (அசிகேரா)

வி. என். ஜானகிக்கு பெற்றோர் இருக்கின்றனரா? அவரது சொந்த ஊர் எது?

பெற்றோர் இருக்கின்றனர். சொந்த ஊர் வைக்கம்.

போ. ராஜமாணிக்கம் (பீனங்கு)

என். எஸ். கிருஷ்ணன், காளி என். ரத்தினம், காபெடியன் சாரங்கபாணி, புளி மூட்டை இந்த நால்வருள் யாருக்கு ஹாஸ்யத்தில் முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

பொதுஜன ஆதரவைப் பார்த்தால் கிருஷ்ணனுக்கு முதல் ஸ்தானமும், சிறந்த ஹாஸ்யம் என்று பார்த்தால் சாரங்கபாணிக்கும் முதல் ஸ்தானமும் அளிக்கலாம்.

ஈ. ராஜாமணி (பம்பாய்)

இப்பொழுது மாதத்திற்கு பத்துப் பனிரண்டு பத்திரிகைகள் விதம் புதிது புதிதாய்த் தோன்றி வருகின்றனவே? தற்போது காகிதம் மிக மலிவாய் கிடைக்கிறதோ?

இல்லையில்லை. இந்தப் பத்திரிகைகளில் காணப்படும் விஷயங்கள் "மிக மலிவானவை"யாய் இருப்பதிலிருந்து நீர் இதுபோல நினைக்கிறீர் போலும்!

பி. சுப்ரமணியம் (பங்களூர்)

கிருஷ்ணனைத் தோன்றும்போது மஹாலிங்கம் தாமே புல்லாங்குழல் ஊதுகிறாரா?

இல்லை. "புல்லாங்குழல் கச்சேரிகள் செய்யும் டி. ஆர். மஹாலிங்கமும் இவர்தானோ?" என்ற 'பிரபல' சந்தேகம் உமக்கு இன்னமும் தீர்ந்தபாடில்லை.

வி. கே. ஸி. (வேதாரண்யம்)

ஜுபிடர் சோமு, மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம், ஜெமினி வாஸன், இம் மூவருள் முறையே சினிமாத் தொழிலில் நீண்ட நாள் அநுபவம் உள்ளவர் யார்?

பெயர்களை நீர் சரியான வரிசையிலேதான் குறிப்பிட்டிருக்கிறீர்.

ஆர். கிருஷ்ணசாமி (கோலாலம்பூர்)

சிலர் ஸ்திரீ நக்ஷத்திரங்களை சதா தாக்கிப் பேசுகிறார்கள். பெண்கள் மட்டும் சினிமாவில் நடிப்பதை நிறுத்தி விட்டால் ஆண்களின் கதி என்னாகும்?

என்னாகுமா? அந்தப் பெண் வேஷங்களையும் ஆண்களே நடிக்க வேண்டி

விரைவில் வெளிவரப் போகும் ஜுபிடரின் "கிருஷ்ண விஜயத்"தில் லலிதா பத்மினியின் ராதாகிருஷ்ண நடனம் ஒரு விசேஷ அம்சமாய் இருக்குமாம்.

யிருக்கும். அந்தக் கண்றாவிகளை ரஸிகர்களும் 'தலை விதியே' என்று பார்த்துத் தொலைக்கவேண்டியிருக்கும்!

ஸி. ஏ. எஸ். இப்ருஹிம் (கம்பம்)

யூ. ஆர். ஜீவரத்தினம் இப்பொழுது படங்களில் நடிக்காத காரணம் என்ன?

தற்போது அவர் சினிமாவைவிட வாழ்க்கையையே மிக ரஸிக்கிறார் போல் தோன்றுகிறது.

எம். மருதய்யா (இலங்கை)

எம். எஸ். சரோஜினி அடுத்தபடியாய் எந்தப் படத்தில் நடிக்கிறார்?

இதைக் கேட்க வேண்டுமா? அடுத்த 'பக்ஷிராஜா' படத்தில்!

ஜி. சந்தானம் (திருச்சி)

எனெஸ்கே பில்ம்ஸாரின் கள்வனின் காதலி படத் தயாரிப்பு யோசனை என்னவாயிற்று?

கைவிடப்பட்டுவிட்டது. அதற்குப் பதில் அவர்கள் "தம்பி துரை" என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள்.

அப்துல்கரீம் மரைக்காயர் (காரைக்கால்)

மங்கையர்க்கரசியில் அரசன் கவி மீது சந்தேகங் கொண்டு அவரை சிறையில் தள்ளுகிறானே. பிறகு உண்மை வெளியானதும் கவியை ஏன் விடுவிக்கவில்லை?

படத்தில் இந்தக் கவியின் நடிப்பையும் பேச்சையும் பார்த்தால் அவர் சிறையில் இருப்பதே சரி என்று (அந்த அரசனுக்கு மட்டுமென்ன) எனக்கும் கூடத்தான் தோன்றுகிறது!

எஸ். ஐ. ராஜ்மகமது (ராஜகிரி)

எம். கே. ராதாவை ஏன் எந்தப் படத்திலுமே காணவில்லை?

"அபூர்வ சகோதரர்கள்" படத்தைப் பார்த்தால் உமக்கு இரட்டிப்பு 'சந்தோஷம்' ஏற்பட்டுவிடும்.

சுப்பராயன் (மைலாப்பூர்)

சில மாதங்களுக்கு முன் ஹேமா, விஜயா என்ற இரு குழந்தைகள் அரங்கேறியதைப் பார்த்தேன். அக் குழந்தைகள் மிக அழகாக ஆடினார்கள். எனினும் அவர்களின் கச்சேரி ஏன் அடிக்கடி நடைபெறுவதில்லை?

அரங்கேற்றலுக்குப் பிறகு இந்தக் குழந்தைகளுக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டது தான் காரணமாம். சமீபத்தில் இவர்களது கச்சேரி மியூஸியம் தியேட்டரில் நடைபெற்றது. சீக்கிரமே அவர்கள் ஒரு தமிழ்ப் படத்தில் நடிப்பதற்குக் கூட ஏற்பாடாகி வருகிறதாம்.

டிஸம்பர் மாதத்தில் வெளிவரவிருக்கும் முருகன் டாக்கீஸாரின் "ரத்ன குமார்" தமிழ்ப் படத்தில் இந்த தர்பார் காட்சியைக் காணலாம்.



"சங்கீதக் கச்சேரி செய்து வரும் வஸந்தகோகிலமோ..." என்று சந்தேகப்படுகிறீர்களோ? "இல்லையப்பா நான் சாக்ஷாத் நாரதரேதான்......" (கிருஷ்ண விஜயம்)

கே. பீ. அப்துல் ரஷீத் (பனங்காட்டூர்)

படங்களுக்குப் பாட்டு எழுதும் "கம்பதாஸனு"ம் மங்கையர்க்கரசியில் கவியாக நடிப்பவரும் ஒரே நபர் தானா?

ஆம்; அசல் கவியாக இருப்பதை விட நடிப்பது எவ்வளவு கஷ்டமான காரியம் என்று விளங்குகிறதல்லவா—இப் படத்தைப் பார்த்தபின்!

எஸ். போன்னய்யன் (மணிப்பாய், இலங்கை)

குமாரி கமலாவுக்கு தாய் தந்தையர் இருக்கின்றனரா?

ஓ! இருக்கிறார்கள். ஆனால் சேர்ந்து தான் இல்லை.

எம். எஸ். ராதா (சென்டூல், மலாயா)

ஆந்திர நடிகைகளான அஞ்சலி தேவியும், பானுமதியும் இப்படியேன் மார்பகத்தில்துணியேயில்லாமல் ஆபாசமாய் நடிக்கிறார்கள்? இதை அவர்களது கணவன் மார்கள் பார்த்துக் கொண்டு ஏன் சும்மா இருக்கிறார்கள்?

இல்லை; அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதற்கு அவர்களுக்கெங்கே அவகாசம்? அவர்கள் சம்பாதித்துக் கொண்டு வரும் பணத்தை எண்ணி வைப்பதற்கே அவர்களுக்கு நேரம் சரியாகி விடுகிறதே!

சோ. பேச்சி முதலியார் (பொதுக்குடி)

எம். ஜி. ராமச்சந்திரன் தற்போது எந்தெந்தப் படத்தில் நடிக்கிறார்?

"மருத நாட்டு இளவரசி", "ரத்ன குமார்" ஆகிய இரு படங்களில் அவர் நடித்துக் கொண்டிருக்கிறார்.

எஸ். எஸ். பதி (கோயமுத்தூர்)

படங்களில் ஒருவரே ஒரே காட்சியில் இரு வேஷங்களில் தோன்றும் காட்சிகள் எவ்வாறு எடுக்கப் படுகின்றன?

இது மிகக் கஷ்டமானதொரு தந்திர வேலையாகும். கேமிராவில் ஒரு பாதி

'கோபம் பெரியதா, ஹாஸ்யம் பெரியதா'—என்று கம்ஸன் ஆர். பாலசுப்ரமண்யத்தி னிடம் ஹாஸ்ய நடிகர் சாயிராம் பரீக்ஷிக்கிறார் போலிருக்கிறது. (கிருஷ்ண விஜயம்)

யைத் திரையிட்டு மூடி விட்டு, காட்சியின் ஒரு பாதியை மட்டும் முதலில் படம் பிடித்துக் கொள்ளுவார்கள். பிறகு (கேமிராவுக்குள்) பில்ம் சுருளை பழைய இடத்திற்கே வரச் செய்து, முன்பு மூடியிருந்த பகுதியைத் திறந்து விட்டு, திறந்திருந்த பகுதியை மூடி விட்டு, பாக்கிக் காட்சியையும் படம் பிடித்துக் கொள்ளுவார்கள். அதனால் காட்சியின் வலது புறம் இடது புறம் இரண்டில் நடக்கும் நிகழ்ச்சிகளும் ஒரே பில்மில் பதிவாகிவிடும். இது ஒரு முறை. இரண்டு வேஷங்களையும் தனித் தனியாய் எடுத்துக் கொண்டு, பிறகு படத்தை பில்மில் பதிப்பிக்கும் போதும் இதுப் போல திரையிட்டு மறைத்து ஒன்று சேர்க்கலாம். இரண்டிற்கும் திறமை வேண்டும்.

ஏ. கே. கிட்டப்பா (தட்டமங்கலம்)

டி. ஆர். மஹாலிங்கத்திற்கு என்ன வயதாகிறது? எது வரையில் படித்திருக்கிறார்?

வந்தவர் வாயிற்படி தாண்டிச் செல்லும் வரையில் தேனொழுகப் பேசி அனுப்புவதற்கு அவர் நன்கு படித்திருக்கிறார். இருபத்தி ஆறு வயது முடிவதற்குள் இவ் வளவையும் எப்படிக் கற்றுக் கொண்டார் என்று ஆச்சரியப் படுகிறீர்களோ?

டி. கே. எஸ். குப்தா (தியாகதுர்கம்)

மோஹினிக்காக ஆர். பாலசுப்ரமண்யம் தயாரித்த பறக்கும் குதிரையை நான் வாங்க விரும்புகிறேன். என்ன விலை கொடுக்க வேண்டியிருக்கும்?

'புளிமூட்டை' கொடுத்த விலைக்குமேல் நூறு ரூபாய் வைத்துக் கேட்டுப் பாரும்.

சென்னியப்பன் (அரிசிக்கேரா)

பிரபாவதியில் கிருஷ்ணனாக நடிக்கும் நடிகை யார்?

எம். எஸ். சரோஜா.

ஏ. எம். ஏ. அஹமது (கொழும்பு)

"குண்டூசி"யைப் படித்ததற்காக

கணக்கில் அடங்காத காதல்! பரணியின் ''லைலா மஜ்னு''வில் பால்ய லைலா.

என் வீட்டில் பெரியவர்கள் உதைக்கிறார்கள்; காரணம் என்ன?

பெரியவர்களாயிற்றே என்று ''குண்டூசி''யை அவர்களுக்கு முதலில் படிக்கக் கொடுப்பதற்கு மறந்திருப்பீர்! அதுதான் கோபமாயிருக்கும்!

பீ. வெங்கடாசலம் (தென்காசி)

நல்ல தம்பியில் டி. ஏ. மதுரம், ''பாலு வாங்கப் பணம் இல்லேன்னு டீயைக்-குடிச்சுக்கோ'' என்று உபதேசம் செய்கிறாரே? டீ மட்டும் பணமில்லாமல் கிடைக்கிறதோ?

அவர் பெயரிலேயே ''டீ'' இருப்பதால் அப்படிச் சொல்லி விட்டார் போலும்!

ஏ. எம். எஸ். தீன் (கொழும்பு)

வேலைக்காரியில் எம். வி. ராஜம்மா பாடும் ''உலகம் பல விதம்'' என்ற பாட்டு அவராலேயே பாடப்பட்டதா?

இல்லை; ஏ. பி. கோமளாவின் இரவல் குரல் அது.

விஸ்வநாதன் (கொல்லங்கோடு)

தென்னிந்தியாவில் நாட்டியக் கலையைப் போதிப்பதற்கான கல்லூரிகள் இருக்கின்றனவா?

இல்லை. அங்கு மிங்குமாக சில நாட்டியப் பள்ளிக்கூடங்கள் தனிப்பட்ட நபர்களால் நடத்தப் பட்டு வருகின்றன. இப் பள்ளிகளில் போதகாசிரியர்களாய் உள்ளவர்களுக்கே முதலில் ஒரு பள்ளிக்கூடம் வைத்தால் நன்றாயிருக்கும். மற்றபடி சில நட்டுவனார்கள் வைத்தது சட்டமாக இருந்து வருகிறது.

எம். சுகுமாரன் (சிகந்தராபாத்).

லலிதா-பத்மினி இருவருடன் நான் நேரில் பேச விரும்புகிறேன். இதற்கு ஒரு உபாயம் கூறும்.

ஏன், அவர்களை ஒரு கச்சேரிக்குப் பேசினால், தீர்ந்தது!

டி. ஆர். மைதிலீ நாதன் (ஸ்ரீரங்கம்)

மனதைத் தியக்கி, மதியை மயக்கி வரும் ''சினிமா ரதி''களுக்கு விதிக்கக் கூடிய தண்டனை என்ன?

அவர்களைப் பற்றி சதா கனவு கண்டு கொண்டிருப்பதுதான்!

முசகம் (ரக்குவான், இலங்கை)

வஸந்த குமாரி ஏன் படங்களில் நடிப்பதில்லை?

அவரது குரலுக்கு உள்ள கவர்ச்சி முகத்துக்கு இல்லாததனால்தான்.

டி. ஏ. பசுபதி (சென்னை)

எஸ். வி. சகஸ்ரநாமம் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ஏவி. எம். தயாரிக்கும் ''வாழ்க்கை'' படத்தில் அவர் கதாநாயகனாய் நடித்துவருகிறார்.

ராமசாமி (கொழும்பு)

தங்கள் ''குண்டூசி''யில் லலிதா பத்மினி சகோதரிகள் இலங்கைக்கு வருவதாகத் தெரிவித்திருந்தீர்களே? எப்பொழுது வருகிறார்கள்? ஏற்பாடு செய்பவர் யார்?

''இலங்கைக்கு வர விரும்புவதாக''த் தான் நான் குறிப்பிட்டிருந்தேன். அது பற்றி திட்டமான ஏற்பாடெதுவும் ஆகி விட்டதாக நான் கூற வில்லையே.

கலியாணத் தம்பதிகள்
சலியாமல் சிரிப்பதில் ஆச்சரியமென்ன ?
''பொன் முடி''யில் நாசிம்ம பாரதியும்,
மாதுரி தேவியும் தோன்றும் காட்சி

உள்ளம் நிறைந்த காதல் சுடர்.
'கிருஷ்ண விஜயத்'தில் பிரேமாவதிராம்-
நரசிம்ம பாரதியும்.

உள்ளம் பொங்கும் கோபக் 'கனல்.
''கிருஷ்ண விஜயத்''தில் கம்ஸன்
ஆர். பாலசுப்ரமண்யம்.

பொங்கல் வெளியீடு!
கெம்பராஜ் புரொடக்ஷன்ஸ்
ராஜ
விக்கிரமா
கெம்பராஜ்
ராஜம்மா. ஜயம்மா
N. S. சுப்பையா
T. V. சேதுராமன்
அங்கமுத்து
டைரக்ஷன்
கெம்பராஜ்
ஸ்டுடியோ
ஸ்டார் கம்பைன்ஸ்
Sincere arts
கெம்பாராஜ் புரொடக்ஷன்ஸ். தேவடி தெருவ, சென்னை-4..

காதல், காதல்! சாதல் எனினும் சாதல்,
சாதல, சாதல்—என்று தீர்மானித்துக்
கொண்ட மஜ்னு (நாகேஸ்வர ராவ்)

பின்னல் ஏற்படப் போகும் கதியை நினையாமல் சந்தோஷமாக இருக்கிருன் லைலா. (பானுமதி "லைலாமஜ்னு"வில்)



அவர்] குறி வைத்திருப்பதெல்லாம்
ஒரு பெண் மான் மீது தான்!
('பொன்முடி'யில் நரசிம்ம பாரதி)

"கொடிது, கொடிது; நோய் கொடிது; அதனிலும் மிக மிகக் கொடிது காதல் நோய்." இது யாரோ ஒரு அனுபவசாலியின் வார்த்தையாகத்தான் இருத்தல் வேண்டும். என்பதில் சந்தேகமில்லை. இந்தத் தொத்து நோய், சினிமாத் துறையில் தொடர்புள்ள பிரமுகர்களை எளிதில் தொத்திக் கொள்வதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது!

* * *

நம் நடிகர், நடிகைகள் படங்களிலே பலதரப்பட்ட காதல் காக்ஷிகளில் நடிப்பதை நாம் பார்க்கிறோம். ஒவ்வொரு படத்திலும் ஒவ்வொரு காதலனுடனே, காதலியுடனே நடிக்கின்றனர். எல்லாம் வெறும் நடிப்புத்தான். படங்களில் நடிப்பளவில் இருக்கும் இந்தக் காதல் சிலரது வாழ்க்கையில் நிஜமாகவே நடைபெறுவதும் இப்பொழுது சகஜமாகி வருகிறது.

* * *

நம் நடிகைகளில் பலர் தங்கள் மனதுக்குப் பிடித்தமான மணாளர்களுடன் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கின்றனர். நடிகைகளின் அன்பைப் பெற்ற அப்படிப்பட்டவர்களின் 'ஜாப்தா'வில் டைரெக்டர், நடிகர், ஒளிப் பதிவாளர், ஒலிப் பதிவாளர், பத்திரிகாசிரியர் என்று பலர் இருக்கிறார்கள், பகிரங்கமாய் தம்பதிகளாக வாழ்ந்துவரும் இப்படிப்பட்டவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனால் 'முறிந்த காதலில்' சம்பந்தப்பட்டவர்களைப்பற்றி மட்டுமே இங்கு குறிப்பிடப் போகிறேன்.

சமீபத்தில் ஒரு நடிகையின் வாழ்க்கையில் நடைபெற்ற 'ஒரு' காதல் நாடகம்தான், நான் இதை எழுதத் தூண்டுகோலா யிருந்தது. நான் ஏன் 'ஒரு' காதல் நாடகம் என்று குறிப்பிட்டே னென்றால், அதற்கு தக்க காரணங்கள் இல்லாமல் இல்லை. அந்த நடிகையின் முதல் காதல் நாடகம் அல்ல அது. அவர் ஏற்கனவே பல முறை இதுமாதிரிக் காதல் நாடகங்களை ஆடிச் சலித்தவர்.

கூடையில் இருந்த முறுக்கை கேட்காமல் எடுத்துத் தின்றால் சும்மா விடுவார்களா அவர்கள்? "கிருஷ்ண விஜயத்"தில் லலிதா, பத்மினி, சாயிராம்.

இந்த பிரஸ்தாப நடிகையை, வெறும் நடிகை என்று அழைப்பதைவிட நாட்டிய நடிகை என்பதே பொருந்தும். இந்த நடிகைக்கு திடீரென்று 'தாப வாழ்வு' வாழ வேண்டும் என்ற 'ஞானோதயம்' ஏற்பட்டு விட்டது. அதே சமயம் தன்னை 'ஆட்டுவிக்கும்' நட்டுவனார் மீது அவருக்கு காதல் பிறந்து விட்டது.

* * *

காதலர்களின் இன்ப வாழ்க்கை ஆனந்தமாக ஆரம்பமாயிற்று. பலே கைக்காரியான நடிகையின் தாயாருக்கு, தன் மகளின் விபரீதப் போக்கு வெறுப்பை அளித்தது. அது முதல் நடிகையின் வீடு 'குரு க்ஷேத்திர'மாக மாறி விட்டது.

* * *

தாய்க்கு, தன் மகள் ஒருவனுக்கு மனைவியாகி இல்லற வாழ்க்கை நடத்துவதில் ஆக்ஷேபனையே கிடையாது. ஆனால் அவளது ஆசை, தன் மகள் 'பிடித்தாலும் புளியங்கொம்பாகப் பிடிக்க வேண்டும்' என்பது தான். மகளுக்கு, சாம, தான, பேத, தண்டப் பிரயோகங்களைக் கையாண்டும் அவளது மனதைத் திருப்ப முடியவில்லை.

* * *

தான் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளிப் பட்டால் தன் மகள் வழிக்கு வந்து விடக் கூடுமென எண்ணினாள் தாயார். நடிகைக்கோ, தன் தாய்க்கு தன்னைத் தவிர வேறு கதியில்லை என்பதும், அவள் தன்னைவிட்டுப் போகமாட்டாள் என்பதும் நன்றாகத்தெரியும். ஆகவே தாயார் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பியதும், நடிகை கலங்கி விடாமல், விடை கொடுத்து அனுப்பி விட்டாள்.

* * *

கோபித்துக் கொண்டு வெளியேறிய தாயார் ஒரு வாரம் பொறுத்து, தன் மகளின் புத்தி திருந்தியிருக்கும் என்ற நம்பிக்கையுடன் வீட்டிற்கு வந்தாள். அவளுக்கு பெரிய ஏமாற்றமே ஏற்பட்டது. காதலன் கல் குண்டாக அங்கேயே இருந்தான். வீட்டுச் சிலவுகளுக்காக நடிகையின் கை வளையல்களை அவன் வாங்கிப் போய் அடகு வைத்திருக்கிறான் என்ற விஷயம் தெரிந்தபோது, பாவம், தாயார் இடிந்தே போனாள்!

லைலா மஜ்னு வில்லன்......

ஆனால் நடிகையின் இந்தக் காதல் நாடகமும், அவளுடைய முந்திய அனுபவங்களைப் போலவே அல்பாயுசுடன் முடிந்து விட்டதுதான் வருந்தத் தக்க விஷயமாகும்! சாஸ்வதமென நடிகை எண்ணிய அவளுடைய காதலன் நடிகையின் தாய் செய்த 'சூழ்ச்சி'யினால் அவள் வீட்டுப் பக்கம் வருவதையே நிறுத்திக் கொண்டான். நடிகை, பாவம், "எப்போ வருவாரோ" என்று ஏங்கி வழிமேல் விழி வைத்துக் காத்து நிற்கிறாள்.

........பொன்முடி காதலர்கள் —நரசிம்ம பாரதி, மாதுரி தேவி

மேற் கூறியது போன்ற, நட்டுவனர்-நாட்டியக்காரி சம்பந்தப் பட்ட காதல் நாடகம் ஏற்கனவே இன்ஞெரு குமாரியான நாட்டிய நடிகையின் வாழ்க்கையிலும் நடந்திருக்கிறது. அந்த நாட்டிய நடிகையின் தாயாரும் ஒரு சினிமா நடிகைதான்.

* * *

தன் மகளுக்கு பரத நாட்டியப் பாடம் கற்று வைக்க ஒரு நட்டுவனரை அமர்த்தினள் தாயார். குரு நாட்டியத்துடன், 'ஐந்தாம் வேத'த்தையும் சேர்த்து போதித்தார். 'குரு காணிக்கை'யாக தன்னேயே அர்ப்பணம் செய்து கொள்ள விரும்பினள் சிஷ்யை. தாயார் 'நாகம்' போல சீறினள். நட்டுவனரை தன் வீட்டுப் பக்கமே வரக்கூடாதென தடை உத்திரவு பிறப்பித்து விட்டு, மகளுக்கும் கண்டிப்பான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினள்.

காதல்தான் கட்டுக்கு அடங்காத தாயிற்றே! நாட்டிய நடிகை சாதுரியமாக வீட்டைவிட்டு வெளியேறி, தன் காதலனைப் போய் அடைந்து விட்டாள். தாயை ஏமாற்றி விட்டதாக மனப்பால் குடித்தனர் காதலர்கள்.

* * *

தாயோ ஒரு 'சிங்க' மாயிற்றே! அவள் கண்களிலா மண்ணைத் தூவிவிட முடியும்? மைனர் பெண்ணைக் கடத்திச் சென்றதாக போலீஸில் (நட்டுவனர் மீது) புகார் கொடுத்தாள். இந்த மாதிரியான விவகாரங்களில் அனுபவமில்லாத அந்த 'அப்பாவி' நட்டுவனர் நடுங்கிப் போனர்.

* * *

பிரபல டைரெக்டர் ஒருவரிடம்போய் தஞ்சமென அடைக்கலம் புகுந்து கொண்டாள் அந்த நடிகை. தாயார்

அவரை அணுகி, மகளைத் தன்னிடம் ஒப்படைக்கும்படிகேட்டாள். டைரெக்டர் மறுக்கவே அவர் மீது நடவடிக்கை எடுக்க, ஏற்பாடுகள் செய்தாள் தாயார். அதை அறிந்த 'சட்டம் படித்த' அந்த டைரெக்டர் மகளைக் கொண்டு போய் பேசாமல் தாயிடம் சேர்த்து விட்டார்.

* * *

சில வருஷங்களுக்கு முன், சென்னையில் ஒரு பிரபலமான புராணப் படம் தயாராகிக் கொண்டிருந்த சமயம் நடைபெற்ற ஒரு காதல் நாடகம் சினிமா வட்டாரத்திலேயே ஒரு பரபரப்பை உண்டு பண்ணி விட்டது. படத்தின் கதையில், காதலியை அவளது பெற்றோர்களுக்குத் தெரியாமல் காதலன் மணந்து கொள்ளுகிறான்; இதுதான் அந்தப் பட கதையின் முக்கிய சம்பவம். அந்தப் படத்தில் காதலனாக நடித்த நடிகருக்கும், காதலியாக நடித்த நடிகைக்கும் உண்மையிலேயே காதல் ஏற்பட்டுவிட்டது. தங்களது சேர்க்கைக்கு, காதலியின் பெற்றோர்களது சம்மதம் கிடைக்காதென்பது, அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதற்காகத் தயங்கி, தங்கள் தூய காதலை காற்றில் பறக்க விட்டு விட முடியுமா?

* * *

திடீரென்று ஒரு நாள் இருவரும் மாயமாக மறைந்து விட்டார்கள். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. பட முதலாளி 'ஷூட்டிங்' வைத்து விட்டுத் தவியாகத் தவித்தார். சில தினங்களுக்குப் பின் நடிகரின் ஆதரவில் நடிகை இருந்து வருவது தெரிந்தது. நடிகையின் பெற்றோர்கள் போய் மன்றாடி அழைத்தும் பிடிவாதமாய் வர மறுத்து விட்டாள். பட முதலாளியும், டைரெக்டரும் முன் வந்து கஷ்டப்பட்டு அவர்களின் காதல் சிக்கலைத் தீர்க்க வேண்டியிருந்தது.

* * *

தனது காதல் நாடகத்தின் 'கன்னி முயற்சி'யில் தோல்வியுற்ற அந்த நடிகை, தன் இரண்டாவது காதலில் 'அனுபவ'த்துடன் ஈடுபட்டாள்! தான் கடைசியாக நடித்த படத்தின் டைரெக்டரையே தம் வாழ்க்கைத் துணைவராகக் கொண்டு இப்பொழுது வாழ்க்கை நடத்தி வருகிறாள். இது விஷயமாக அபிப்பிராய மாறுபாடுள்ள தன் பெற்றோர்களைக்கூட ஒதுக்கி வைத்து விட்டாள் அந்த நடிகை.

* * *

மற்றொரு பிரபல நக்ஷத்திரம், உப நடிகையாக இருந்த சமயம், மேக்-அப் மென்னாகவும், உப நடிகராகவும் இருந்த ஒருவரை மணந்து கொண்டாள். சாதாரண நடிகையின் ஸ்தானத்திலிருந்து பதவி உயர்ந்ததும் கட்டிய கணவனைப் புறக்கணிக்க ஆரம்பித்தாள். மரியாதை தெரிந்த அந்தக் கணவனும் கௌரவமாக விலகிக் கொண்டு விட்டான்.

துடைப்பக்கட்டைக்கு இன்னும் தமிழ்ப் படங்களில் இடமிருக்கத்தான் செய்கிறது! (ஜூபிடரின் ''கிருஷ்ண விஜயத்''தில் எம். எஸ். எஸ். பாக்கியம்)

இப்பொழுது இந்த நக்ஷத்திரத்திற்கும், அவருடன் கூட சில படங்களில் கதாநாயகனுக நடிப்பவருக்கும் காதல் கனிந்து வளர்ந்து வருகிறது. 'கட்டிய கணவன் இருக்க, காதலி தான் விரும்பும் காதலனை மணந்துகொள்ள முடியுமா?' என்பதை சட்ட நிபுணர்களிடம் கலந்து ஆலோசித்து வருகிருளாம் இந்த நக்ஷத்திரம்!

* *

இப்பொழுது முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் ஒரு நடிகைக்கு ஒலிப்பதிவாளர் ஒருவர் மீது அபார பிரேமை. இந்தத் 'தகாத' நட்பு காரணமாக நடிகையின் கணவருக்கும் நடிகைக்கும் கூட அடிக்கடி மனஸ்தாபம் ஏற்பட்டுக் கொண்டே இருந்ததாம். ஆனால் சமீபத்தில் நடிகைக்கு விடுதலை கிடைத்தது. அவருடைய பிரேமைக்கு உரிய அந்த ஒலிப்பதிவாளர் வேறு ஒருத்தியை மணம் செய்து கொண்ட செய்தி, பாவம், அந்த நக்ஷத்திரத்தை மிகவும் உலுக்கி விட்டதாம்.

* * *

காதல் கதைகளாக எழுதித் தள்ளும் ஒரு ஆசிரியருக்கு நடிகை ஒருத்தியின்மீது காதல் ஏற்பட்டது. நடிகையை சீக்கிரமே புகழ் ஏணியின் உச்சிக்கு ஏற்றி விடுவதாக வாக்களித்தார். அவர்களது இன்பவாழ்க்கை தங்கு தடையின்றி வளர ஆரம்பித்தது. தம்முடைய கதை ஒன்று படமாக ஏற்பாடான போது, தம் காதல் கன்னியை அதில் கதாநாயகியாக நடிக்கவும் ஒப்பந்தம் செய்து வைத்தார், அந்த ஆசிரியர்.

மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்து வரும் "பொன் முடி" தமிழ்ப் படத்தில் ஒரு ரிஷப வாகனக் காட்சி.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு அந்தப் படத்தின் முதலாளி 'ஸ்டார் வால்யூ' வேண்டுமென்று கூறி, ஒரு பிரபல நாட்டிய நடிகையைப் படத்தின் பிரதம பாகத்திற்கு அமர்த்தி விட்டார். நடிகைக்கு இதுவே பெரிய இடியாகி விட்டது.

* * *

ஆசிரியர் ஏற்கனவே விவாக மானவர். அவருடைய மனைவிக்கு தன் கணவரின் காதல் லீலைகள் தெரிந்தது. மனைவி கொஞ்சம் துணிச்சல்காரி. தன் கணவனை சீர்திருத்த முயலுவது பயனற்ற வேலை என்பது அவளுக்குத் தெரியும். ஆகவே தன் கணவனை மயக்கிய அந்தக் 'கள்ளி'யைத் திருத்தத் தீர்மானித்தார். ஆசிரியருக்குத் தெரியாது நடிகையின் வீட்டிற்குப் போனர். தன் ஆத்திரம் தீர

நடிகைக்கு 'மரியாதை' செலுத்தி விட்டுத் திரும்பினர். அப்படி முறிந்தது அந்தக் காதல் நாடகம்.

* * *

'கிருஷ்ண துலாபாரம்' என்ற ஒரு படம் திரையிடப்பட்டதே பலருக்குத் தெரிந்திருக்காது. அப்படியிருக்க அதில் ருக்மணியாக நடித்த நடிகையை ஞாபகமில்லை என்றால் ஆச்சரியமேயில்லை. நாரதர் வேஷத்தில் நடிப்பதில் பிரசித்தி பெற்ற ஒரு நடிகர்! அந்த நடிகைமீது காதல் கொண்டு ரகஸியமாக மணந்து கொண்டிருந்தார். நடிகை அவரைத் தம் கணவன் என்று எல்லோரிடமும் பஹிரங்கமாகக் கூறிக் கொண்டதை விரும்பாத அந்த நடிகர் அந்த நடிகையைத் தட்டிக் கழித்து விட்டார்.

* * *

சில வருஷங்களுக்கு முன்பு வரை பிரபல நக்ஷத்திரமாயிருந்து வந்த ஒரு நடிகை சினிமா உலகிலிருந்து விலகி 'ஓய்வு' எடுத்துக் கொண்டிருப்பதற்கும் இந்தக் காதல் நோய் தான் காரணமாகும். தான் முன்னுக்கு வரக் காரணமாயிருந்த, தன் அபிமானக் கணவரை திடீரென்று ஒரு நாள் திரஸ்கரித்துவிட்டு, 'ஒரு டைரெக்டர் மீது' காதலாகிவிட்டேன்' என்று கூறி, அவரை மணந்து கொண்டு விட்டார்.

* * *

'தாஸி அபரஞ்சி'யில், கோவில் குருக்கள் கொடுத்த வசிய மருந்து கலந்த சக்கரைப் பொங்கலைத் தின்றுவிட்டு வேலைக்காரி, 'பிரேமை, பிரேமை' என்று அவரை விரட்டியதும், இன்று அந்தக் 'கோயில் குருக்களுடன் கொண்டாட்டமாக இருப்பதுவும்' அந்தக் காதலின் மகிமையினால் தான்! வாழ்க காதல்! வாழ்க காதலர்கள் !!

ஜுபிடர் பிக்சர்ஸார் பெருமையுடன் வெளியிடப் போகும் "கிருஷ்ண விஜயம்" தமிழ்ப்படத்தில் தந்திரக் காட்சிகள் நிறைய உள்ளனவாம். அதில் ஒன்றுதான் இது.

இதைச் செய்வார்களா?

வேளாண்மை நாடாகிய இந்தியா தனக்கு வேண்டிய ஆகாரத்திற்கு அயல் நாடுகளின் தயவை எதிர்பார்ப்பதா? சுய தேவை 'பூர்த்தி, ஏற்பட்டாலொழிய நம் நாட்டின் உணவு நிலை சரியாகாது என்பதை நன்குணர்ந்த நம் சர்க்கார் பல வழிகளைக் கையாளுகிறார்கள்.

அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சி அனுபவங்களை பத்திரிகைகளில் கட்டுரைகளாகவும், புத்தகங்களாகவும் வெளியிடுகின்றனர். இவைகளால், படிப்பு வாசனை அறியாத ஏழை விவசாயிக்கு என்ன பிரயோஜனம்?

விவசாயத்தில் பலன் தந்த முறைகளை செய்திப் படங்கள் தயாரிப்பது போல் விளக்கமாகப் படமாக்கி கிராமாந்தரங்களில் விவசாயிகளுக்கு இனமாகவும் காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நம் நாட்டு விவசாயிகளையும் முன்னேறச் செய்து, நாட்டின் உணவுப் பஞ்சத்தையும் போக்கமுடியும். இதை அரசங்கத்தார் நன்கு யோசித்து விரைவிலேயே செய்வார்கள் என்று நம்புகிறேன்.

சே. இராமலிங்கம்,
திருநெல்வேலி டவுன்.

வீணில் குறை கூற வேண்டாம்.

ஜூலை மாத ஊசியில் திருச்சி அன்பர் எழுதியிருந்த 'இது தான் சட்டமா?' என்ற கடிதத்தைப் படித்தேன். கொட்டகையினுள் புகை பிடித்தல் கூடாது என்று சுவர்களில் கொட்டை எழுத்துக்களில் எழுதியிருக்கிறார்கள். தவிரவும் சிலைடிலும் எழுதிக் காட்டுகிறார்கள். மக்கள் அதன்படி நடப்பார்கள் என்று நினைத்துத்தான் இப்படிச் செய்வது. சட்டத்தை அமுல் நடத்த முடியாமல் போர்டை போடுவதால் என்ன பிரயோசனம்? என்று அன்பர் கேட்கிறார். இதற் கெல்லாம் சட்டத்தையும், சர்க்காரையும் குறை கூறிக் கொண்டிருப்பது நியாயமில்லை. ஒருவர் கொட்டகையில் புகை பிடித்தால் பக்கத்திலுள்ள நாம் அந்த அன்பரிடம் 'இது நியாயமா, இது முறையா—நமது சர்க்கார் அறிக்கைக்கு விரோதமாக நடப்பது சரி தானா' என்று கேட்க வேண்டும். அவரவர் குற்றத்தை அவர்களே உணர்ந்து, படிப்படியே கொட்டகையில் புகைபிடித்தல் இல்லாமலேயே செய்து விட முடியும். ஒவ்வொருவரும் இதை உணர்ந்து நடந்து கொண்டால் சட்டம் தானாகவே அமுல் நடந்துவிடும். அப்படியில்லாமல் சர்க்காரையும் சட்டத்தையும் குறை கூறுவதில் பிரயோசனமே இல்லை.

மு. மா. முத்தையா,
அம்பலசேரி.

திருத்த வேண்டும்!

தமிழ் நாட்டில் பல வகுப்பாரும் வசித்து வருகின்றனர். இதில் அவரவர்களின் வழக்கத்திற்கு ஏற்றவாறு மொழி திரிபு பட்டு, பலவாராகி வழங்குகின்றது. பலருக்கும் பயன்படும் பொது விஷயத்தில் பொதுவான நடையைக் கையாள வேண்டுமே தவிர, தத்தம் விட்டினுள் பேசப்படும் வழியை வெளியில் கொண்டு வருவது நல்லதல்ல. தமிழ்ப் படங்களில் இன்று சிலர் கையாளும் வசன நிலை மிகவும் பரிதாபகரமாயிருக்கிறது. பாத்திரங்களுக்கு ஏற்றவாறு வசனம் அமைக்காமல், எல்லோருக்கும் அவரவர்கள் மனப்போக்குப்படி வசனம் அமைத்து விடுகின்றனர். படத்தில் கையாளப்படும் பாஷை பொதுவாக அமைதல் வேண்டும். இனியாகிலும் படங்களுக்கு ஒரு பொது நடையைக் கையாளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

டி. என். பஞ்சாபகேசன்,
ஊர்காம்.

சிறந்த படத்திற்கு பரிசு!

சிறந்த படத்திற்கு பரிசு வழங்குவது பற்றி சென்னை அரசாங்கம் யோசித்து வருவதாக, சென்னை நிதி அமைச்சர் சில

தினங்களுக்கு முன் ஒரு கூட்டத்தில் பேசினார்.

பரிசு தருவதன் மூலம் சினிமாக் கலை வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் முயற்சி பாராட்டக் கூடியது தான். ஆனால் பிரயோஜனப் படாத கதைகளைக் கொண்டு, மக்களின் மனதைக் கவருவதற்காக சில ஆபாசமான கட்டங்களை சேர்த்து படம் எடுக்கும் கலையாக தற்காலம் இருந்துவரும் தமிழ் சினிமாவுக்கு பரிசு தருவதை விட, அக்கலை வளராமல் தடை செய்வதற்கு முயற்சி செய்வது நாட்டுக்கு நன்மை செய்வதாகும்.

பரிசு பெற்ற கடிதம்

○

எழுதியவர் :

சே. இராமலிங்கம்,
48, பர்வதசிங்ராஜ தெரு,
திருநெல்வேலி டவுன்.

சினிமாக்கலை வளர பரிசு தருவதென்றால் :—சினிமாப் படக் கதை புதியதாய், மக்களின் மனதை கவரும் வண்ணமாய் இருக்க வேண்டும். மேலும் நல்லொழுக்க நன்னெறிகளைக் கற்பிப்பதா யிருத்தல் வேண்டும்.

நாட்டுப் பற்று, மொழிப் பற்று, சமுதாய சீர்திருத்தம், பொது நலத் தொண்டு, மனித இனக்கோளாறுகளை நீக்கிப் பண்படுத்துப் திட்டங்கள், ஏற்றத் தாழ்வின்றி மனிதர் யாவரும் சரி நிகர் சமமாய் நல்வாழ்வு வாழ வழி காண்பிப்பது போன்ற நற்கருத்துக்களை ஊட்டுவதாக அமைந்திருக்க வேண்டும். இவற்றுடன் படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, இசை, நடனம், அலங்காரம் முதலிய அருங்கலை விஷயங்களிலும் நல்ல கவனம் செலுத்தி படமாக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

எனவேபரிசு தர முயலும் அரசாங்கம், எல்லா விஷயங்களையும் நன்கு ஆராய்ந்து எல்லாவகையிலும் சிறந்த இடம் பெறும் படங்களுக்கே பரிசு தருவதென்றால், உண்மையில், நல்ல படங்கள் வெளி வர முடியும். அப்படியில்லாமல், தாட்சணியம், மேலிடத்துச் சிபார்சு, அந்தஸ்து முதலியவைகளில் அரசாங்கம் செல்ல விடுவதாயிருந்தால் இப்பரிசு திட்டம் சிறு அளவும் பயன் படாது, பாழாகிப் போகும் என்பதில் ஐயமில்லை.

எஸ். எட்வர்ட்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

நேர்மையாகச் செய்யுங்கள்

தற்பொழுது தமிழ்ப் படங்களின் கதைகள் அநேகமாக பிறமொழிகளுடைய தாக இருக்கிறது. இது ஒரு விஷயத்தில் வரவேற்க வேண்டியதே. ஒரே கதையைப் பலமுறை, பல பெயர்களில் தயாரிப்பதைவிட இது எவ்வளவோ வகையில் உயர்ந்தது என்றும் கூறலாம். ஆனால் ஒரு விஷயத்தை நம் படமுதலாளிகள் நன்கு கவனிக்கவேண்டும்.

பிற மொழிகளில் உள்ள கதைகளைப் படமாக்கும் போது நம் நாட்டுக்குத் தக்கவாறு கதை சற்று மாற்ற வேண்டியிருக்கலாம். அப்படிச் செய்தால்தான் நன்றாக இருக்கும். ஆனாலும் படத் தயாரிப்பாளர்கள் மூலக் கதைக்கு எவ்வகையிலும் குறையாமலும், அதன் சுவை குன்றாமலும் படமெடுக்க வேண்டும். அப்படிக் கின்றி நம் நாட்டிற்கு ஏற்றவாறு கதையை மாற்றுகிறோம் என்று தாறுமாறாக மூலக் கதையைச் சித்திரவதை செய்தால் மூல ஆசிரியரின் நல்ல பெயரும், அன்னாருடைய புகழும் பாழாவதுடன் தமிழர்களுக்கு எக் காரியமும் சரியாகச் செய்யத் தெரியாது என்ற கெட்ட பெயரும் ஏற்படும். இதைப் படத் தயாரிப்பாளர்கள் நன்கு உணர்ந்து, செய்வதைத் திருந்தச் செய்வார்களாக.

சா. வை. நாதன்,
கும்பகோணம்.

சினிமாவும் பிரசாரமும்

இன்றைய உலகிலே, கலையழகுடனும், திறமையுடனும் பிரசாரம்செய்ய வல்ல சிறந்த சாதனம் சினிமாவைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பது எவரும் மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். ஆகவே சிறந்த பிரசார வலிமை கொண்ட இச்சாதனம் நன்கு பயன் படவேண்டுமானால் அதை நாம் கையாளும் முறையில் தான் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். பிரசாரத்தினால் நன்மையும் அடைய முடியும். தீமையையும் வளரச் செய்ய முடியும்.

இன்றைய சுதந்திர இந்தியாவிலே இப் பிரசார சாதனத்தின் உதவி மற்றெப் போதையும் விட மிக மிக அவசியமாய் இருக்கிறது. நாட்டு பிரிவினையும், அணுகுண்டு சச்சரவுகளும் சமூக குழப்பங்களும், பாஷை வேறுபாடுகளும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான இவ்வேளையில்

சினிமாவின் பிரசார சக்தியினுல் நாம் பெரிதும் பயன் பெற முடியும்.

சினிமாப் படம் மக்களின் அறிவு, தொழில், கலை மூன்றையும் வளர்க்க உதவும் என்பது அறிஞர்கள் துணிபு. எனவே கலைப் பண்போடு தொழிற் பண்பையும் இணைத்துப் படம் பிடிப்பது நாட்டிற்குப் பயன் தருவதாகுமல்லவா? ஆகவே, காலத்திற்கேற்ற கருத்துக்களைப் பரப்பி, நாட்டிற்கு நல்லதொரு வழி காட்டியாக விளங்க வேண்டியது இச் சினிமாக் கலை. எனவே, இன்று நாட்டு மக்களிடையே ஒற்றுமையையும், சிறந்த நோக்கங்களையும் பரப்ப சமூக ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, தேச சேவை, தொழில் முன்னேற்றம் முதலிய முன்னேற்றக் கருத்துக்களை உணர்த்தும் வகையிலும், தருதல் வேண்டும்.

ஆர். கண்ணன்,
அறந்தாங்கி.

தொத்து நோய்கள்

இன்று பெரும்பாலும் மக்கள் சினிமாவை அதிகமாக விரும்புகின்றனர். தினசரி ஒவ்வொரு ஊரிலும் லக்ஷக்கணக்கான மக்கள் சினிமாத் தியேட்டருக்குச் சென்று சினிமாப் பார்த்து, மிகவும் களிப்புடன் பார்த்த படத்தை ரசித்துக் கொண்டே செல்கின்றனர். இதனுல் பெரும்பாலும் மக்களிடத்திலே நாகரீகமும், ஓரளவு அறிவும் விருத்தியடைகிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. அதுபோலவேதான் சினிமாத் தியேட்டர்களில், காசம், சிரங்கு முதலான பல பெரும் தொத்து நோய்களும் பரவுகிறது. தியேட்டரில் லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக் கூடாது என்ற சட்டம் எவ்வாறு ஏற்படுத்தப் பட்டதோ, அதுபோல "தியேட்டருக்குள் பெரும் வியாதியஸ்தர்கள் பிரவேசிக்கக்கூடாது" என்ற சட்டத்தையும் கொணர்ந்து, தொத்து வியாதிகளை பரவாமல் தடுக்கும்படிச் செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு ஊரிலும் சில கொட்டகைகள், காற்றோட்ட வசதியும், இதர சுகாதார வசதிகளும் இல்லாமலும், மூட்டைப் பூச்சிகளின் தொந்தரவு நிறைந்தனவாயும் உள்ளன. இத்தியேட்டர்களுக்கு தடை விதிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் தொத்து நோய்கள் பரவாமலும், சினிமாப் பார்ப்பவர்கள் படத்தை நன்ருகக் கவனித்து நன்மை பெறவும் வசதியாக இருக்கும். ஆகையால், சுகாதார வசதியில்லாத கொட்டகைகளுக்கு தடையும், தொத்து நோய்கள் பரவாமலிருப்பதற்கு ஒரு சிறந்த சட்டத்தையும் கொண்டு வர முனிஸிபாலிடிகளாவது, மாஹாண அரசாங்கமாவது முன்வர வேண்டும்.

நா. அருணுசலம்,
மதுரை.

தமிழில் கல்விப் படங்கள்

எங்கள் பள்ளியில் கல்விப் படங்கள் மாதம் ஒரு முறை அல்லது இரண்டு முறைகள் காட்டப் படுகிறது. அவைகள் அனைத்தும் ஆங்கிலப் பேசும் படங்கள். நன்கு ஆங்கிலம் கற்றவர்களாலேயே அப் படங்களின் கருத்தை சில சமயங்களில் அறிந்து கொள்ள முடியாமற் போகிறது. அப்படியிருக்க, என்போன்ற

ஒற்றைக்கால் தவம்!

என். எஸ். கே. ஒற்றைக்கால் தவம் புரிவதுஎதற்காக? "'தம்பிதுரை'யைப் பிரமாதமாய்த் தயாரிப்பதற்காக" என்று நாம் கற்பனை செய்துகொள்ளலாம். காலுக்கடியில் முக்காலி இருப்பதாகவே அவர் கற்பனை செய்து கொண்டிருக்கும்போது நமக்கு இதுகூடவா கஷ்டம்?



எட்டாவது வகுப்புப் படிக்கும் பையன் அதை எப்படிப் புரிந்து கொள்ளுவான்? இந்த நிலையில் படங்களைக் காட்டுவதால் பள்ளிக்குத்தான் என்ன பயன்?

இக்குறையைப் போக்க அரசாங்கத்தார் முன்வர வேண்டும். இந்த வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்குத்தான் ஆங்கிலம் பேசும் கல்விப் படங்கள் காட்டலாம் என்று ஏற்படுத்த வேண்டும். அதே சமயத்தில் மற்றவர்களுக்குத் தமிழில் பேசும் கல்விப் படங்களைக் காட்ட வேண்டும். இதற்கு சர்க்கார் முன் வருவதுடன், தமிழ்ப் படங்களைத் தயாரிப்பவர்களும் ஒத்துழைத்து மாணவர்களுக்கு உபயோகமான கல்விப் படங்களைத் தயாரித்துக் கொடுக்க முன்வர வேண்டும்.

வி. ராமச்சந்திரன்,
திண்டுக்கல்.

ஸெக்ஸ் அப்பீல்

தற்கால தமிழ்ப் படங்களில் ''ஸெக்ஸ் அப்பீல்'' என்பது நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. படவுலகின் பிரம்மாக்கள் தங்களது பணப்பெட்டியை நிரப்புவதற்காகச் செய்யும் செப்பிடி வித்தைதான் இந்த ''ஸெக்ஸ் அப்பீல்!'' படங்களில் நடிக்கும் நடிகைகளுக்கும், மற்றும் நடனத்திற்காக ஏற்பாடு செய்யப்படும் குமாரிகளுக்கும் மிகக் குறைவான ஆடைகளையோ, அல்லது சல்லாத் துணிகளையோ அணிவித்து அவர்களின் அங்க பூரிப்புகள் நன்கு தெரியுமாறு படம் பிடித்து பார்ப்போரின் மனதில் கீழ்த்தரமான காம உணர்ச்சிகளைத் தூண்டுகிறார்கள். இம் முறையைக் கையாள்வதனாலேயே தங்கள் படம் வெற்றியடையும் என்று அநேக படத் தயாரிப்பாளர்கள் எண்ணுகின்றனர். மேலும் இது முற்றிலும் தவறான எண்ணமாகும். கலா ரஸனையில் முன்னேற வேண்டும் என்று எண்ணுபவர்கள் இந்த ஆபாஸத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஆகவே, நமது படக்கலை முன்னேற வேண்டுமானால், ''ஸெக்ஸ் அப்பீல்'' என்ற போர்வையின் கீழ், படங்களில் புகுத்தப்படும் ஆபாஸம் ஒழிய வேண்டும். இதை நம் படத் தயாரிப்பாளர்கள் கவனிப்பார்களா?

எஸ். சொர்னம்,
கடலூர் புது நகர்.

ஒரு யோசனை

சினிமாக் கொட்டகையில் புகை பிடிக்கக் கூடாது என்று சென்னை சர்க்கார் திட்டம் வகுத்து சட்டமாக்கியிருக்கிறதென்று கொட்டகையில் எச்சரிக்கப் படுகிறது. இது வரவேற்கத் தக்கதே. ஆனால் படக் காட்சியின் இடை வேளையில் நாம் திரையில் காண்பதென்ன? ''அந்த பீடியை உபயோகித்து ஆனந்தமடையுங்கள். இந்த பீடியை உபயோகித்து இன்பமடையுங்கள்.'' இவைகளும் இவைகளைப் போன்ற பல ரகமான புகை பிடிக்கும்படியான (வேண்டுகோளைப் போல்) வற்புறுத்தும் விளம்பரங்கள். இது தொட்டிலையும் ஆட்டி விட்டு, பிள்ளையையும் கிள்ளி விடுவது போலல்லவோ இருக்கிறது?

பூரண மதுவிலக்கு அமுலுக்கு வருவதற்கு முன்பே அது சம்பந்தமான விளம்பரங்கள் செய்யக் கூடாது என்று சர்க்கார் தடை விதித்தது. அதே போல 'தியேட்டருக்குள் செய்யப்படும் விளம்பரங்களில் புகை சம்பந்தமான சரக்குகளைச் சேர்க்கக் கூடாது' என்று சர்க்கார் தடை விதிக்க வேண்டும். மேலும் தியேட்டரினுள் புகை பிடிப்பதால் மற்றவர்கள் எவ்வகையில் பாதிக்கப்படுகிறார்கள், எவ்வளவு கெடுதல் ஏற்படுகிறது என்பதை விளக்கி ஸ்லைடு போடும்படியும் சர்க்கார் சட்டம் இயற்ற வேண்டும். இதைச் சர்க்கார் செய்யும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மா. இராமச்சந்திரன்,
செங்கற்பட்டு.

மாதுரி தேவி ''பொன்முடி''யிலும் ஆண் வேஷத்தில் நடிக்கிறார்.

மறைந்த ரகஸியம்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

யும் பிரிந்து போய்விடுவது!' என்று உறுதி கொண்டாள் அவள்.

பாஸ்கரனின் மனைவி உமாவிடம், குழந்தையை விட்டுவிட்டு சினிமாக் கம்பெனி ஒன்றில் சேர்ந்தாள் கல்யாணி. பாஸ்கரனும், உமாவும் எவ்வளவோ தடுத்தும் அவள் கேட்கவில்லை. கடைசியில் பாஸ்கரனேதான் முயற்சி எடுத்து அவளை சினிமாக் கம்பெனியில் சேர்த்தான். அவளுக்கு ஆரம்பத்தில் சாதாரண தோழி வேஷம்தான் கொடுக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் கதாநாயகியாகி, உயர்ந்த நக்ஷத்திரப் பதவியையும் அடைந்தாள். சமூகத்துக்கும், சுயகௌரவத்துக்கும் அவள் இப்பொழுது பயப்படவில்லை. கடவுள் என்பது அர்த்தமற்ற வெறும் சொல் என்பது அவள் கக்ஷி. பட முதலாளிகளிடமும், டைரெக்டர்களிடமும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது அவள் அனுபவத்தில் கற்ற பாடம். பணமும் புகழும் சேரும் விதம் எப்படி என்று இன்னொருவர் அவளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். நிர்மலா என்ற புதுப் பெயருடன் சினிமா ரஸிகர்களின் உள்ளத்தைக் கவர்ந்திருந்தாள் அவள்.

நிர்மலா தன் இருப்பிடத்தை விட்டு எழுந்தாள். அறையின் மூடியிருந்த ஜன்னலைத் திறந்தாள். புயலின் வேகமும் மழையும் குறைந்திருந்தது. குளிர்ந்த காற்று அவள் உடலை நடுக்கவில்லை. பழைய சம்பவங்களின் நினைவு அவள் உடலை அனலைப் போல் தகித்துக் கொண்டிருந்தது.

சினிமா நக்ஷத்திரமான பின் நிர்மலா அடிக்கடி பாஸ்கரன் விட்டுக்குச் செல்லுவதை நிறுத்திக் கொண்டாள். ''தாய்மை என்ற சொல்லுக்கு பாத்திரமாகி விட்ட உனக்கு சகிப்புத் தன்மை வேண்டாமா? குழந்தையின் பிற்கால நல் வாழ்வையும் உயர்வையும் முன்னிட்டு குழந்தையின் தாய் நீ தான் என்பதை காட்டிக் கொள்ளாதே'' என்று உமா கூறியது அவள் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. சில நாட்களில், பாஸ்கரன் வேலையை முன்னிட்டு தன் மனைவியுடன் கல்கத்தாவுக்குச் சென்றான். அதன் பின் அவர்களைச் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பமே இல்லாமல் போய் விட்டது நிர்மலாவுக்கு. அவளுக்கு தன் குழந்தையைப் பற்றி சிற்சில சமயம் ஞாபகம் வருவதுண்டு. ஆனால் அந்த எண்ணத்தை அவள் நீடிக்க விடுவதில்லை. சந்துருவைப் பற்றி எண்ணிக் கொள்ளுவாள். அப்பொழுது உண்டாகும் ஆத்திரத்தில் அவளுக்கு எல்லாமேதான் மறந்து போய் விடும்.

சந்துரு பத்திரிகையின் சினிமாப்பட விமர்சகனாக இருந்தான். அவன் நிர்மலா நடித்த படங்களைப் பற்றியும், அவள் நடிப்பைப் பற்றியும், வானளாவப் புகழ்ந்து பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளுவான். கற்புக்கரசியாக அவள் நடித்தது அப்படியே தத்ரூபமாக இருக்கிறது என்று சொல்லுவான். பல ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்ற நக்ஷத்திரம் நிர்மலா, அவளைப் புகழ்ந்து எழுதுவதின் மூலமே தான் எல்லோராலும் புகழப்படும் விமர்சகனாக ஆக முடியும் என்பதை அவன் அறிந்து கொண்டிருந்தான். தன்னால் நிராகரிக்கப்பட்ட கல்யாணிதான் நிர்மலா என்பதையும் சந்துரு அறிந்து கொள்ளாமல் இல்லை.

நாட்கள் வளர்ந்தன; மறைந்தன. நிர்மலாவின் வாழ்வில் எந்த விதமான விசேஷ நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. அவள் இளமையும் தேய்பிறை போல் தேய்ந்து கொண்டுதான் வந்தது. அதைப்பற்றி அவள் கவலையோ சந்தோஷமோ கொள்ளவில்லை. வருங்காலத்தில் நடக்கப் போகும் தன் வாழ்வைப்பற்றி அவளது சிறிதளவாவது சிந்தித்ததாகத் தெரியவில்லை. அமைதியுடன் செல்லும் அவள் வாழ்க்கைப் பாதையில் மறுபடியும் ஒரு பேரிடி. அதைப் பற்றித்தான் அவள் எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது இப்பொழுது.

கல்கத்தாவில் கலகம் முளைத்தெழுந்து கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே எழுந்த இந்த கலகத் தீ எல்லா இடங்களிலும் பரவியது. அந்த கலகத்துக்குப் பலியான குடும்பங்கள் எத்தனையோ. அதிலிருந்து எப்படியோ தப்பி, எவ்வளவோ கஷ்டங்களுக்கு இலக்காகி சென்னை வந்து சேர்ந்த ஒரு யுவதி நேராக நிர்மலாவைத் தேடிக் கொண்டு வந்தாள். அவள் யார்? எங்

லிருந்து வந்தாள்? என்ற விஷயங்களை நிர்மலா கேட்டு அறியுமுன் அவள் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டு நின்றாள். அந்த யுவதியின் பால் வடியும் முகத்தைத் தான் எங்கோ எப்பொழுதோ பார்த்திருப்பதாகத் தோன்றியது நிர்மலாவுக்கு. அவள் அதைப்பற்றி தீவிரமாக சிந்திக்குமுன் கையில் இருந்த கடிதம் அவளைப் படிக்கத் தூண்டியது:

“என் பிரியமுள்ள கல்யாணி,

ஆம். உனக்கு இந்தப் பெயர் மறந்து கூடப் போயிருக்கும். ஆனால் எனக்கு ஞாபகம் இருக்கிறது. நீ என்னதான் நக்ஷத்திரம் நிர்மலாவாக பிரகாசித்தாலும் என்னுடைய கல்யாணிதானே. ஆகையினால் உன்னை அப்படியே அழைக்கிறேன். கல்யாணி! உன் குழந்தை பிரேமாவை இதுவரை வளர்த்து விட்டேன். உன் பிரேமையின் அறிகுறியாக பிறந்த அவளுக்கு பிரேமா என்ற பெயரே வைக்க வேண்டும் என்ற உன் விருப்பப்படியே அவளை அழைக்கிறேன். எனக்குண்டான எவ்வளவோ கஷ்டங்களை எல்லாம் சமாளித்துக் கொண்டு கூடியவரை அவளை செல்லமாகவே வளர்த்தேன். நல்ல கண்ணியம் வாய்ந்த ஆடவனுக்கு அவளை மனைவியாக்கி விட்டால் என் லக்ஷியங்களும், நான் உனக்குக் கொடுத்த வாக்குறுதியும் நிறைவேறியது போலத்தான். ஆனால் என்னுடைய இந்த இறுதி ஆவல் நிறைவேறுமுன், நான் இறந்து விடுவேன் என்றே எண்ணுகிறேன். என் கணவர் கல்கத்தாவில் நடக்கும் கலகத்தில் கொல்லப் பட்டார். பிரேமாவை அழைத்துக் கொண்டு நான் உயிர் தப்பி வந்தேன். என் அன்பான கணவரைப் பறி கொடுத்து விட்டு நான் என் பிரேமா ஒருவளை நம்பியே உயிர் பிழைத்திருக்க ஆசை கொண்டேன். ஆனால் வரும் வழியில் நோய் என்னை பலமாகப் பிடித்துக் கொண்டு விட்டது. இதிலிருந்து மீளுவேன் என்ற நம்பிக்கையே எனக்கு இல்லை. ஆகையினாலேயே மிகுந்த சிரமத்தின் பேரில் இந்த கடிதத்தைஎழுதிபிரேமாவிடம் கொடுத்து உன் இருப்பிடத்திற்கு அவளை அனுப்புகிறேன். பிரபல நடிகையான உன் விலாசத்தைக் கண்டுபிடிக்க அவளுக்கு சிரமம் அதிகம் இருக்காது. உன்னைப் பற்றியும் தன்னுடைய பிறப்பின் ரகசியத்தைப் பற்றியும், பிரேமாவுக்கு ஒன்றும் தெரியாது. அவளை என் மகள் என்றே கூறியிருக்கிறேன். நீயும் உண்மையைத் தெரிவித்துக் கொள்ளாதே. அந்த உளுத்துப் போனவிஷயங்களைக் கூறி அவளது தூய இதயத்தை புண்படுத்தாதே. அவள் முகத்தைக் கூட உனக்குக் காண்பிக்கக் கூடாது என்று தான் எண்ணினேன். ஆனால் விதி என்னை வேறு விதமாக சதி செய்துவிட்டது. கடைசியில் உன்னையே அவள் அண்டிப் பிழைக்கும்படியாகி விட்டதற்கு வருந்துகிறேன்.

“கல்யாணி உன்னைப் போல அவளது வாழ்வையும் உபயோகமற்றதாக செய்து விடாதே. எனக்குக் குழந்தைகள் பிறந்து விட்டால் பிரேமாவின் மேல் இருக்கும் அன்பு குறைந்து விடுமோ என்று எண்ணினேன். எனக்குக் குழந்தைகளே பிறக்காததும் நல்லதாகி விட்டது. எனக்குள்ள பிரேமைக்கு இதைக்காட்டிலும் அத்தாக்ஷி வேறு என்ன வேண்டும்? சொன்ன சொல்லைத் தட்டாதவள் பிரேமா. சத்புத்திரி. அவள் என் சொல்லுக்கு மாறாக இந்தக் கடிதத்தை பார்க்க மாட்டாள். அவளிடம் உண்மையைக் கூறி விடாதே. அது மறைந்த ரகஸியமாகவே போகட்டும். நம் பிரேமாவின் வாழ்வை ஒளி உள்ளதாகச் செய். உன் பிரியமுள்ள உமா தாழ்மையுடன் கேட்டுக் கொள்வது இதுதான்.”

கடிதத்தைப் படித்து முடித்த நிர்மலாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. எதிரே சாந்தமே உருவாக நின்ற பிரேமாவை ஆவலுடன் அணைத்துக் கொண்டாள். கைக் குழந்தையாக அவள் விட்டு விட்டு வந்த பிரேமாவுக்கும் இந்த யுவதிக்கும் எவ்வளவு வித்தியாசம். சந்துருவின் அதே குறுகுறுத்த கண்கள். உயர்ந்த நாசி, சிவந்த மேனி, கவர்ச்சிகரமான உடலமைப்பு. தகப்பனின் சாயலேதான் மகளும். ஆனால் குணத்திலும் அப்படியே இருந்து விடாமல் இருக்க வேண்டும். இவ்வாறு எண்ணியது அவள் உள்ளம். தான் உமாவின் பால்ய சிநேகிதி என்று கூறி பிரேமாவுக்கு உதவி செய்ய முன் வந்தாள். அவளை அன்றே ஹாஸ்டலில் சேர்த்து படிக்க ஏற்பாடு செய்தாள்.

* * *

நிர்மலாவின் சிந்தனை கலைந்தது. இரவு முழுதும் ஆக்ஷி செலுத்திக் கொண்டிருந்த மழையும் புயலும் ஓய்ந்தது. காலைக் கதிரவன் அடிவானத்திலிருந்து முளைத்தெழுந்து கொண்டிருந்தான். இவ்வளவு நேர குழப்பத்திற்கு பிறகு நிர்மலாவின் மனதிலும் சாந்தியும் சந்துஷ்டியும் குடிகொண்டிருந்தன. “மகளின் முன்னேற்றமே தாயின் சந்தோஷம். இதற்காக அவள் எந்த விதமான தியாகத்திற்கும் தயங்கக் கூடாது” இவ்வாறு எண்ணிய அவள் உள்ளத்து இருளிலும் கதிரவனைப் போன்ற ஒளி ஏற்பட்டது.

இது செய்தி

வாஸன் அளித்த விருந்து

ஜெமினி அதிபர் ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன், "அபூர்வ சகோதரர்கள்," "நிஷான்" படங்கள் திரையிடப்பட்டதை முன்னிட்டு தம் ஸ்டுடியோ சிப்பந்திகளுக்கு ஒரு நேர்த்தியான விருந்தளித்தார். விருந்தளித்த பின், ஸ்ரீ. வாஸன், மேற்படி இரு படங்களையும் மிகக் குறுகிய காலத்திற்குள் சிறந்த முறையில் தயாரித்து முடிக்க தமக்கு உதவிய ஊழியர்களை யெல்லாம் குறிப்பிட்டு, இந்த வெற்றி தம்முடையதல்ல வென்றும், ஜெமினியின் வெற்றி என்றும் குறிப்பிட்டார்.

வாஸனுக்கு விருந்து

பம்பாய் சென்றிருந்த, ஜெமினி ஸ்டுடியோவின் முதலாளி எஸ். எஸ். வாஸன் அவர்களுக்கு, தாஜ் மஹால் ஹோட்டலில், ஸ்ரீமான்கள் மோஹன்லால் பர்ஜோத்யாவும், தாராசந்த் பர்ஜோத்யாவும் ஒரு தேநீர் விருந்தளித்தார்கள். இந்த விருந்துக்கு பம்பாய் பத்திரிகாசிரியர்கள் பலரும், சினிமாத் துறையிலுள்ள பிரமுகர்களும் வந்திருந்து, வாஸனைப் பாராட்டிப் பேசினார்கள்.

சுனிலால் மேத்தாவுக்கு உபசாரம்

இந்திய சலனப் பட சங்கத்தின் தலைவர் ராய் பகதூர் சுனிலால் சென்னைக்கு விஜயம் செய்திருந்ததை முன்னிட்டு, பங்களூர் ஸ்ரீனிவாஸ் பிக்சர்ஸ் ஸர்க்யூட் சொந்தக்காரர் ஸ்ரீ என். ஸ்ரீனிவாஸ ராவ் அவருக்கு கனிமாரா ஹோட்டலில் சென்ற மாதம் 31-ம் தேதி விருந்தளித்தார். இந்த விருந்தில், இந்திய சலனப் பட முதலாளிகள் சங்கத்தின் தலைவரான வாடியா, பிரகாஷ் பிக்சர்ஸின் டைரெக்டர் விஜய பட், வாஸன், மற்றும் சினிமாத் துறையில் சம்பந்தப்பட்ட பலரும் கலந்து கொண்டார்கள்.

சுனிலால் பேசுகையில், ஹிந்திப் படங்களைத் தயாரிக்க முன் வந்திருக்கும் தென்னிந்தியாவைப் பாராட்டி, இரு சிறந்த ஹிந்திப் படங்களைத் தயாரித்துள்ள எஸ். எஸ். வாஸனை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். தேசிய சர்க்கார் சினிமாத் தொழிலுக்கு உதவி செய்தல் அவசியம் என்பதையும் எடுத்துக் கூறினார்.

சினிமா உலகில், பாஷைப் பிரிவினைக் கிளர்ச்சிக்கு இடம் இல்லை யென்றும், பம்பாயில் சில தியேட்டர்களை தென்னிந்தியப் படங்களுக்கென ஒதுக்க வேண்டுமெனவும், டைரெக்டர் கே. சுப்ரமண்யம் கேட்டுக் கொண்டார்.

அடிக் கட்டுப்பாடு

'சினிமாப் படங்களின் நீளம் 11,500 அடிகளுக்கு மேற்படக் கூடாது' என்ற இந்திய சர்க்காரின் உத்திரவை மற்ற எல்லா மாஹாணங்களும் அங்கீகரித்து விட்டதாகவும், இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஏற்பாடு இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்து, சென்னை மாஹாணமும் இந்த உத்தரவுக்கு கட்டுப்பட வேண்டுமென்றும் இந்திய சர்க்கார் சென்னை சர்க்காருக்கு அறிவித்திருக்கின்றனர்.

தென்னிந்தியப் படங்களுக்கு அகில இந்திய 'மார்க்கெட்' இல்லாமையினால் பிரத்தியேக சலுகை காட்ட வேண்டுமென்று சென்னை சர்க்கார் செய்து கொண்ட வேண்டுகோளை நிராகரித்தே இந்திய சர்க்கார் இந்த உத்திரவைப் பிறப்பித்திருக்கிறது. அவசியமான சில பட விஷயங்களில் சலுகை காட்டலாமென்றும் இந்திய சர்க்கார் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

கட்டுப்பாட்டிற்கு எதிர்ப்பு

இம் மாதம் 7ம் தேதி, தென்னிந்திய பில்ம் சேம்பர் தலைவர் டி. ஆர். சுந்தரம் அடிக் கட்டுப்பாடு சம்பந்தமாக விவாதிக்க பத்திரிகாசிரியர்களை அழைத்திருந்தார். பல பத்திரிகாசிரியர்களும், சேம்பரின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களும், எஸ். எஸ். வாஸன், ஏ. வி. மெய்யப்பச் செட்டியார், டைரெக்டர் கே. சுப்ரமண்யம் முதலியவர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். தேனீர் விருந்துக்குப் பின் கூட்டம் டி. ஆர். சுந்தரத்தின் தலைமையில் ஆரம்பமாயிற்று.

தலைவர் பேசுகையில், சர்க்கார் இத் தொழிலில் அக்கரை எடுத்துக் கொள்ளவில்லை யென்றும், பல இடையூறுகளையே விளைவித்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். நீளத்திற்கும் படத்தின் தரத்திற்கும் சம்பந்தமில்லை என்பதற்கு சில உதாரணங்களை எடுத்துக் காட்

13420

டி. ஞூர், படங்களின் நீளத்தைக் கட்டுப்பாடு செய்ய முயற்சிப்பது தொழிலுக்கே குந்தகம் செய்வதாகும் என்றும், அதன் விளைவாக அரசாங்கத்தின் வருவாய் குறைந்து விடுமென்றும் விளக்கினார்.

பின்னர் பத்திரிகை நிருபர்கள் சிலர் எழுப்பிய சந்தேகங்களுக்கெல்லாம் எஸ். எஸ். வாஸன் தகுந்தவாறு பதிலளித்தார். "அமெரிக்கா, பிரிட்டன் தயாரிக்கும் படங்களில் சிறந்த படங்களாக உள்ள பத்து சதவிகிதப் படங்களே இந்தியாவுக்கு வருகின்றன. மற்ற தொண்ணூறு சதவிகிதப் படங்களும் மட்டமானவைகளே. தவிர, அதிகமான நீளமுள்ள படங்களையே அவர்களும் தயாரிக்கின்றனர்." இம்மாதிரி சில ரஸமான விஷயங்களை அவர் வெளியிட்டார். "படத்தின் நீளத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், சினிமா உற்பத்தியாளர்களின் சுதந்திரத்தை சர்க்கார் பறிக்கிறார்கள். மனிதன் தன் அறிவைக் கொண்டு சிருஷ்டிக்கும் கலைக்கு அரசாங்கம் இடைஞ்சலாக இருக்கக் கூடாது. படத்தின் நீளத்தைக் கட்டுப்பாடு செய்வதனால் படங்களின் தரம் உயரும் என்று நினைப்பது தவறு. சர்க்கார் உதவியின்றியே, கட்டுப்பாடு இல்லாமலே நம் படக் கலை அபிவிருத்தி அடைந்து தான் வந்துள்ளது"—என்று வாஸன் தம்முடைய பதில்களில் கூறினார். கடைசியாக அவர், 'அறிவுக் கலையைக் கட்டுப்படுத்துவது மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பாதிப்பதாகுமென்றும், அவசியமிருந்தாலன்றி நீளமான படங்களைத் தயாரிக்க முதலாளிகள் முயற்சிக்க மாட்டார்களென்றும்' குறிப்பிட்டார். தலைவர் வந்தனோபசாரம் கூறி கூட்டம் முடிந்தது.

"என் வாழ்க்கை இப்படி ஆகும் என்று தெரிந்திருந்தால் அந்தக் கணநேர இன்பத்திற்கு நான் இசைந்திருக்கவே மாட்டேனே......"

எம். எஸ். திரௌபதி.

வாஸன் கண்டனம்

இம்மாதம் 13ம் தேதி ஸினி டெக்னிஷியன்கள் சங்கக் கூட்டமொன்று, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெற்றது. பிரஸாத தலைமை வகித்தார். எஸ். எஸ். வாஸன் இந்திய

"உன் வாழ்க்கைக்கு ஏற்ற துணைவன் நான்தான்...எதற்கும் நீ பயப்படாதே மீனாட்சி" என்றானே அந்தப் பாவி மூர்த்தி!

எஸ். வி. சகஸ்ரநாமம்.

சர்க்காரின் பட நீளக் கட்டுப்பாட்டை, கண்டித்துப் பேசினார்.

கண் காட்சிகள்

திருவண்ணாமலையில், நகராண்மைக் கழகப் பொருட்காட்சி இம்மாதம் 25ம் தேதி முதல் அடுத்த மாதம் 6ம் தேதி வரை நடைபெறுமாம். இந்தக் கண்காட்சியில் எம். எம். தண்டபாணி தேசிகர், தியாகராஜ பாகவதர், என். எஸ். கிருஷ்ணன், லலிதா-பத்மினி இவர்களது கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

வருஷா வருஷம் போல இவ்வருஷமும் சென்னையில் டிஸம்பர் 15ம் தேதி முதல், அடுத்த வருஷம் ஜனவரி மாதம் 31ம் தேதி முடிய, அகில இந்திய காங்கிரஸ் கண்காட்சியை நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக் கண் காட்சியில் நடன சங்கீத இலாகாவை சிறந்த முறையில் நடத்த டைரெக்டர் கே. சுப்ரமண்யம் முயற்சி எடுத்து வருகிறார். கே. பி. சுந்தராம்பாள், எஸ். டி. சுப்புலக்ஷ்மி இவர்கள் நடிக்கும் நாடகமும் இருக்குமாம்.

குமாரி ருக்மணியின் வழக்கு

சினிமா நடிகை குமாரி ருக்மணி, தாம் சுயமாக சம்பாதித்த சுமார் அறுபதினாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களையும், நகைகளையும் தம்மிடம் ஒப்படைக்கும்படி கோரி, தமது தாயார்மீது ஹைக்கோர்ட் அசல் தரப்பில் பிராது தொடுத்திருக்கிறார். நடிகையின் தாயாராகிய பாலாமணி அம்மாள் என்ற ஜானகி அம்மாள் பிரஸ்தாப சொத்துக்களைப் பாகம் செய்ய வேண்டுமென்று கேட்டு எதிர்ப் பிராது தாக்கல் செய்திருக்கிறார். தமது ஜாதி வழக்கப்படி, பெண் சம்பாதித்த சொத்தில் தமக்கும் ஒரு பாகம் உண்டென்று அவர் தமது எதிர் மனுவில் கூறியிருக்கிறார். குமாரி ருக்மணி சில மாதங்களாக [தம் தாயை விட்டுப் பிரிந்து வசித்து வருகிறார்.

தேவமனோஹரி (தெலுங்கு)

ஆர்கேயெஸ் பிக்சர்ஸார் தங்களது "தேவ மனோஹரி" தமிழ்ப் படத்தைத் தெலுங்கு வசனங்களுடன் தயாரித்து வருவதாகத் தெரிகிறது. தெலுங்காக்கப் படும் படம் ஆந்திர நாட்டில் பொங்க லன்று திரையிடப்பெறுமாம்.

பாகவதர் கச்சேரியில் விபத்து

சென்ற மாத மத்தியில் வேலூரில் தியாகராஜ பாகவதரின் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. கூட்டத்தினரில் சிலர் ஒரு சுவர்மீது ஏறி கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்தனர். சுவர் சாய்ந்து கூட் டத்தினர் மீது விழவே சிலருக்குக் காயம் ஏற்பட்டதாம். பின்னர் பலத்த போலீஸ் பந்தோபஸ்துடன் கச்சேரி தொடர்ந்து நடைபெற்றதாம்.

'நிஷானு'க்குப் பாராட்டுகள்

இம் மாதம் 4-ம் தேதி ஜெமினியின் "நிஷான்" ஹிந்திப் படம் புது டில்லி ரீகல் தியேட்டரில் ஆரம்பமாயிற்று. ஆரம்பக் காட்சிக்கு இந்திய பாதுகாப்பு மந்திரி சர்தார் பல்தேவ் சிங் தலைமை வகித்தார். படத்தின் சிறப்பைப் பற்றி அவர் பேசுகையில், இந்தியா இப்படிப் பட்ட உன்னதமான படங்களைத் தயாரிப் பது பெருமைப்பட வேண்டிய விஷயம் என்றும், தென்னிந்தியர் ஒருவர் இப் படிப்பட்ட சிறந்த ஹிந்திப் படத்தைத் தயாரித்திருப்பது விசேஷமானது என் றும் குறிப்பிட்டார். ஜெமினி விளம் பர அதிகாரி வி. கே. என். சாரி, ஜெமினி அதிபரின் சார்பில் வந்தனோபசாரம் கூறி, வசூலான இரண்டாயிரம் ரூபாயை, காஷ் மீரில் வீரமாகப் போராடிய இந்தியத் துருப்புகளுக்கு வசதி செய்யும்படி தலை வரிடம் அளித்தார்.

பம்பாய்க்கு வந்திருக்கும். பிரபல பிரிட்டிஷ் பிலிம் கார்ப்பரேஷன் ஒன்றின் உப தலைவரான மிஸ்டர் எமானுவல் சில் வர்ஸ்டோன், "நிஷானை"ப் பார்த்து விட்டு, "உயர்தரமான நடிப்பு, ஒன் றுந்தரமான டைரெக்ஷன்" என்று புகழ்ந்து கூறினாராம்.

விஜயா ப்ரொடக்ஷன்ஸ்

சென்னையில் விஜயா ப்ரொடக் ஷன்ஸ் லிமிடெட் என்ற புதிய பிலிம் ஸ்தாபனம் ஆரம்பமாகி யிருக்கிறது. சினிமா உலகில் பிரபலமான நாகி ரெட்டிதான் இக் கம்பெனியின் மானே ஜிங் டைரெக்டர். இவர்கள் வாஹினி ஸ்டுடியோவை நீண்ட காலக் குத்த கைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சில புதிய வசதிகளை இந்த ஸ்டுடியோவில் செய்திருக்கிறார்க ளாம். தானே இயங்கும் லாபரெட்டரி யையும் நிர்மாணித்துள்ளார்களாம். "சாவுகார்" என்ற தெலுங்குப் படம் பிரசாத் டைரெக்ஷனில் தயாராகி வரு கிறதாம். "பாதாள பைரவி" என்ற கிராமியக் கதையைத் தெலுங்குப் பட மாகத் தயாரிக்க கே. வி. ரெட்டி முன் னேற்பாடுகளைச் செய்து வருவதாகவும் தெரிகிறது.

மஹாலிங்கத்திற்கு அபராதம்

அஜாக்கிரதையாகவும் வேகமாகவும் காரை ஓட்டிச் சென்றதாக பிரபல நடிக ரான டி. ஆர் மஹாலிங்கத்துக்கு எழும் பூர் பிரதம மாஹாண மாஜிஸ்டிரேட் நூறு ரூபாய் அபராதமும், அதைக் கொடுக்கத் தவறினால் மூன்று மாத சிறை தண்டனையும் விதித்தார்.

ராயப்பேட்டை ஹைரோட்டில் வசிப்ப வரான மஹாலிங்கம், ஆகஸ்ட் 18ம் தேதி யன்று பிற்பகல் நுங்கம்பாக்கம் ஹை ரோட்டில் அஜாக்கிரதையாகவும், வேக மாகவும் காரை ஓட்டிச் சென்றதாகவும், நுங்கம்பாக்கம் மேற்கு மாடத்தெருவைச் சேர்ந்த ஆறுமுக நாயகர் என்பவரது இரட்டை மாட்டு வண்டியின் மீதும், ஒரு சைக்கிள் மீதும் மோதியதாகவும், அதனால் வண்டியில் பூட்டப்பட்டிருந்த மாடுகளுக்கும், வண்டியிலிருந்த நாயக ருக்கும் காயமேற்பட்டதாகவும் வழக்கு. வக்கீல் மூலம் மஹாலிங்கம் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

மந்திரியிடம் தூது

சென்னை சர்க்கார், "ராமபாணம்" ஹிந்திப் படத்தை இம்மாஹாணத்தில் எங்கும் திரையிடக் கூடாதென தடை விதித்திருப்பது சம்பந்தமாக வட இந்தி யாவிலிருந்து, இந்திய சலனப்பட சங்கத் தைச் சேர்ந்த சுனிலால், இந்திய சல னப் பட முதலாளிகள் சங்கத்தைச் சேர்ந்த வாடியா, "ராமபாணம்" படத் தின் டைரெக்டர் ஆகியவர்கள் சென்னைக்கு வந்தார்கள். இந்தத் தடை உத்திரவை ரத்து செய்ய வேண்டு மென்று கோரி அவர்கள் சென்னை பிரத மரையும், கல்வி மந்திரியையும் இம் மாதம் முதல் தேதி பேட்டி கண்டார்கள்.

மந்திரி குமாரி

மாடர்ன் தியேட்டர்ஸார் "மந்திரி குமாரி" என்ற கிராமியக் கதையைப் படமாக்க திட்டமிட்டிருக்கிறார்கள். இப் படத்தில் இன்றைய பிரபல நக்ஷத்திரங் கள் பலர் நடிப்பார்களென்றும், எல்லிஸ். ஆர். டங்கன் இதை டைரெக்ட் செய் வாரென்றும் தெரிகிறது.

நம்பிக்கை மோசக் குற்றம்

சினிமா நடிகை வி. என். ஜானகி, 'நம்பி ஒப்படைத்த 37,000 ரூபாயை,

ஏமாற்றி நம்பிக்கைமோசம் செய்ததாக' கொடுத்த புகாரின் பேரில், எம். நாராயணன் என்பவர் குற்ற இலாகா போலீஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் தலா பத்தாயிரம் ரூபாய்களுக்கு இரு ஜாமீன்கள் கொடுத்ததின் பேரில் கமிஷனர் அவரை விடுதலை செய்திருக்கிறார்.

ஓர் இரவு

ஏவி. எம். அடுத்தபடி "ஓர் இரவு" படத்தைத் தயாரிக்கும் முயற்சிகளில் முனைந்திருக்கிறார். இப் படத்தின் கதை, வசனங்களை ஸி. என். அண்ணாத்துரை எழுதுகிறார். இப்படத்தில் நடிக்க டி. ஆர். மஹாலிங்கம், டி. கே. ஷண்முகம், எஸ். வி. சகஸ்ரநாமம், எஸ். பாலசந்தர், டி. ஆர். ராமச்சந்திரன், பி. எஸ். சரோஜா, எம். எஸ். திரௌபதி, கே. ராமசாமி முதலியோர் ஒப்பந்தமாகியிருக்கிறார்களாம். லலிதா, பத்மினி, குமாரி கமலா, வைஜயந்திமாலா இவர்களின் நாட்டியமும் படத்திலிருக்குமாம்.

விட்டுக்காரி

பம்பாய் கலாநிகேதன் கம்பெனியார், "விட்டுக்காரி" என்ற சமூக தமிழ்ப் படத்தைத் தயாரித்து வருகிறார்களாம். பெண் குலத்திற்காகப் போராடிய வீர மங்கை ஒருத்தியின் கதையாம் இது. தஞ்சை எஸ். எஸ். வாஸன் என்பவர் இப் படத்தை டைரெக்ட் செய்கிறாராம்.

நடிகைக்கு சிறைவாசம்

பம்பாய் செஷன்ஸ் நீதிபதி, பம்பாய் சினிமா நடிகை கிஷோரி ஆலத்தா என்பவருக்கு ஏழு வருஷ கடுங்காவல் தண்டனை விதித்தார். மாஜி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை மாடியிலிருந்து கீழே தள்ளி கொலை செய்துவிட்டாராம் இந்த நடிகை.

ஏசுநாதர் வாழ்க்கை

ஏசுநாதரின் வாழ்க்கையை ஒரு அகில உலகப் படமாகத் தயாரிக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. "தெய்விகத் துன்ப முடிவு" என்ற பெயரில் படம் தயாரிக்கப்படுமாம், ஜியார்ஜ் கிராண்டியர் என்ற பிரஞ்சு டைரெக்டர்தான் படத்தைத் தயாரிப்பாராம். படம் பிரஞ்சு, ஆங்கிலம், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நான்கு பாஷைகளிலும் தயாரிக்கப் படுமாம். இந்தப் படத்தைத் தயாரித்து முடிக்க ஒரு கோடி ரூபாய் ஆகுமென்றும், இந்த முயற்சிக்காக பிரிட்டன் சுமார் ஏழு லக்ஷம் ரூபாய் கொடுக்குமென்றும் தெரிகிறது.

ஜெயகுமாரியின் நடனம்

சென்ற மாதம் 16ந் தேதி ஸ்ரீமதி ஜெயகுமாரியின் பரத நாட்டியக் கச்சேரி, சென்னை கோகலே ஹாலில், இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடி ஆதரவில் நடைபெற்றது. அவரது ஜிப்ஸி நடனம் சிறப்பாக இருந்ததாம்.

ஜெயகுமாரி

நாம் இருவர்

சென்ற மாதம் 29, 30 இரு தேதிகளில் சுகுமார் டிராமாட்டிக் ட்ரூப்பின் "நாம் இருவர்" நாடகம், மயிலை ரஸிக ரஞ்சனி சபாவில் நடைபெற்றது. டி. ஆர். மஹாலிங்கம் நடிக்கும் நாடகங்களுக்கு, அவரது பாட்டுகளுக்காகவேதான் ரஸிகர்கள் போகிறார்கள். ஆனால், அந்த எண்ணத்துடன் சென்ற ரஸிகர்களுக்கு மேற்படி நாடகங்கள் ஏமாற்றத்தையே அளித்தனவாம்.

சினிமாத் தொழில் சம்மேளனம்

இம்மாதம் முதல் தேதி, தென்னிந்திய பில்ம் சேம்பரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், இந்திய சினிமா சங்கத் தலைவர் ஸ்ரீ. சுனிலால் பேசினார். அவர், சினிமாத் தொழிலின் நலனை முன்னிட்டு இந்தியாவிலுள்ள சினிமாச் சங்கங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, ஒரு சம்மேளனத்தை அமைக்க வேண்டுமென வற்புறுத்தினார். தாம் சீக்கிரமே, பல்வேறு மாஹாணங்களிலுள்ள சினிமாத் தொழில் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் ஒன்றைக் கூட்டப் போவதாகவும், அனைவரும் அதில் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இந்திய நடனங்கள்

ஒரு நாட்டின் நாகரீகத்தை ஓலைச் சுவடிகளையும், கல்வெட்டுகளையும் மட்டுமே கொண்டு நிர்ணயித்து விட முடியாது. காலத்தினால் அழியாது, மகிமையும், நிரந்தரமும் பெற்று, வருங்கால சந்ததிகளின் வாழ்க்கையை செப்பனிடக் கூடிய சக்தியைத்தான் ஒரு தேசத்தின் கலாச்சார சிறப்புக்கு அளவு கோலாகக் கொள்ளலாம்.

இந்தியர்களாகிய நாம் நமது நாகரீகத்தைப் பற்றி பெருமைப் பட்டுக் கொள்ளலாம். எங்கு திரும்பினாலும் தொன்று தொட்ட நம் பழைமையான பண்பாட்டிற்கு அத்தாக்ஷியாக அழியாச் சின்னங்கள் இருக்கின்றன. கோயில் சுவற்றிலுள்ள சிற்பங்கள், வர்ண ஜால சித்திரங்கள், ஓலைச் சுவடிகள், சிறந்த நெசவு வேலை, நம் முன்னோர்களின் பழக்க வழக்கம் இவைகள் யாவும், நம் மூதாதையர்கள் எவ்வளவு மேம்பாட்டுடன் வாழ்ந்து வந்தார்கள் என்பதையும், தங்களது குணாதிசயங்களில் எவ்வளவு நாசூக்காக இருந்தார்கள் என்பதையும், தங்கள் ஆடை விஷயங்களில் எவ்வளவு நேர்த்தியுடன் விளங்கினார்கள் என்பதையும், அவர்கள் எத்தகைய அறிவாளிகளாகப் பிரகாசித்து வந்தார்கள் என்பதையும் நன்கு அறிய முடிகிறது. இவைகளையெல்லாம் அறியும்போது நம் சிற்றறிவை நினைத்து நாமே வெட்கத்துடன் தலை குனிய வேண்டியதாக இருக்கிறது.

மனிதன் கற்க வேண்டிய 'ஆய

கலைகள் அறுபத்தி நான்கினை'யும் பற்றி சுவடிகள் கூறுகின்றன. உலகம் பூராவும் சுற்றிய நவநாகரீக வாலிபனைக்கூட இந்தக் கலைகள் ஆச்சரியத்தில் மூழ்கடிக்கின்றன. நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக போற்றப்பட்டு, காப்பாற்றப்பட்டு வந்த பல கலைகளில் முக்கியமானது நிதர்சனமானது நடனக் கலைதான். இக் கலை இத் தேசமெங்கும் வியாபித்திருக்கிறது. ஒரு பெரிய நதி தன் பல கிளை நதிகளின்மூலம் பல இடங்களிலும் பாய்வதைப் போல நடனக் கலையும் தமிழ் நாடு, கேரளம், வட இந்தியா, முதலிய இடங்களில் கிராமிய கூத்துக்களாகவும் மற்றும் பல ரூபங்களிலும் பரவியிருக்கிறது.

மிருணாளினி சாராபாய்

நடனங்களில் எது மிகவும் உயர்தரமானது என்பதைக் குறிப்பிட சரியான ஆதாரங்கள் அதிகம் இல்லை. தமிழ் நாட்டில், அன்னியர்களின் ஆதிக்கம் அதிகம் ஏற்படாமையினாலும், இக் கலைக்கு சோழ பாண்டிய மன்னர்களின் ஆதரவு இருந்தமையினாலும் இக் கலை பழைய சம்பிரதாயப்படியே இருக்கிறது என்று அனுமானிக்கலாம்.

நடனக் கலை அபிமானிகளுக்கு இன்று பிரதானமான நான்கு வகை நடனங்கள் இருப்பது தெரியும். தமிழ் நாட்டில் முக்கியமாக இருப்பது 'பரத நாட்டியம்': ஆதி கவிகளால் வர்ணிக்கப்பட்ட லாஸ்யத்திற்கு அதிக பிரதான்யம் கொடுத்து பெண்மணிகளால் தனிமையில் ஆடப்படுவதாகும் இது. சிருங்காரம்தான் இந்த நாட்டியத்தின் பிரதான அம்சமாகும். இப்பொழுது நடக்கும் பரத நாட்டியக் கச்சேரிகள் 'அலாரிப்பு'டன் ஆரம்பமாகி ஒரு ஸ்லோகத்துடன் (மங்களம்)முடிவடைவது வழக்கமாக இருக்கிறது. இந்த வழக்கத்தை வகுத்தவர்கள் 'தஞ்சாவூர் சகோதரர்கள்' என்று பிரசித்தி பெற்ற சின்னையா, பொன்னையா, சிவானந்தன், வடிவேலு என்ற நான்கு பேர்களாகும். இவர்களில் கடைசி சகோதரரான வடிவேலுவை பிற்காலத்தில் திருவாங்கூர் அரச குடும்பத்தினர் ஆதரித்து வந்தனர்.

கதகளி என்ற நடனம், பெரும்பாலும் ஆண்களால் ஆடப்பட்டுவரும் நடன நாடகமாகும். இந்த நாட்டியத்தில் நவரஸங்களும் அவைகளின் ரஸனை சிறிதும் குன்றாது கையாளப்படுகிறது. அந்த நடனத்தில் மேக்-அப் முக்கியத்வம்உள்ளதாகும். வழக்கத்திற்கு மாறான உடை அலங்காரங்களும். தோற்றமும் நமது புராணக் கதைகளுக்கு ஒரு தனி சோபிதம் அளித்து அழகு படுத்துகின்றன.

கதகளி நடனமாடி வருகிறவர்கள் பரம்பரை காலமாக பக்தி சிரத்தையுடன் ஆடி வருகிறார்கள். மூதாதையர்கள் எழுதி வைத்திருக்கும் நடன சாஸ்திரத்திலிருந்து இது நன்கு புலனாகிறது.

கதக் நாட்டியம். இந்த நாட்டியத்திற்குப் பெரும்பாலும் முகம்மதியர்களின் ஆதரவுதான் இருந்திருக்கிறது. இதன் முக்கிய அம்சம் பாத அசைவுகள்தாம்.

மலை ஜாதியினரின் மணிபுரி நடனம். நயமும் கவர்ச்சியும் மிக்க ஒரு வகை கிராமிய நடனம். பால்போன்ற வெண் நிலவினிலே, ஆண்களும் பெண்களும் ஒன்று சேர்ந்து, ராதா-கிருஷ்ணன் காதல் லீலைகளை ஆடிக் காட்டுவார்கள்.

இந்த நான்கு பிரதான நடனங்களைத் தவிர நம் கவனத்தைக் கவரக்கூடியது, நடன சாஸ்திரத்திற்கு நெருங்கிய ஒற்றுமையுடன் விளங்கிய, 'பாகவத மேலா நாடகம்' என்ற ஒரு வித நடன நாடகம் ஆகும். அநேகமாக இது மறைந்தே போய்விட்டது. தஞ்சாவூரைச் சுற்றியுள்ள சில கிராமங்களில் மட்டும் வசந்த காலங்களில் இது நடைபெறுகிறது. இதில் ஆடுகிறவர்கள் பரம்பரையாக இருந்து வருவதுடன், இந்த ஆட்டத்திற்கான ஆடைகளை பவித்திரமான பொருளாகப் பாதுகாத்து வருகின்றனர். இந்த நாட்டியத்தில் ஒவ்வொரு கதா பாத்திரமும், தனித்தனியே அரங்கிற்கு வந்து தன்னைத்தானே அறிமுகம் செய்துகொள்வது விசித்திரமானது. பிரஹலாதன் கதைதான் அநேகமாக நடிக்கப்படும்.

குதியாட்டம், மலையாளத்தில் சாக்கியர்களால் ஆடப்படும் வடமொழியில் அமைந்த ஒரு நடன நாடகம். தற்கால விஷயங்களையும் இதில் புகுத்தியிருக்கிறார்கள். இந்த நடனத்தில் பிரதான அம்சம் அபிநயங்கள் தாம். இந்த நடனம் நடந்து முடிய எட்டு தினங்களாகும்.

மலையாளக் கோயில்களில் ஆடப்படுவது 'கிருஷ்ணாட்டம் களி' என்ற நடன நாடகமாகும். இந்த நடனத்திற்கான கவிகளெல்லாம் வடமொழியிலேயே இருக்கின்றன.

ஆந்திர தேசத்தில் குச்சிபூடி என்ற இடத்திலே 'பாமா கலாபம்' என்ற நடன நாடகம் பிரபலமாக இருந்து வருகிறது. இந்த நடன நாடகம் ஒன்பது இரவுகள் சேர்ந்தாற்போல நடைபெறும். இந்த நடன நாடகத்தில் பெரும்பாலும் வடமொழி ஸ்லோகங்கள்தாம் பாடப்படுகின்றன.

பிரார்த்தனைக்குப் பிறகு பாமாவாக நடிக்கும் நடி திரைக்குப் பின்னாவிருந்தபடியே தன்னை அறிமுகம் செய்து கொள்வாள். இந்த அறிமுகம் நூதனமாக இருக்கும். அந்த நடி தன் கூந்தல் முடியை திரைக்கு வெளியே, நாடகம் பார்க்க வந்திருப்பவர்களுக்குத் தெரியும்படியாக, வைத்துக் கொள்வாள். இம்மாதிரி 'கூந்தல் முடியை'க் காண்பிப்பதற்கு விசேஷ காரணம் இருக்கிறது. அதாவது, தன்னுடைய நாட்டியத் திறமையைப் பரிக்ஷை செய்ய நினைக்கிறவர்கள் அரங்கேறி வரலாம் என்று நடி 'சவால்' கூறுவதற்கு அடையாளமாம் இது. பாகவதத்திலுள்ள "பாரிஜாதபஹரணம்" என்ற கதையைத் தான் அவர்கள் அநேகமாக ஆடி வருகிறார்கள்.

கலைகள் மறு மலர்ச்சி அடைந்து வரும் இன்னாளில், நமது புராணக் கலைகளின் மேன்மையையும், பழக்கங்களையும் நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் சாஸ்திர ரீதியில் தற்கால அம்சங்களைப் புகுத்துவதற்கான திறமையும் ஊக்கமும் நமக்கு ஏற்படும்.

நமது நித்திய வாழ்க்கையில் இந்த புனிதமான, புராதனமான ஸம்ஸ்காரத்தைக் கடைப் பிடிப்பதுடன் மட்டுமின்றி, நம் மனதிலும் இந்தக் கலையைப் புதுப்பிக்க இடம் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் வாழ்க்கையின் லக்ஷியத்தை நாம் அடைய முடியும்.

தெலுங்கில்
அபூர்வ சகோதரர்கள்

"அபூர்வ சகோதரர்கள்" படத்தைத் தெலுங்கு வசனங்களுடன் தயாரித்து வெளியிடும் முயற்சியில் ஜெமினி ஸ்டுடியோஸார் முனைந்திருக்கின்றனர். டைரெக்டர் புல்லையாவின் மேற்பார்வையில் இம்முயற்சி நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

அபூர்வ சகோதரர்கள்—ஒரு நூதனப்படம்

ராதா, பானுமதி, நாகேந்திர ராவ்! நல்ல நடிப்பு !

தமிழ் நாட்டு ரஸிகர்கள் ஜெமினிக்கு மிகவும் கடமைப் பட்டவர்களாவர். காரணம், அவர்கள் மீதிருந்த அனாவசியமான குற்றச்சாட்டை, ஜெமினி தயாரிப்பான "அபூர்வ சகோதரர்கள்" நிவர்த்தித்துவிட்டதனால்தான். "புராணப் படங்களைத்தான் தமிழ் நாட்டு ரஸிகர்கள் விரும்புகிறார்கள் என்பது பட முதலாளிகளின் கூற்று. கற்பனைக் கதையான "அபூர்வ சகோதரர்கள்" அமோகமான ஆதரவைப்பெற்று, அவர்களது குற்றச்சாட்டை பொய்யாக்கி வருகிறது. நிற்க.

மார்த்தாண்டனுக்கு, மஹேந்திர பூபதி மீது பகை இருந்து வருகிறது. பூபதிக்கு ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. டாக்டர் நஞ்சப்பா, அவைகளைத் தனித் தனியே பிரிக்கின்றார். உடலைப் பிரித்த அந்த அபூர்வப் பிறவிகளின் உணர்ச்சியைப் பிரிக்க அவரால் முடியவில்லை. மார்த்தாண்டன், எதிர்பாராத சமயத்தில் மஹேந்திர பூபதியைத் தாக்கி, அவன் கோட்டைக்கும் தீ வைத்து விடுகிறான். ஆனால் டாக்டர் குழந்தைகளைக் காப்பாற்றி விடுகிறார்

இரட்டையர்களில் ஒருவனான விஜயன் நகரத்திலும், மற்றவனான விக்ரமன், உண்மை ஊழியன் மருதையின் பாதுகாப்பில் காட்டிலும் வளர்ந்து வருகின்றனர். காஞ்சனா என்ற அழகிக்கும் விஜயனுக்கும் காதல் ஏற்படுகிறது. காஞ்சனா மீது கொடியன் மார்த்தாண்டனும் ஆசை கொள்கிறான்.

இரட்டையர்களுக்கு இருபது வயதானதும், அவர்களிடம், டாக்டர் நஞ்சப்பா அவர்களுடைய வாழ்க்கையின் ரகஸியத்தைக் கூறுகின்றார். சகோதரர்கள் தங்கள் குல வைரியான மார்த்தாண்டனைப் பழிவாங்குவதென சபதம் எடுத்துக் கொள்கின்றனர். காஞ்சனாவை விஜயன் தப்புவித்து, காட்டிற்கு அழைத்துச் செல்லுகிறான். காஞ்சனா—விஜயன் இன்பமான காதல் வாழ்க்கை விக்ரமனின் உணர்ச்சியைப் பாதிக்கிறது. தன்னால் சகோதரர்களுக்குள் சச்சரவு நேரிடுவது கண்ட காஞ்சனா அங்கிருந்து கிளம்பி, பிறகு மார்த்தாண்டனிடம் சிக்கிக் கொள்கிறாள் மார்த்தாண்டனுக்கு தன் பரம வைரியான பூபதி வம்சத்தின் இரட்டையர்கள் உயிரோடு இருப்பது தெரிந்து விடுகிறது. விஜயன் நகை வியாபாரி போல வந்து, காஞ்சனாவுடன் தப்பி ஓட முயற்சிக்கும் சமயத்தில் பிடிபடுகிறான். மார்த்தாண்டன் விஜயனைக் கட்டி வைத்து, அவனுடைய சகோதரனின் இருப்பிடத்தைக் கூறும்படி, சவுக்கால் அடிக்கிறான் அவன் அடிபட்டுத் தவிக்கும் உணர்ச்சி காட்டிலுள்ள விக்ரமனைப் பாதிக்கிறது. விஜயன் இறந்து விட்டதாக டாக்டர் கூறி, அந்த உடலைத் தானே எடுத்துப் போய் சிகித்ஸை செய்து காப்பாற்றுகிறார் சகோதரன் சவுக்கடிபடுவது தெரிந்து சந்தோஷிக்கும் விக்ரமனை மருதை நிந்திக்கவே, அவன் மனம் மாறுகிறது. போய் மார்த்தாண்டனை எதிர்த்து மடிகிறான் அதே சமயம் விஜயன் அங்குவந்து மார்த்தாண்டனை வாள் போரில் வென்று மண்ணோடு மண்ணாக்கி தன் சபதத்தை நிறைவேற்றுகிறான்

பிரபல பிரஞ்சு நாவலாசியர் அலெக்ஸாண்டர் டூமாஸ் எழுதிய "கார்ஸிகன் பிரதர்ஸ்" என்ற கதையைத் தழுவி இது படமாக்கப்பட்டிருக்கிறது மூலக் கதையின் சாரம் குன்றாது, சில புதிய சம்பவங்களையும் புகுத்தி, கதை சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது.

ஜெமினியின் படங்களில், வசனம் திருப்திகரமாக அமைவதில்லை என்பது ஒரு பெரும் குறையாகவே இருந்து வந்திருக்கிறது "அபூர்வ சகோதரர்களை"ப் பொறுத்த மட்டில் இந்தக் குறையும் நீக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமே! கனகச்சிதமாக சம்பாஷணைகளை எழுதியிருக்கிறார்கள், ஜெமினி கதை இலாகாவினர்.

படத்தில், யார் யார் நன்றாக நடித்திருக்கிறார்கள் என்று கூறுவதை விட, யாருடைய நடிப்பு சோபிக்க வில்லை என்று குறிப்பிடுவதே சுலபம். ஏனென்றால், நடிகர் நடிகைகள் அனைவருமே தம் தம் பாகங்களை உணர்ந்து சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

மார்த்தாண்டனாக (வில்லன்) நாகேந்திர ராவ் 'நடித்திருக்கிறார்' என்று கூறுவதைவிட, அவர் அந்தக் கதாபாத்திரமாக ஒன்றிவிட்டார் என்று எழுதுவதே பொருந்தும் அவ்வளவு இயற்கையாக இருக்கின்றன அவருடைய மிடுக்கான தோற்றமும், கம்பீரமான பேச்சும் அவருடைய தமிழ் உச்சரிப்பில் மட்டும் 'சொல்பா' கன்னடத்தின் சாயை

இருக்கிறது. எனினும், அவரது அபார நடிப்பில் அது அடிபட்டுப் போகிறது.

வெவ்வேறான இரண்டு பாத்திரங்களை ஏற்று நடிக்கும் ராதாவின் நடிப்பு போற்றத் தக்க வகையில் இருக்கிறது. இரண்டொரு இடங்களில், 'நடிப்பது ராதா தானா?' என்று வியக்கும்படியும் இருக்கிறது. விஜயன் பாத்திரத்தைவிட விக்கிரமன் பாகத்தில் அவரது நடிப்பு நன்றாக இருக்கிறது. விஜயன் சவுக்கடி படும் கட்டத்தில் சந்தோஷத்தால் கொக்கரிக்கும் கட்டத்திலும், முடிவில் உயிர் போகும் சமயம், தன்னை மன்னிக்கும்படி சகோதரனிடம் வேண்டும் சந்தர்ப்பத்திலும் ராதாவின் நடிப்பு உச்ச நிலையை அடைகிறது. நகை வியாபாரியாகவும், வண்டிக்காரனாகவும் நடிக்கும் கட்டங்களில் அவரது நடிப்பு அநாயாசமாய் இருக்கிறது.

சாந்த சொரூபியான டாக்டர் நஞ்சப்பாவின் பாத்திரத்தை ஜி. பட்டு அய்யர் அனுபவித்து நன்றாக நடித்திருக்கிறார். சோமு, தம்மை வெறும் ஸ்டன்ட் நடிகர் என்று எண்ணியிருந்த ரஸிகர்களுக்கு, தாம் ஒரு நல்ல நடிகரும் கூட என்பதை மருதையாக நடித்து, விளக்கியிருக்கிறார். விக்ரமனைக் கண்டிக்கும் காட்சியில் அவரது நடிப்பு பாராட்டக் கூடியதாய் இருக்கிறது.

காஞ்சனாவாக பானுமதி வெகு லாவகமாக நடித்திருக்கிறார். குறும்புக்காரப் பெண்ணாக நடிப்பதில் அவருக்கு நிகர் அவரேதான்! காதல் காட்சிகளில் வெகு இயற்கையாகவும், அநாயாசமாகவும் அவர் நடித்திருக்கிறார். சமையற்காரியாகமாறி, 'ஆட்டம் ஆடி, பாட்டுப் பாடி' வீரர்களையெல்லாம் ஏமாற்றி கம்பி நீட்டும் காட்சியையும், பின்னர் விஜயன் முன்னிலையில் வேலைக்காரி போல பேசி நடிப்பதையும் 'பிரமாதம்' என்று ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம். இந்தக் காட்சிகளுக்காகவே படத்தை ரஸிகர்கள் பலமுறைபார்ப்பார்கள்என்பதுநிச்சயம். அடுத்தபடி, கோஷ்டி நடனம் ஆடும் பெண்களின் கூட்டத்தில் புகுந்து அவர்களுடன் கூட தகுந்தபடி ஆடத் தெரியாது அவர் தவிப்பதும் படம் பார்ப்போரை பரவசப்படுத்தும்.

தோழி மரகதமாக சூர்யப்ரபாவும், நீலவேணியாக லக்ஷ்மி ப்ரபாவும் நன்றாக நடித்திருக்கின்றனர். நாராயண்ராவுக்கு இப்படத்தில் அதிக சந்தர்ப்பம் அளிக்கப்பட வில்லை.

பாட்டுகளில் பானுமதி (பல பாஷைகளில்) பாடும் ''லட்டு லட்டு'' என்ற பாட்டு தமாஷாகவும், ''மானும் மயிலும்'', ''மனமோஹனமே'' என்றஇரு பாட்டுகள் இனிமையாகவும் இருக்கின்றன.

படத்தின் ஒளி, ஒலிப் பதிவுகள் அபா மாக இருக்கின்றன. ஒரு நடிகரே, இரு பாகங்களில் ஒரே காட்சியில் தோன்றுவதைப் படம் பிடிப்பது மிகவும் சிரமமான, நுட்பமான வேலையாகும். அதை மிகவும் பிரமிக்கத் தகுந்த முறையில் செய்து முடித்திருக்கிறார்கள். இரு சகோதரர்களும் அருகருகே குதிரைகளில் வருவது, விக்ரமனை விஜயன் கன்னத்தில் அறைவது, அவர்களுக்குள் நடக்கும் கட்டாரிச் சண்டை, இவைகள் ஒளிப் பதிவாளரின் அபாரத் திறமைக்கு ஒரு சில எடுத்துக் காட்டுகளாகும்.

இரவு நேரத்தின் சப்தங்கள், புறாக்கள் சிறகு அடித்துக் கொள்ளும் சப்தம், கத்தி, கட்டாரி முதலியன உராயும் சப்தம் போன்ற சிறு விஷயங்களைக்கூட நுட்பமாக கவனித்து சேர்த்திருப்பது போற்ற வேண்டியதே.

கத்திச் சண்டைகள் மயிர்க் கூச்செறியும் முறையில் இருக்கின்றன. இரண்டு வாள்களுடன்வில்லனும், கதாநாயகனும் போர்புரியும் காட்சியைச் சேர்த்திருப்பது ஒரு சிறந்த முயற்சியாகும்.

ஆசார்யா ஒரு சிறந்த டைரெக்டர் என்பதை ''அபூர்வ சகோதரர்கள்'' ஸ்திரப்படுத்துகிறது. அபூர்வப் பிறவிகளான சகோதரர்களில் ஒருவனுக்கு ஏற்படும் உணர்ச்சி மற்றவனைப் பாதிக்கும் என்பதை சில ஷாட்டுகள் மூலம் ஜனங்கள் மனதில் பதியும்படி விளக்கியிருக்கிறார். ஒவ்வொரு நடிகரையும் 'நடிக்க' வைத்திருப்பதும் அவர் திறமைதான்.

இவ்வளவு சிறப்பான படத்தில் சிற்சில குறைபாடுகளும் இல்லாமல் போகவில்லை. இரட்டையர்களின் தாய், டாக்டரிடம் தன் குழந்தைகளைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொள்வதாக உள்ள கட்டம் 'சப்'பென்றிருக்கிறது. மேலும், அநாவசியமாக வளர்த்தப்பட்டிருக்கிறது. அந்த சில அடிகளை வெட்டி விட்டால் கதைப் போக்கு பாதிக்கப் படாது. நடனங்கள் அளவுக்கு மிஞ்சியிருக்கின்றன. படத்தின் முன் பகுதி மெதுவாக 'நகருவதற்கு'க் காரணம் இவைகள் தாம். இவைகளைக் குறைத்து விட்டால் படத்தின் விறுவிறுப்பும் அதிகரிக்கும்.

கடைசியாக, விக்ரமனின் சமாதிக்கு விஜயன், காஞ்சனா, டாக்டர், மருதை இவர்கள் மலர் தூவுவதுடன் படத்தை முடித்திருந்தால் பிரமாதமாக இருந்திருக்கும். அதைவிட்டு அதற்கும் பிறகு ஒரு நடனத்தைச் சேர்த்திருப்பது அவ்வளவு ரஸிக்கும்படியாக இல்லை.

மொத்தத்தில் '''அபூர்வ சகோதரர்கள்'' தமிழன் பெருமைப் பட்டுக் கொள்ளக் கூடிய ஒரு சிறந்த படம். ''சிவம்''

பிரம்ம லோகம்

வாயில் இருக்கிறதாம். மாதுரி தேவி, நரசிம்ம பாரதி, ஆழ்வார் குப்புசாமி நடிக்கும் இப் படத்தை எல்லிஸ். ஆர். டங்கன் டைரெக்ட் செய்து வருகிருர்.

விஜய குமாரி

ஏ. எஸ். ஏ. சாமியின் டைரெக்ஷனில் தயாராகி வரும் "விஜய குமாரி"யின் படப் பிடிப்பு முடிவடையும் நிலையில் இருக்கிறதாம். ஜுபிடரின் இப்படம் பொங்கல் தினத்தன்று திரையிடப் படக்கூடும்.

இதய கீதம்

ஜோஸப் தளியத் டைரெக்ஷனில் "இதய கீதம்" தயாராகிவருகிறது. ராஜகுமாரி, மஹாலிங்கம் சம்பந்தப் பட்ட அரண்மனைக் காட்சியொன்று சமீபத்தில் படமாக்கப் பட்டதாம். டிஸம்பர் முதல் படம் ஸதர்ன் ஸ்டுடியோவிலும் தயாராகுமென்று தெரிகிறது.

பாரிஜாதம்

லாவண்யாவின் "பாரிஜாதம்" கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் டைரெக்ஷனில் உருவாகி வருகிறது. எம். வி. ராஜம்மாவும் மஹாலிங்கமும் சம்பந்தப் பட்ட சில காட்சிகளும், வெளிப்புறக் காட்சிகள் சிலவும் சமீபத்தில் படமாக்கப் பட்டனவாம்.

ராஜ விக்கிரமா

கெம்பராஜின் "ராஜவிக்கிரமா" படப்பிடிப்பு அநேகமாக பூர்த்தியாகி விட்டதாம். எம். வி. ராஜம்மாவின் நாட்டியம் ஒன்று சமீபத்தில் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டியோவில் படம் பிடிக்கப் பட்டது. இப்படத்திற்கான கதை, வசனம், பாட்டுகளை நடராஜ கவி எழுதியிருக்கிருர். பிரபல குட்டி நக்ஷத்திரம் ஒருவரின் பரத நாட்டியத்தையும் படத்தில் சேர்க்க சம்பந்தப் பட்டவர்கள் முயற்சி செய்து வருகிருர்களாம்.

உண்மையின் வெற்றி

டெஸ்பி பிலிம் ஸிண்டிகேட் தயாரிக்கும் "உண்மையின் வெற்றி" படப் பிடிப்பு ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் துரிதமாக நடைபெற்று வருகிறது. ஹரிபாய் ஆர். தேசாய் டைரெக்ட் செய்யும் இப் படத்தின் வசனங்களையும் பாட்டுகளையும் நடராஜ கவி எழுதியிருக்கிருர்.

வாழ்க்கை

இன்னும் ஒன்றிரண்டு காட்சிகள் தாம் பாக்கியிருக்கின்றனவாம். அது முடிந்தால் "வாழ்க்கை" திரையிடப் படலாமாம். டிஸம்பர் மாதம் முதல் வாரத்தில் தமிழ் நாட்டின் பல நகரங்களில் திரையிட நிச்சயமாகி விட்டதாம். எஸ். வி. சகஸ்ரநாமம், திரௌபதி டி. ஆர். ராமச்சந்திரன், வைஜயந்திமாலா, கே. சாரங்கபாணி பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை 'மேஞ' வெகு சிரமப்பட்டு சிறப்பாகத் தயாரித்து வருகிருராம். லலிதா-பத்மினி சகோதரியர், தற்காலப் பிரச்னையை அடிப்படையாகக் கொண்ட கதையொன்றை நாட்டியமாக ஆடியிருக்கிருர்களாம். "பாரத சமுதாயம்" என்ற பாரதியாரின் பாட்டிற்கான ஒரு கோஷ்டி நடனம் படத்தில் சேர்க்கப்பட்டிருப்பதுடன், டி. கே பட்டம்மாள், டி எஸ். பகவதி, ராஜேஸ்வரி இவர்களின் கர்ணமிருதமான பாட்டுகளும் இருக்கின்றனவாம்.

பொன் முடி

மாடர்ன் தியேட்டர்ஸின் "பொன் முடி" படப் பிடிப்பு முடிவடையும் தருவாயில் இருக்கிறதாம்.

ஔவையார்

ஜெமினியின் "ஔவையார்" படப் பிடிப்பு கொத்தமங்கலம் சுப்புவின் டைரெக்ஷனில் நடைபெற்று வருகிறது. கே. பி. சுந்தராம்பாள், நாராயண் ராவ், சுந்தரிபாய், சுப்பு, பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்திற்கென, திருவள்ளுவர் சம்பந்தப்பட்ட சில காக்ஷிகள் சமீபத்தில் படமாக்கப் பட்டனவாம். திருவள்ளுவராக ஜி. பட்டு அய்யர் நடிக்கிருர்.

லைலா மஜ்னு

பாலாஜியின் 'லைலா மஜ்னு' தமிழ்ப்படப்பிடிப்பு நியூடோனில் நடைபெற்று வருகிறது. மஹாலிங்கம், ராஜம்மா, எஸ். வி. சகஸ்ர நாமம், கிருஷ்ணன், மதுரம் முதலியவர்கள் நடிக்கும் இப் படத்தில், வி. என். ஜானகி ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார். நாகூர்தான் படத்தின் டைரெக்டர்.

ஏழை படும் பாடு

பக்ஷிராஜாவின் "ஏழை படும்பாடு" படம் ராம்னுத் டைரெக்ஷனில் உருவாகி வருகிறது. நாகர்கோயில் மஹாதேவனும், நாகய்யாவும் சம்பந்தப்பட்ட காட்சிகள் சமீபத்தில் தயாராயின.

புஸ்தகப் பொழுது

வக்கீல்

[வக்கீல் : மாதப் பத்திரிகை. விலாஸம்: தபால் பெட்டி நெ. 26, கும்பகோணம். தனிப் பிரதி விலை அணா நான்கு]

பல தொழில் வக்கீல்களை ஆசிரியர்களாகக் கொண்ட ‘வக்கீல்’ மாதப் பத்திரிகை பொது ஜனங்களுக்கு மிகவும் உபயோகமானதாக இருக்கும். இந்தப் பத்திரிகையில் பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சட்டங்களையும், சர்க்கார் அவ்வப்போது இயற்றும் சட்டங்களையும், மற்றும் கன்ட்ரோல் சம்பந்தமான விஷயங்களையும் எல்லோருக்கும் புரியும் தமிழில் வெளியிடுகின்றனர். இவர்களது முயற்சி வரவேற்கத் தக்கதே. பொது மக்களும் ‘வக்கீலை’ வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

உதய சூரியன்

[உதய சூரியன் : மாதம் இருமுறைப் பத்திரிகை. ஆசிரியர்: எஸ். டி. சாரி. விலாஸம். வண்ணார் பேட்டை, திருநெல்வேலி. தனிப் பிரதி விலை அணா இரண்டு]

உதய சூரியனில் கதை கட்டுரைகளுடன், அரசியல் சம்பந்தமான விஷயங்களும் இருக்கின்றன. தெய்வ பக்தி கொண்ட இப்பத்திரிகையின் ஆசிரியர் தமது முதல் இதழிலேயே ‘கடவுள் உண்டா?’ என்ற தலைப்பில் ஒரு விவாதத்தைத் தொடங்கியிருக்கிறார். சிறந்த கருத்துக்கள் தாங்கி வரும் இப்பத்திரிகைக்கு நிறைய ஆதரவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தீ

[தீ: மாதமிருமுறைப் பத்திரிகை. ஆசிரியர்: வ. சுந்தரம் விலாஸம். 13, பச்சரிசிக்காரத் தெரு 3, மதுரை. தனிப்பிரதி விலை அணா இரண்டு]

பொது உடைமையைக் கொள்கையாகக் கொண்ட அரசியல் பத்திரிகையே ‘தீ’ அரசியல் பத்திரிகை யென்றால் அரசாங்கத்தாரின் செய்கையைக் குறை கூற வேண்டாமா? அதற்கிணங்க முதல் இதழிலேயே ஆஸ்தான கவிஞர் பட்டம் கொடுக்கப் பட்டதைப் பற்றி அழகாக வாதம் செய்யப் பட்டிருக்கிறது. மற்றும் பல அரசியல் கட்டுரைகளும் கதைகளும் இருக்கின்றன.

புது வாழ்வு

[புது வாழ்வு: வாரப் பத்திரிகை. நிர்வாக ஆசிரியர்: ஈ. வே. கி. சம்பத். விலாஸம்: 34. வாணியர் தெரு, கோடம்பாக்கம், சென்னை. தனிப்பிரதி விலை அணா இரண்டு]

திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் புதுப் பத்திரிகையே புது வாழ்வு. சில முன்னேற்றக் கருத்துக்கள் இப் பத்திரிகையில் இருந்தாலும், தமது சொந்தப் புராணங்களும் இருக்கின்றன. முன்பே பல பத்திரிகைகளில் வெளி வந்துள்ள அவர்களது கட்சிப் பிணக்குகள் இதிலும் தொடர்ந்திருக்கின்றன. கழகத்தில் பற்றுள்ளவர்களுக்கு இப்புதுப் பத்திரிகை புது முறையில் வழிகாட்டும் என நம்புகிறேன்.

ஹோமியோபதி

[ஹோமியோபதி (ஜூபிலி இதழ்): ஆசிரியர்: டாக்டர் வி. ராமமூர்த்தி. விலை: ரூ. 1-0-0. கிடைக்குமிடம்: 15, ஆயிகுளம் ரோடு, கும்பகோணம்.]

கும்பகோணத்திலுள்ள, ‘இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்’ ஸ்தாபனம் ஆரம்பித்து பத்து ஆண்டுகளானதை முன்னிட்டு இந்த விசேஷ மலரை வெளியிட்டிருக்கிறார்கள். ஹோமியோபதி வைத்தியத்தின் சிறப்பையும், இந்த ஸ்தாபனம் கடந்த பத்து ஆண்டுகளாக செய்து வரும் சேவைகளையும் குறித்து கட்டுரைகள் அடங்கி யுள்ளன. தமிழ் நாடெங்கும் சேவை புரிந்து வரும் பல ஹோமியோபதி டாக்டர்களின் விலாஸங்களும், சிலரது புகைப்படங்களும் பிரசுரமாகியுள்ளன. தவிர பல வியாதிகளைப் பற்றியும், அவைகள் ஹோமியோபதி வைத்தியத்தின்மூலம் குணமாக்கப்பட்ட சந்தர்ப்பங்களையும் பற்றி ஹோமியோபதி வைத்தியர்கள் சிலர் எழுதியிருக்கிறார்கள். சில ஹோமியோபதி மருந்துகளைப் பற்றிய குறிப்புகளும் இருக்கின்றன. உபயோகமான விஷயங்கள் அடங்கிய புஸ்தகம் இது.

[ஹிந்]துஸ்தான் வனஸ்பதி கம்பெனி[யா]ர், 'டிடால்டா அட்வைஸரி சர்விஸ்' என்ற தலைப்புடன் பல ரஸமான குறிப்புகளை வெளியிட்டுள்ளனர் அவர்களது இந்த வெளியீடுகள் முழுவதும் படிப்பதற்கு மிகவும் ரஸமாக இருப்பதுடன் உபயோகமாகவும் இருக்கின்றன. குடும்பத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு பெண்மணியும் இந்த வெளியீடுகளைப் படிக்க வேண்டியது அவசியம்தான்.

ஜீவிதத்திற்கு முக்கியமாக வேண்டிய சரியான உணவு எது? உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்த சரியான வழி, உணவுப் பொருள்களிலுள்ள சத்துக்களின் அளவு, சமையலறை இருக்க வேண்டிய முறை, இப்படிப் பலவிதமான மிகப் பயன்படும் படியான விஷயங்களை இந்த வெளியீடுகளில் விரிவாகக் கூறியிருக்கிறார்கள்.

இவைகள் தவிர சாதாரணமாகக் கருதப்படும் கம்பு, சோளம் இவைகளிலுள்ள சத்துக்களையும், அவைகளைக் கொண்டு தயாரிக்கக் கூடிய உணவுப் பொருள்கள், பக்ஷணங்கள் இவைகளையும் பற்றி படித்தால் நாக்கில் ஜலம் ஊறும். இப்படி ருசிகரமாகத் தயாரிக்கும் பண்டங்களை டால்டாவில் தயாரித்தால் அவை மேலும் நேர்த்தியாக இருப்பதுடன், சிக்கனமாகவும் இருக்கும் என்பதையும் காரணங்களுடன் காட்டியிருக்கிறார்கள். இந்த வெளியீடுகளைப் படித்தால், "சபாஷ் டால்டா!" என்றுதான் கூறத் தோன்றுகிறது.

இந்த வெளியீடுகள், டிடால்டா அட்வைஸரி சர்விஸ், தபால் பெட்டி 353, பம்பாய்-1. என்ற விலாஸத்திலிருந்து வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஜீவன விநோதம்

வசுந்தரா ஏழை மாதர் விடுதி நிதிக்காக "ஜீவன விநோதம்" என்ற நாடகத்தை அதன் ஆசிரியர் ஏ வரதராஜன் வி பி ஹாலில் இம்மாதம் 2-ந் தேதி நடத்தி வைத்தார். சமூகக் கேடுகள் சிலவற்றை எடுத்துக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆசிரியர் இக்கதையைத் தயாரித்திருக்கிறார். டி. ஆர். ராஜகுமாரியின் "முதல் திரைப் படக் காதலனான" வி. டி.கண்ணபிரான் இந்த நாடகத்தில் கதாநாயகனாக நடித்தார். இவருடன் கதாநாயகியாக நடித்தவர் ஆர்.அம்புஜவல்லி என்ற புதிய நடிகை. இவர்களிருவரும் காதல் காட்சிகளில் சுமாராக நடித்தனர். ஆனால் பிற்பகுதியில் அம்புஜவல்லியின் நடிப்பும், பேச்சும் உணர்ச்சி மிக்கதாய் காணப்பட்டது. ஹாஸ்யத் தம்பதிகளாகத் தோன்றிய ... மோஹன் ஆகிய இருவரும் வெகு தமாஷாக நடித்து சபையோரின் கரகோஷங்களைப் பெற்றனர். வேலப்பாவின் ஹரிச்சந்திரா தெருக்கூத்து தமாஷாயிருந்தது. ஆனால் இந்த நாடகத்தில் அதற்கு இடமளித்தது சரியல்ல, மற்ற நடிக நடிகைகளும் சுமாராக நடித்தார்கள். இந்த நாடகத்தில் சேர்த்திருந்த பாட்டி நடனம் கேலிக் கூத்தாயிருந்தது. விளக்கு மைக் இந்த ஏற்பாடுகள் நன்றாயிருந்திருந்தால் நாடகம் மேலும்சோபித்திருக்கக் கூடும்.

வைஜயந்தி நடனம்

வசுந்தரா தேவியின் புத்திரி வைஜயந்திமாலாவின் நடனம் இம் மாதம் 13ந் தேதியன்று ரஸிக ரஞ்சனி சபாவில் நடைபெற்றது. இவர், நடனத்திற்கு மிக ஏற்ற வாட்டசாட்டமான அங்க அமைப்பையும், முக அழகையும் பெற்றிருக்கிறார். அன்றைய தினம் அவர் ஆடிய நடனம், கண்ணுக்கு ஒரு விருந்தாயிருந்தது. முக பாவங்களில் மட்டும் இன்னும் கொஞ்சம் தெளிவு ஏற்பட வேண்டுமெனத் தோன்றியது.

சௌதாமினி

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிலிம்ஸார் தாங்கள் அடுத்தபடி தயாரிக்க இருக்கும் படத்திற்கு "சௌதாமினி" என்று பெயர் வைத்திருக்கிறார்களாம். தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் மேற்படி படத்தைத்தயாரிப்பார்களென்றும்தமிழ்ப் படத்தில் கண்ணாம்பா, வரலக்ஷ்மி, டி. ஆர், ராமச்சந்திரன், நாகேந்திர ராவ் முதலியவர்கள் நடிப்பார்களென்றும் தெரிகிறது.

சுதந்திர கான சங்கீத வித்யாலயம்

சூலமங்கலம் சகோதரிகளான ஆர். ஜெயலக்ஷ்மி, ஆர். ராஜலக்ஷ்மி இவர்களின் இன்னிசைக் கச்சேரி இம் மாதம் 13ம் தேதி, சுதந்திர கான சங்கீத வித்யாலயத்தின் ஆதரவில் நடைபெற்றது.

பிரபல வைர வியாபாரி காலமானார்

பிரபல வைர, நகை வியாபார ஸ்தலமான சுரஜ்மல்ஸ் கம்பெனியின் சொந்தக்காரரான ஸ்ரீ. ஜே. லிங்லால் கே. மேத்தா சென்ற 14ந் தேதியன்று தம் 49வது வயதில் காலமான செய்திகேட்டு வருந்துகிறோம். வியாபாரத்தில் ஸ்ரீ. மேத்தா நாணயமாக நடந்துகொண்டு பொது ஜனங்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. அவரது பிரிவிற்காக மிக வருந்தும் அவரது மனைவி இரு பெண்கள், மூன்று புத்திரர்கள் ஆகியோருக்கு எம் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எம். ஜி. ராமச்சந்திரன்

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

படத்தொழிலில் ஈடுபட்டவுடனேயே ராமச்சந்திரன், "சமூகப் படங்களில்தான் நடிப்பது" என்று தீர்மானம் செய்து கொண்டார். முதல் மூன்று படங்களையும், அவற்றில் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களையும் கவனித்த பின்னர் அவர், "இந்தத் தீர்மானத்தை முதலில் பறக்க விடவேண்டும். இல்லாவிட்டால் நாமே சினிமா உலகிலிருந்து பறந்துவிடவேண்டும்" என்பதை அறிந்து கொண்டார். தம் தீர்மானத்தைக் காற்றிலும் விட்டு விட்டார் அவர்!

ராமச்சந்திரனை டைரெக்டர் ராஜா சந்திரசேகருக்கு எம். கே. ராதா அறிமுகம் செய்து வைத்தார். அந்த வேளை மிக நல்லவேளைதான்போலிருக்கிறது. அது முதல், அந்த டைரெக்டரின் பெயரில் சந்திரனும் சேகரும் இணைந்து நிற்பதுபோல் சந்திரனும் சேகரும் இணைபிரியாத நண்பர்களாகிவிட்டனர். சேகர் தயாரித்த படங்களிலெல்லாம் அநேகமாக ராமச்சந்திரன் நடித்திருப்பதற்கு இதுதான் காரணமாகுமாம்.

ராமச்சந்திரன் நடித்த அடுத்த படம் மாயா மச்சீந்திரா. இப்படத்தில் எம். ஜி. நடராஜப்பிள்ளை முதலில் நடிப்பதாயிருந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாய் அவர் இறந்து விட்டதால் அந்த வேஷம் ராமச்சந்திரனுக்குக்கிடைத்தது. இதற்கடுத்தபடி அவர் ஸெண்ட்ரல் ஸ்டுடியோ வெளியிட்ட பிரஹலாதா படத்தில் இந்திரனை நடித்தார். பின்னர் அவர் சீதா ஜனனம், அசோக் குமார் ஆகிய இரு படங்களிலும் நடித்தார். பிந்தின படத்தில் அவரது பாகம் அழகாய் அமைந்திருந்தது.

இதன் பிறகு ஸெண்ட்ரல் ஸ்டுடியோக்காரர்கள் தங்கள் சாயா படத்திற்கு அவரை ஒப்பந்தம் செய்து கொண்டு படத்தையும் ஓரளவு தயாரித்தனர். ஆனால் இப்படம் வெளிவரவேயில்லை.

பின்னர் அவர் தமிழறியும் பெருமாள், தாசிப் பெண், கண்ணம்பா நடித்த ஹரிச்சந்திரா, ஸ்ரீ முருகன் ஆகிய படங்களில் தொடர்ந்து நடித்தார். டைரெக்டர் ஏ. எஸ். ஏ. சாமி அவருக்கு தம் ராஜகுமாரி படத்தில் கதாநாயகன் வேஷத்தை அளித்தார். அதோடுகூட அவரும், கேமிராமென் கிருஷ்ணனும் அவர் விஷயத்தில் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டதால், ராமச்சந்திரனுக்கு அப்படத்தின் மூலம் நல்ல புகழ் ஏற்பட்டது. அது முதல் அவருக்கு கதாநாயகன் வேஷம் ஆரம்பமாகி விட்டது.

ராமச்சந்திரன் காளிதாஸி, மோஹினி, ஸ்வர்ணமாலா ஆகிய படங்களுக்கு கதாநாயகனாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். காளிதாஸிதான் இப்பொழுது மருதநாட்டு இளவரசியாக மாறி யிருக்கிறது. ஸ்வர்ணமாலா தயாரிப்பு தற்காலிகமாய் நிறுத்தப்பட்டிருக்கிறது. ராஜகுமாரியைப் போலவே மோஹினியும் ராமச்சந்திரனுக்கு நிறையப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது. பாகவதரின் ராஜமுக்தி படத்தில் ஒரு முக்கிய வேஷத்தில் அவர் தோன்றியிருக்கிறார். சீக்கிரமே வெளிவரவிருக்கும் ரத்னகுமார்படத்திலும் அவரைக் காணலாம். அடுத்தபடியாக ஜூபிடர் பிக்சர்ஸார் தயாரிக்க ஏற்பாடு செய்து வரும் கரிகாலன் படத்தில் நடிப்பதற்கு அவர் ஒப்பந்தமாகி யிருக்கிறார்.

படங்களில் காதலனைத் தோன்றி சந்தோஷமாக நடித்து வரும் ராமச்சந்திரனின் இல்லற வாழ்க்கை சந்தோஷமற்றதாகவே விளங்குகிறது. சீதா ஜனனம் படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது அவருக்குத் திரு

...ஊெ நக...

...சமயத்தில் அவர் ... கால மானார். மனைவி இறந்த துக்கத்தை மறக்க வேண்டும் என்பதற்காக அவரது தாயார் அவருக்கு உடனடியாய் இரண்டாம் திருமணத்தை நடத்தி வைத்தார். மனைவி இறந்த துக்கம் மறைந்தது; ஆனால், அந்த ஸ்தானத்தை வேறொரு புதிய துக்கம் பற்றிக் கொண்டது. இரண்டாம் மனைவியைக் கொடிய காசநோய் பிடித்துள்ளது.

நல்ல சிவந்த மேனியும், சுமார் ஐந்தரை அடி உயரமும், அழகிய உருவத்தோற்றமும், சாத்வீகமான குணமும், சிநேகிதர்களுடன் அன்புடன் பழகும் வழக்கமும் கொண்ட ராமச்சந்திரன் படங்களில் கதாநாயகன் வேஷத்திற்கு தாம் மிகத் தகுதியானவர் என்பதை நிரூபித்துவிட்டார். எதிர்காலத்தில் அவர் மேலும் நல்ல புகழை அடைவார் என்றே நான் எதிர்பார்க்கிறேன்.

ஹேமா விஜயா நடனம்

சென்ற வருஷம் அரங்கேறிய ஹேமா-விஜயா ஜோடி (தேக அசௌக்கியம் காரணமாக) பல மாதங்களாய் அரங்கில் தோன்றாதிருந்தனர். ரஸிகர்கள் பொறுமையிழந்து நம் 'குண்டூசி'யிடம் கேள்வி கூடக் கேட்க ஆரம்பித்து விட்டனர். இதெல்லாம், இக்குழந்தைகள் அதி அழகாக ஆடுகிறார்கள் என்றதனால் தான். இவர்களின் நடனம் சென்னை மியூஸியம் தியேட்டரில் இம்மாதம் 6-ந் தேதியன்று நடைபெற்றது அதைப் பார்த்த பின், குழந்தைகளின் ஆட்டத்தில் முன்னை விட அபிவிருத்தி ஏற்பட்டிருப்பது தெரிந்தது. அன்றைய தினம் ஹேமா ஆடிய 'தாயே யசோதா', விஜயா ஆடிய 'பதறி வருகுது', இருவருமாய் ஆடிய 'நடனம் ஆடினார்' ஆகியவை விசேஷமாகக் குறிப்பிடத் தக்கவை கோபாலகிருஷ்ணனின் பின்னணி கீதம் தரமாயிருந்தது மேடை மீது குழந்தைகள் ஆட ஆரம்பித்ததும் பின்புறமுள்ள திரை மெதுவாக விலகியதும், நடராஜ விக்ரஹம் காட்சி அளித்ததும் நூதனமாயிருந்தது. ஆனால் நடராஜரைச் சுற்றி மின்சார விளக்கை எரியச் செய்தது சபையோரின் கண்களைக் கூசச்செய்தது.

சினிமா நேசன் போட்டி 7

முதல் பரிசு	150
இரண்டாம் பரிசு	75

முடிவு தேதி 8—1—50

பக்த□□□□

□□வல்லி

என்□□□

□□□லீலா

பிர□□□

நிபந்தனைகள்

1. விடைகளை தாள்களில் எழுதி அனுப்பலாம்.
2 பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு அணா 4. (ஸ்டாம்புகளாக அனுப்பலாம்.)
3. இப் போட்டியில் இதுவரை வெளிவந்துள்ள தமிழ் சினிமாப் படங்களின் பெயர்களையே சேர்க்கப்படும்.
4. ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்து மட்டும் எழுதி நிரப்பி அனுப்ப வேண்டும். குறிப்பாக முதல் குறிப்பில் உள்ள பக்த××××என்பதற்கு 4 எழுத்துக்கள் குறைகின்றன இதுவரை வெளிவந்துள்ள படங்களின் பெயர்களை ஞாபகப்படுத்தி, 4 எழுத்துக்களை எழுதி நிரப்பி விடலாம்.
5. சீல் செய்யப்பட்டுள்ள ஆசிரியரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியாக உள்ள விடைக்கு முதல் பரிசும், ஒரு தப்புள்ள விடைக்கு இரண்டாம் பரிசும் கொடுக்கப்படும்.
6. ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் பரிசுக்குறியதாக தெரிவு செய்யப்பட்டால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
7. சரியான விடையும், பரிசு பெற்றோர் ஜாபிதாவும் ஜனவரி மாத "இந்தியன்" பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

விடைகள பிரவேசக்கட்டணம அனுப்ப வேண்டிய விலாசங்கள் :—

சினிமா நேசன் ஆபீஸ்,
தபால் பெட்டி நெ 483, கொழும்பு,
அல்லது, தபால் பெட்டி நெ. 1782,
சென்னை-1.

Nov 1949

குண்டூசி டைரி

அக்டோபர், '49

தேதி

1. பரணியின் "லைலா மஜ்னு" (தெலுங்கு) வெளியூர்களில் திரையிடப் பட்டது. மினர்வா பிக்சர்ஸின் "சித்திராங்கி" படப் பிடிப்பு வாஹினி ஸ்டூடியோவில் ஆரம்பமாயிற்று.

4. "தோட்டக்காரன்" நாடகம் மியூஸியம் தியேட்டரில் நடைபெற்றது.

9. வாஹினி பொழுதுபோக்கு சங்கத்தினரின் "வெற்றி" நாடகம் வி. பி. ஹாலில் நடைபெற்றது.

11. சென்னை கவர்னர், மதுரையில் ஜோதி சினிமா என்ற தியேட்டரை ஆரம்பித்து வைத்தார்.

20. ஜெமினி "அபூர்வ சகோதரர்கள்" படத்தின் பத்திரிகைக் காட்சி வெல்லிங்டன் டாக்கீஸில் நடைபெற்றது

21. ஜெமினியின் "அபூர்வ சகோதரர்கள்", சென்னை பிரபாத், வெல்லிங்டன் ஆகிய இரு தியேட்டர்க ளிலும் வெளியூர்களிலும் திரையிடப் பெற்றது.

ஆர்கேயெஸ் பிக்சர்ஸின் "தேவமனோஹரி" வெளியூர்களில் திரையிடப் பட்டது,

ஜெமினியின் "நிஷான்" (ஹிந்திப் படம்) பம்பாயில் திரையிடப்பட்டது.

23. ஹிந்த் கலா மந்திர் கட்டிட நிதிக்காக, டி. கே. பட்டம்மாளின் பாட்டுக் கச்சேரி, சென்னை கவர்னர் தம்பதிகள் தலைமையில் நடைபெற்றது.

28. "பிரம்மரதம்" தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி, சென்னை கெயிட்டி தியேட்டரில் நடைபெற்றது.

30. சினி டெக்னிஷ்யன்கள் சங்கத்தின் முதல் கன்வென்ஷனை, சென்னை கவர்னர் ஆரம்பித்து வைத்தார்.

சினி டெக்னிஷ்யன்கள் சங்கத்தின் ஆறுவது ஆண்டு விழா கொண்டாடப் பட்டது.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1 Edited and Published by P R S Gopal (Gundoosi), at 25 Coral Merchant Street, Madras-1. Telephone 4316

நேயர்களுக்கு ஒரு நற்செய்தி!

குண்டூசி

குடியரசு மலர்

★

இந்தியக் குடியரசு 1950ஆம் ஜனவரி மீ 26-ந் தேதி முதல் ஆரம்பமாகிறது. இந்தப் புனித வைபவத்தின் ஞாபகார்த்தமாக, குண்டூசியின் ஜனவரி மாத ஊசி விசேஷ குடியரசு மலராக வெளிவரும்.

நம் தலைவர்களின் அழகிய ஆர்ட் படங்கள், பிரமுகர்களின் விசேஷ அரசியல் கட்டுரைகள், மற்றும் பல விசேஷ அம்சங்கள், இத்துடன் குண்டூசியின் வழக்கமான அம்சங்களும், வர்ணப் படங்களும் இருக்கும். இது குறைந்த விலையில் ஒரு சிறந்த மலர்.

விலை அணா 12

தபாற் செலவு 4 அணா

[ஏஜண்டுகள் 25% கமிஷன் கழித்துக்கொண்டு முன் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.]

குண்டூசி காரியாலயம்

25 கிடங்குத் தெரு, : :சென்னை-1

THE ORGANIZING HAND
THAT Fulfils YOUR NEEDS IN PRINTING
முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்
அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அநுபவம் அவசியம். நானாவித அச்சு வேலைகளிலும், சிறந்த பிளாக்குகள் தயாரிப்பதிலும் எங்களுக்குள்ள பரந்த அநுபவத்தை உபயோகித்துக்கொண்டு, உங்கள் முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்.
EFFICIENT MANAGEMENT
EXCELLENT PRINTING
PHONE 4037
COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE..
(PRINTERS & BLOCKMAKERS)
46, ARMENIAN ST... MADRAS
murli